விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 331 ஐப்பசி 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 23 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## வவுனியாவில் வாள்வெட்டு: இளைஞர் காயம்

வவுனியா, ஒக்.23
வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். வவுனியா ஆச்சி 23

# 1.5 கோடி ரூபாவை மோசடி செய்த அதிகாரிக்கு 10 ஆண்டுகள் சிறை

### நீதிபதி இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு

திருகோணமலை, ஒக். 23
அரச பணமான ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாயை மோசடி செய்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலக முன்னாள் கணக்காளருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுத் திங்கட்கிழமை தீர்ப்பளித்தார்.
வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 15 ஆண்டுகளின் பின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலக முன்னாள் கணக்காளருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.
குற்றவாளி மோசடி செய்த தொகையின் 3 மடங்கான 5 கோடியே 22 இலட்சம் ரூபாவை நீர் வழங்கல் அதிகார சபைக்கு 25

## வீடு புகுந்து கொள்ளையடித்த நபருக்கு 2 வருட கடூழிய சிறை

யாழ்ப்பாணம், ஒக். 23
யாழ்ப்பாணம் செப்பல் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்குள்ளவர்களைத் தாக்கிவிட்டு நகை மற்றும் பணத்தைக் கொள்ளையிட்ட குற்றவாளிகளில் ஒருவருக்கு 23




## இணுவிலைக் கண்டீரா? கவனவீர்ப்பு ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஒக்.23
இணுவில் பிரதேசத்தின் சில கிராமங்களை கோண்டாவிலுடன் இணைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கவனவீர்ப்பு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. 21

## ரவி மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.23
முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகத் 23

## இந்திய மீனவர் ஆறு பேர் நேற்று நெடுந்தீவில் கைது

காரைநகர், ஒக்.23
இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் இந்திய 23

### 437 தீர்மானங்களை நிறைவேற்றிய

# விக்கியினது ஆட்சி முடிவுக்கு வருகிறது

### இன்றே இறுதி அமர்வு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 23
வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான ஆட்சியின் கடைசி அமர்வு இன்று பேரவைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. 23 ஆண்டுகளின் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை முதல் ஆட்சியின் இறுதி அமர்வாக இது இருக்கும். இந்த ஆட்சியின் காலம் நாளை புதன் கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது. 25

## போர்க் குற்றத்தை அரசு ஒப்புக்கொண்டுவிட்டது

### பதறுகின்றது பெரமுன

கொழும்பு, ஒக்.23
ஐ.நா. பாதுகாப்புப் படையில் இருந்து இலங்கையின் இராணுவ அதிகாரியை திருப்பி அழைப்பது போர்க் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் செயற்பாடாகும் என்று கடுமையாகச் சாடியுள்ளது சிறிலங்கா பொதுஜன பெரமுன. 23

## சபை இறுதி அமர்வில் ஆட்டுக்கறிச் சாப்பாடு

### பேரவைச் செயலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 23
வடக்கு மாகாண சபையின் முதலாவது ஆட்சியின் இறுதி அமர்வு இன்று நடைபெறவுள்ளது. இதையொட்டி இன்று உறுப்பினர்கள், விருந்தினர்களுக்கு மதிய போசனத்துக்கு 25

## மக்கள் பணத்தில் வாங்கியதெல்லாம் மாகாண சபை உறுப்பினர்களுக்கே!

### அவசரமாக இன்று வருகிறது தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 23
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தமது அலுவலகப் பாவனைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்த பொருள்களை திருப்பி ஒப்படைக்கத் தேவையில்லை 21

## தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது அவசியமானது

### ஜேர்மனியத் தூதுவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.23
ஜனநாயகத்தின் அம்சமான தேர்தல்கள் உரிய காலத்தில் நடைபெறுவது அவசியம். அவற்றை நடத்துவதைக் காலம் தாழ்த்தக் கூடாது.
இவ்வாறு இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் ஜோர்ன் றொக்டீ தெரிவித் 23

## புலிகளின் சின்னத்துடன் கூட்டத்துக்கு அழைப்பிதழ்

யாழ்ப்பாணம், ஒக். 23
தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிச் சின்னத்துடனான அழைப்புக் கடிதங்கள் அரசியல்வாதிகளுக்கும் அரச 22

## எதிர்வரும் 25ஆம் திகதி தமிழருக்குத் தீபாவளி!

### இப்படிக் கூறுகிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஒக்.23
கடந்த 5 ஆண்டுகளாக நரகாசூரனின் பிடியில் சிக்கித் தவித்த வடக்குத் தமிழ் மக்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி விடுதலை கிடைக்கின்றது. அன்றைய தினமே அவர்களுக்குத் 23

## அரசமைப்புச் சபை வியாழன் கூடுகிறது

கொழும்பு, ஒக்.23
அரசமைப்புச் சபை எதிர்வரும் வியாழக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது என்று நாடாளுமன்ற ஊடகச் செயலாளர் சமிந்த கமகே தெரிவித்துள்ளார். அன்று பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன 22



## 152 கிலோ கஞ்சாவுடன் கடலில் இருவர் கைது

மாதகல், ஒக்.23
மாதகல் கடற்பரப்பில் வைத்து 151 கிலோ 600 கிராம் கஞ்சாவுடன் நேற்று இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் காங்கேசன்துறைப் 23

## மறைமுகமாக ரணிலை தாக்கி மைத்திரி பேச்சு

### ஊழல், மோசடி நிறைந்த தலைவர் என விமர்சனம்



கொழும்பு, ஒக். 23
பொது வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியுடன் நான் இணைந்தபோது, டி.எஸ்.சேனநாயக்கா மற்றும் டட்லி சேனநாயக்கா வினுடைய கட்சியுடன் இணைகின்றேன் என்று நினைத்தேன். பின்னர்தான் நான் 23

## றோவை கோர்த்துவிட்டது ஐக்கிய தேசியக் கட்சியே!

### எஸ்.பி.திசாநாயக்க சாடல்

கொழும்பு, ஒக்.23
அண்மையில் வெளியான றோ தொடர்பான செய்திகள் ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்டவை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க. 22

## மாணவர்கள் கொலை விடயத்தில் சட்டரீதியாக எதையும் எதிர்பார்க்க முடியாது

### பேராசிரியர் கணேசலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சட்டரீதியான விடயத்தின் இருப்பை நாம் எதிர்ப்பார்ப்பது பயனில்லை என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் அரசியல் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாணவர்களானகஜன், சுலக்சன் ஆகியோரின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இலங்கையின் நீதித்துறை பற்றி சட்ட நுணுக்கம் தெரியாதவர்கள் எதுவும்கூறலாம். அரசுஎதைச்செய்யும் என்பதைப் படித்துத் தேர்ச்சி அடைந்தவர்கள் விளங்கிக் கொள்வார்கள். இதில் அவர்கள்எதை முதன்மைப்படுத்துவார்கள் என்பது எமக்குத் தெளிவாகத் தெரியும்.

பல்கலைக் கழக மாணவர்கள் ஒவ்வொருவரும்தமதுபாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழினத்துக்குத் தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சாபக்கேடு இவ்வாறான கொலைகள். இவ்வாறு ஏ்ராளமான மாணவர்கள்இறந்துள்ளனர். எனதுசகோதாரனைக்கூட இந்தியஇராணுவம் கொடூரமாகக் கொன்றது. எமது மாணவர்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்திஅறிவுரீதியாகமுன்னேற வேண்டும். என்றார்.

(ρ-8)

## பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் நாளை மற்றும் நாளை மறுதினம் மதியம் 1 மணிக்கு நடைபெறவிருந்த ஆங்கில இலக்கியம் பாடத்திற்கான பரீட்சைகள்தவிர்க்கமுடியாதகாரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடங்களுக்கான பரீட்சை நேர அட்டணை பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசிஇலகத்துடன்தொடர்பு கொள்ளலாம் என்றும் பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(21)

## பதவி வெற்றிடங்களை நிரப்ப ஆளுநரிடம் விண்ணப்படம்

கிளிநொச்சி, ஒக்.23

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் காவலாளாகள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் பதவி வெற்றிடங்களைநிரப்புவதற்கான நடவடிக்கைக்கு அமைச்சரவை அனுமதி இதுவரை பெறப்படாதமையால் ஆளுநரின் அனுமதிக்காகசமர்ப்பிக்கப்படவுள்ளதுஎன்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காவலாளிகள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் பதவிக்கான வெற்றிடங்கள்152 காணப்படும் இடத்தில் இதுவரை அதனை நிரப்புவதற்கு மேற்கொண்டநடவடிக்கைதொடர்பில்கேட்டபோதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதாயின் மாகாண சபையின் காலத்தில் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக இறுதிக் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில்குறித்தஅனுமதிபெறமுடியாத காரணத்தினால் அடுத்த வாரம்குறித்தஅனுமதிக்காகஆளுநரின்கவனத்திற்குகொண்டுசெல்லப்படும் . இதற்கான அனுமதி கிடைத்ததும் உரிய முறையில் இதற்கான நியமனம் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(21,105)

## தெய்வீக இசை சொற்பொழிவு

திருகோணமலை, ஒக்.23

திருகோணமலைதிரியாப்பிள்ளையார் கோவில் இன்று செவ்வாய்கிழமை பகல் 11.00 மணியளவில் தெய்வீக இசைச் செற்பொழிவு இடம்பெறவுள்ளது.

'தெய்வத்தமிழ்ச்சுடர்"இராசையா சிறிதரனின் "கணபதி கருணை" என்னும் தலைப்பிலேயே இந்த தெய்வீக இசைச் செற்பொழிவு இடம்பெறவுள்ளது என்றும் மதிய வேளை மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதான பூசை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(21)

# விக்கியின் பேச்சால் நொந்துபோன சங்கரி

யாழ்ப்பாணம், ஒக். 23

பலபிரச்சினைகளைச்சந்தித்ததமிழர்விடுதலைக்கூட்டணியை வரலாறு தெரிந்த முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் விமர்சித்திருப் பது எங்களைக் கவலை அடையச்செய்துள்ளது. தமிழ்மக்களின்தலைஎழுத்து இதுதான் என்று கூறுவதைத் தவிரவேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. இவ்வாறுதமிழர்விடுதலைக்கூட்டணியின் செயலர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர்விடுதலைக்கூட்டணியின்தலைவர்கள்அன்று செய்த தவறையே இன்றைய தமிழ் தலைவர்களும் செய்கின்றார்கள்என்றுசாரப்பட, வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்திருந்தார். இதுதொடர்பில்ஆனந்தசங்கரி, முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். முதலமைச்சருக்கு அனுப்பிய பதிலை ஆனந்தசங்கரி ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சுயநலமில்லாத தமிழ்த் தலைவர்களால்1972ஆம்ஆண்டுஉருவாக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு நாட்டின் எதிர்க்கட்சியாக கூட்டணி வரும் என்று சிங்களத் தலைமையே எதிர்பார்க்கவில்லை. தமிழர்கள் எந்தவொரு காலத்திலும் எதிர்க் கட்சியாக வரக்கூடாது என்பதற்காகத்தான் ஐ.தே.க. தலைமைவிகிதாசார முறைமையைஅறிமுகப்படுத்தியது. 1983ஆம் ஆண்டு ஆறு ஆண்டுகள் நாடாளுமன்ற பதவிக் காலம் நீடிக்கப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களும்பதவிதுறந்தார்கள். முதலமைச்சர்கூறுவதுபோல, நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்து, அரசின் நன்மதிப்பைப்பெற, அரசுக்குமுண்டுகொடுக்காமல், பதவியைச் துச்சமென தூக்கியெறிந்து விட்டு வெளியேறினோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது இலட்சியத்தை நோக்கிய தனது பயணத்தை தொடர்ந்தது. கூட்டணி எத்தனை தலைவர்களையும் தொண்டர்களையும் துப்பாக்கிக் குண்டுக ளுக்கு இரையாகக் கொடுத்தது என்பதை, முதலமைச்சர்விக்னேஸ்வரன்எப்படிமறந்தார் என்பது, எனக்குத் தெரியவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணியின்பாரம்பரியத்தையும், வரலாற்றையும் தெரிந்து கொண்டவர்கள் எம்மை விமர்சிக்க மாட்டார்கள்.

அன்றைய அரசின் நயவஞ்சகத்தனத்தைப் புரிந்து கொண்டதமிழர்விடுதலைக்கூட்டணி, இந்தியஅரசின் உதவியைநாடிஅதிகளவானஅழுத்தத்தைஇலங்கைக்கு கொடுத்தது.

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்திலேயே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள்தான் முதலில்குறிவைத்துக் கொல்லப்பட்டார்கள். கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தருமலிங்கம் மற்றும் ஆலாலசுந்தரம் போன்றோர்கள், எங்கட பொடியள் எங்களை எதுவும் செய்யமாட்டார்கள், என்று நம்பி இருந்தவேளையில் அந்த இருவரையும்ஆயுதம்தாங்கிய இளைஞர்கள்மிகவும் கொடூரமானமுறையில் சுட்டுக் கொன்றார்கள்.

எதிர்க் கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த யோகேஸ்வரன் போன்றோர் பேச்சு என்ற போர்வையில் வந்த இளைஞர்களால், நயவஞ்சகமான முறையில் கொல்லப்பட்டார்கள். கடைசி நாள்களில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சந்திரிக்கா அம்மையாரின் தீர்வுத் திட்டத்தை பாராட்டிக் கருத்துக் கூறியிருந்தார். ஆனால் அந்தத் தீர்வுத் திட்டத்தைவடிவமைத்துக்கொடுத்த, நீலன்திருச்செல்வம் கொடூரமாகக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாண மேயர்களாக இருந்த திருமதி சறோஜினி யோகேஸ்வரன் மற்றும் சிவபாலன் போன்றோரும் கொல்லப்பட்டார்க்ள். உலகின் எந்த ஒரு நாட்டிலும் ஒரு ஜனநாயகக் கட்சி, இவ்வளவு இடர்களைச் சந்தித்திருக்காது. இருந்தும் நாம் இன்றும் மக்களுக்கு ஒரு சுயநலமில்லாத, நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஒருதலைமைவேண்டும்என்றநோக்கோடுபோராடிக் கொண்டிருக்கின்றோம் என்றுள்ளது.

(5)

### வடக்கு கிழக்கில்

## 2018ஆம் ஆண்டின் நிறைவுக்குள் காணிகளை விடுவிக்க பங்களிக்குமாறு மைத்திரி பணிப்பு

கொழும்பு, ஒக்.23

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பாதுகாப்பு படையினரின்வசமுள்ளகாணிகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நடவடிக்கையினை இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய தேவையானபங்களிப்பினைவழங்குமாறுஅரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனாமாகாணஆளுநர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


2018ஆம்ஆண்டிற்கானமாகாணசபைசெயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்த கலந்துரையாடல் நேற்றுக் காலை அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்றபோதேஅவர்இந்தபணிப்புரையைவிடுத்துள்ளார்என்றுஅரசதலைவரின்ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில், மாகாணசபைகளின்நிதிமற்றும் பௌதீக முன்னேற்றங்கள் வெற்றிடங்களை முழுமைப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகஇதன்போதுகலந்துரையாடப்பட்டன. கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு அரச தலைவர் இதன்போது மாகாண முதலமைச்சர்களுக்கு பணிப்புரைவிடுத்தார். வறுமையை இல்லாதொழிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முதன்மை செயற்திட்டமான கிராமசக்தி தேசிய செயற்திட்டத்தின் குறிக்கோள்களைஉரியவாறுநிறைவுசெய்யசகலரும் அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டியதன்முக்கியத்துவத்தையும் அரசதலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார். 2ஆயிரத்து400குளங்களைச்சீரமைக்கும்செயற்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அப்பிரதேச மக்களின் காணிக்கான உரிமையை உறுதிசெய்துமுதன்முறையாகஅவர்களுக்குநிரந்தரக் காணி உறுதியினை வழங்குவதற்கும் வீடமைப்புத் திட்டத்தினைவினைத்திறனானமுறையில்செயற்படுத்துவதற்கும்அரசதலைவர்வழங்கும்பங்களிப்புதொடர்பில் பெருந்தோட்ட மக்களின் சார்பாக அமைச்சர் பி.திகாம்பரம் நன்றி தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடல்சகல மாகாணங்களினதும் ஆளுநர்கள், முதலமைச்சர்கள் மற்றும் முதன்மைச் செயலாளர்கள் உள்ளிட்டோர்பங்குபற்றினர்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

(21)

## விபத்தில் இருவர்காயம்



வவுனியா, ஒக்.23

வவுனியாதாண்டிக்குளம்பகுதியில்சாரதிப்பயிற்சிவழங்கும் முச்சக்கர வண்டியும், மகிழுந்தும் மோதி விபத்திற்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். நொச்சிமோட்டையில் இரு ந்து தாண்டிக்குளம் நோக்கிச் சென்ற சாரதி பயிற்சி நிறுவனம்ஒன்றுக்குச்சொந்தமான முச்சக்கரவண்டியும் வவுனியா நகரில் இருந்து வந்த மகிழுந்துமே தாண்டிகுளம் பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. விபத்தில் முச்சக்கரவண்டியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பூனாவையைச் சேர்ந்த பிரேமவங்ச (வயது40), இரங்க (வயது24) ஆகிய இருவரும்காயமடைந்தனர். விபத்துத்தொடர்பான மேலதிகவிசாரணைகளை வவுனியா போலிஸார் மேற்கொண்டனர்.

(21,110)

# இயற்கைஎரிவாயுகண்டறியும் ஆய்வுகள்மன்னாரில்ஆரம்பம்

## அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 23

மன்னார்கடற்பரப்பில்இயற்கைஎரிவாயுவளத்தைக்கண்டறிவதற்கானஆய்வுப்பணிகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளனஎன்றுபெற்றோலிய வங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பெற்றோலிய வளங்கள் அமைச்சில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது இந்தஆய்வுப்பணிகளைடீ.ஜீ.பி. பயணியர்கப்பலேமேற்கொள்கின்றது. இந்த ஆய்வுக் கப்பல் தனது முதலாவது ஆய்வை மார்ச் மாதம் 30ஆம்திகதிமுதல்தற்போதுவரை லங்கா பேசின் பகுதிகளான ஜே.எஸ் 5 வலயத்தில் இருந்து ஜே.எஸ் 6 வலயம் வரை மேற்கொண்டுள்ளது. இன்று (நேற்று) இந்த ஆய்வுக் கப்பல் மன்னார் கடற்பரப்பை அடைந்துள்ளது. இந்தப் பகுதிகளில் முழுமையான ஆய்வை மேற்கொள்ள மூன்று வாரங்கள் ஆகும்.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் மூலமாக இந்தஆய்வுப்பணிகள்மேற்கொள்ளப்படுகின்றன. மன்னார், காவேரி மற்றும் லங்கா ஆகிய மூன்று பகுதிகளில் இந்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எரிவாயு மற்றும் எரிபொருள் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும் டோடல் என்ற நிறுவனத்துடன் இலங்கை அரசு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது. தற்போது ஸ்டலம்பர் என்ற நிறுவனத்துடனும் புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய எமக்கு எரிபொருள் ஆய்வு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் 35 வருடங்களுக்குப் பின்னர் கவேரிப் பகுதியில் தரவுகளை பெற்றுள்ளோம். இந்தஆய்வுகளைஸ்டலம்பர் நிறுவனம் மேற்கொண்டாலும் அதன் தரவுகள் அனைத்தும் இலங்கைஅரசுக்கேசொந்தமானதாகும். இந்த தகவல்களை விற்பனைசெய்வதன்மூலம்அரசுக்கு இலாபம் ஏற்படும் - என்றார். (ற)

# வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்பு



கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சிஅம்பாள்குளம் பகுதியில் தனியார் குடியிருக்கும் விவசாய காணியில் கைக்குண்டுகள் இரண்டு அடையாளம் காணப்பட்டு அகற்றும் நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் விவசாயக் காணியைத் துப்பரவு செய்யும்போது குண்டுகள் வெடிக்காத நிலையில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

கைக்குண்டுகளைஅகற்றநீதிமன்றின் அனுமதி கிடைத்த நிலையில் கைக்குண்டுகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சிப்பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

மேலும் வெடிபொருள்கள் உள்ளனவாஎன்பதுதொடர்பிலும்பொலிஸார்நீதிமன்றின்கண்காணிப்பில் சோதனையிட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

# துப்பாக்கித் தோட்டாக்கள் மீட்பு

வவுனியா, ஒக். 23

வவுனியா, கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னங்குளத்தில் கைக்குண்டு மற்றும் துப்பாக்கி மகசின், தோட்டாக்கள் என்பன நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

பொதுமக்களால் பொலிஸாராருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய பொலிஸார் சம்பவ இடத்துக்குச்சென்றுஅவற்றைமீட்பதற்கானநடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-110)

# இரட்டை பெரியகுளத்தில் விபத்து நான்குபெண்கள் படுகாயம்



வவுனியா, ஒக். 23

வவுனியா இரட்டை பெரியகுளம் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பெண்கள் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துதொடர்பாக மேலும் தெரியவருகையில் கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிவந்த கயஸ் ரக வாகனம், இரட்டைப் பெரியகுளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில்சென்றுகொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்துள்ளது.

கயஸ்வாகனம் மோதியதில் வீதி ஓரத்தில் நின்றிருந்த உந்துருளி ஒன்றும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. கயஸ்வாகனத்தின் முன்பக்கச்சக்கரம்வெடித்தமையினாலேயேகுறித்தவிபத்துஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விபத்துதொடர்பாக இரட்டைபெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (110)

# அரச அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 23

வடமாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும்இணைந்தசேவைகள்அலுவலர்களுக்கானவருடாந்தஇடமாற்றப் பட்டியல் மாகாண பிரதி பிரதம செயலர் செயலகத்தினால் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் உள்ள அமைச்சுக்கள் திணைக்ளங்கள் மற்றும் ஐந்துமாவட்டத்திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தொழில்நுட்பஅலுவலர்கள், சாரதிகள், மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகிய பதவிகளில் ஒரு அலுவலகத்தில் ஐந்து வருடங்களுக்குமேல்கடமையாற்றிய 470 அலுவலர்கள்இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 175 அபிவிருத்தி அலுவலர்களும், 207 முகாமைத்துவ உதவியாளர்களும், 21 தொழில்நுட்ப அலுவலர்களும், 29 சாரதிகளும், 38 அலுவலகப் பணியாளர்களும்இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்எனவும்அறிவித்துள்ளனர்.

இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் தமது மேன்முறையீட்டினை உடனடியாகத் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளனர். (9159)

# முல்லைத்தீவில் மர நடுகை

முல்லைத்தீவு, ஒக். 23

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 'வன ரோப்பா' 2018 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் மரம் நடுகைத் திட்டம் நேற்றுத் தொடக்கிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி அரச தலைவரால் மன்னாரில் தொடக்கிவைக்கப்பட்டுள்ள திட்டத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மரம் நடுகை நிகழ்வு மாவட்ட செயலத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு நந்திக்கடல் வெளிப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

இந்த மரம் நடுகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு தொடக்கிவைத்துள்ளார்.

அரச துறைசார் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தனர் (ரி3)




# நடமாடும் நூலக சேவை



சாவகச்சேரி, ஒக். 23

சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்ப மாதத்தை முன்னிட்டுசாவகச்சேரிநகரப்பகுதியில் உள்ள 3 கல்லூரிகளில் நேற்று விழிப்புணர்வு நடமாடும் நூலக சேவையினை நடத்தினர்.

சாவகச்சேரிமகளிர்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ஆகிய கல்லூரிகளில் மாணவர்களுக்கு நூலகப் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நடமாடும் சேவை நடத்தப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (9)



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிவலிங்கத்துக்கு குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஒக் 23

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள சிறி ஞான லிங்க பெருமானின் குடமுழுக்கு நேற்று சிறப்பாக நடைபெற்றது. நேற்று முன்தினம் 3 மணிக்கு எண்ணெய்க் காப்புடன் கிரியைகள் ஆரம்பமாகியது. நேற்று காலை காலை 9. 5 மணிக்கு குடமுழுக்கு நடைபெற்றது. இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், எனப் பலர் கலந்துகொண்டனர். (7)

## வாணி விழாக்கள்

### காரைநகர் அபிவிருத்திச் சபை



காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத்தின் வாணி விழாவும் மாணவர் மதிப்புறுத்தல் நிகழ்வும் கடந்தசெவ்வாய்க்கிழமைகாலை10மணிக்குமாணவர் நூலகத்தில் காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவரும் வடமாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலருமான ப. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றன.

### ஓலுமடுதமிழ்மகாவித்தியாலயம்



ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் வாணி விழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

### சுன்னாகம் பொது நூலகம்



வலிகாமம்தெற்குப்பிரதேசசபையின்சுன்னாகம்பொது நூலகத்தின் வாணிவிழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. (ம-250,35)

# அபிவிருத்தி, உரிமை இரண்டும் தமிழ் அரசுக்கட்சியின் இலக்குகள்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கருத்து

**யாழ்ப்பாணம், ஒக். 23**

**தமிழ்மக்களின் அரசியல் உரிமை, அபிவிருத்தி இரண்டையும் இலக்குவைத்துத் தான் தமிழ் அரசுக் கட்சி செயற்பட்டுவருகிறதுஎன்றுதெரிவித்தார்நாடாளுமன்றஉறுப்பினர் ஈ.சரவணபவன்.**



முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மதிப்புறுத்தல் நிகழ்வு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் மாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில்விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சரவணபவன்இவ்வாறுதெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

எமது செயற்பாடுகளில் அரசியல் உரிமைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள அதேவேளை அபிவிருத்திப் பணிகளையும்சமாந்தரமாகமுன்னெடுத்து வருகின்றோம். உரிமைப் போராட்டங்களுடன் எமது பிரதே சத்தில் பல்வேறு அபிவிருத்திகளையும் வாழ்வாதார உதவிகளையும் தமிழ் அரசுக்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள்ஆகியோர்மேற்கொண்டுவருகின்றனர். அரசியல், அபிவிருத்திஆகியவற்றுக்காகதமிழ் அரசுக்கட்சியின் உறுப்பினர்கள் இரவு, பகல் பாராது தொடர்ச்சியாகப் பல கூட்டங்களில் பங்குபற்றி வருகின்றனர். நாங்கள் பங்குபற்றும் கூட்டங்களின் பெறுபேறுகள் விரைவில் மக்களுக்குத் தெரியவரும்.

தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி வடக்கு, கிழக்கில் பலப்படுத்தப் பட்டுவருகிறது. வடக்குமாகாணத்தில் எமது இளைஞர் அணியைப் பலப்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும். வேறு கட்சிகள் இளைஞர்களை பிழையான வழியில் திசைதிருப்பப் பார்க்கின்றன. அதற்கு இடம்கொடுக்காது தமிழ் அரசுக் கட்சியின் அடித்தளமாக இளைஞர்கள் செயற்பட முன்வர வேண்டும் - என்றார். (ம-173)

## க.பொ.த.சா.த. மாணவர்களுக்கான
# அழகியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நாளைமறுதினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 23

2018ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரமாணவர்களுக்கான அழகியல் பாடங்களுக்கான செயன் முறைப் பரீட்சைகள் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளன என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம்அறிவித்தது. 2018ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில் அழகியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நாளைமறுதினம் 25ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டு அடுத்த மாதம் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. மேலைத்தேயசங்கீதத்துக்கான செயன் முறைப்பரீட்சைகள்கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகின. கீழைத்தேயமற்றும் கர்நாடக சங்கீதம், சுதேச மற்றும் பரத நடனம், நாடகமும்அரங்கியலும்பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளே நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளன. (ம-7)

## விபத்தைத் தடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

அச்சுவேலியிலிருந்து பண்டத்தரிப்பு ஊடாக அராலி செல்லும் முதன்மை வீதியில் வலியடைப்பை அண்டிய பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் விபத்துக்களைத் தடுப்பதற்கு வசதியாக வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த.குமணன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரைக் கோரியுள்ளார்.

மேற்படி வீதியில் இடம் பெற்றுவரும்விபத்துக்கள் சம்பந்தமாக முன்னாள் உறுப்பினர் மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலி. தென்மேற்கு பிரதேசப் பிரிவுக்குட்பட்ட வலியடைப்பு முதன்மை வீதியில் அண்மைக்காலமாக பல வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன் உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளன. வீதி விபத்து ஏற்படும் இடப் பகுதி மதகுடன் கூடியதாக வளைவான வீதியாக இருப்பதனாலும் இரண்டு பக்கங்களிலும் இருந்து வரும் வாகனங்களின் சாரதிகள் எதிர்த் தரப்பை அவதானித்து வாகனத்தை செலுத்தக் கூடியதாக வீதி அமைப்பு முறை இல்லாமல் இருப்பதாலும் வீதி விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதற்கு இந்த வீதி வழிவகுத்து நிற்கின்றது. எனவே தாங்கள் இந்த வீதியை நேரில் பார்வையிட்டு இதற்கு ஏற்புடைய தர்ன ஒழுங்குகளை செய்துதவ வேண்டும் - என் றுள்ளது. (ம-115)

## மாட்சி விதப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 23

கலைஞர்வேல் ஆனந்தனின் ஆடற்கலைவாழ்வின் மாட்சி விதப்பு விழா, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ளது. கலாநிதி கிருஷாந்தி ரவீந்திரா தலைமையில் காலை 9.30 மணிமுதல் இந்த விழா நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக நாட்டியசிரோன்மணி ஆர்.முரளிதரன் கலந்து கொள்கிறார். மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தமிழ்துறையின் முன்னாள்தலைவர் சி.சிவலிங்கராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் சாந்தினி சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## மானிய அடிப்படையில் உரங்கள்

சாவகச்சேரி, ஒக். 23

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்பின் உறுப்பினர்களுக்கு நாளைமறுதினம் வியாழக்கிழமை மானிய அடிப்படையில் உரங்கள் வழங்கப்படவுள்ளன. கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் காலை 9 மணி முதல் உர வகைகள் வழங்கப்படவுள்ளன. அமைப்பின் உறுப்பினர்கள் அன்றைய தினம் தமக்குரிய உர வகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் வி.சதானந்தன் அறிவித்தார். (ம-9)

## கந்தபுராண விரிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 23

வாரந்தோறும்செவ்வாய்க்கிழமைகளில்கந்தபுராணவிரிவுரைகள்மாலை6.30மணிமுதல்இரவு7.30மணிவரை சின்மயாமிஷன்ஞானவேல்ஆச்சிரமத்தில்நடைபெறவுள்ளன. இன்று 'உடன்கட்டை ஏறல்' என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள்ளது. (ம)

## பரிசில்நாள் நிகழ்வு

கொடிகாமம் ஒக்20

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசில்நாள் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் பொ. நடேசலிங்கம் தலைமையில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி கலந்து கொள்கிறார். விருந்தினராகச்சாவகச்சேரிஇந்துஆரம்பப்பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி கலந்து கொள்ளவுள்ளார். (ம-159)

## ஆன்மிகச் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஒக்.23

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக இன்று செவ்வாய்க்கிழமை மாங்குளம், ஒலுமடு, மம்மி பிள்ளையார் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். சுமார்40முதியவர்கள்அவ்வாறுஆன்மிகச்சுற்றுலாவுக்காக அழைத்துச்செல்லப்படுகின்றனர்என்றுஇல்லஅத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (ம-17)



அளவெட்டிதெற்கு அ.மி.த.க. பாடசாலையில்சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. (ம-35)



## ஒளிப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 23
சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பின் ஏற்பாட்டில் ஒளிப்படக் கண்காட்சி யாழ்ப்பாணம் கலைத்தூது கலா முற்றத்தில் நேற்று ஆரம்பமானது. இரண்டாம் நாளாக இன்று செவ்வாய்க்கிழமையும் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.
இந்த ஒளிப்படக் கண்காட்சியில் 216 ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த அமைப்பால் இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஒளிப்படமெடுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. கடந்த ஐந்து வருடங்களில் நாடு முழுவதும் உள்ள 14 கிராமங்களுக்கு இளைஞர், யுவதிகள் நூறுக்கும் அதிகமானவர்கள் சென்று எடுத்த ஒளிப்படங்களே அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன. (ம-7)

### தரம் ஐந்து மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சையை விரைவில் கைவிட வேண்டும்

## சுமந்திரன் எம்.பி.வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 23

**மாணவர்களுக்கு சிறு பராயத்தில் மன அழுத்தத்தைக் கொடுக்கும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையை விரைவில் கைவிட வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.**

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்று மாணவர்களுக்கு உள்ள மன அழுத்தம் மிகமோசமானது. 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய போட்டி உச்சமாக இருக்கிறது. இந்தப் பரீட்சை மாணவர்களுக்கு சிறிய பராயத்திலேயே தாங்க முடியாத மன அழுத்தத்தைக் கொடுக்கிறது. இந்தப் பரீட்சை விரைவில் கைவிடப்பட வேண்டும். 10 வயதில் இத்தகைய பெரிய அழுத்தங்



களை மாணவர்களின் தலைகளில் சுமத்துதல் கூடாது. 80 புள்ளிகளை இரண்டு பாடங்களிலும் பெற்ற மாணவன் சித்தியடையவில்லை. இது என்ன அநியாயம். இந்த வருட புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் 160க்கும் அதிகம். சராசரியாக 100க்கு 80 புள்ளிகளை எடுத்த மாணவன்கூட இந்த வருட வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் 'புலமைப் பரிசிலுக்குத் தகுதி பெறவில்லை. ஆகையால் இவ்வாறானதொரு பரீட்சையே தேவையில்லை. மாணவர்கள் தோல்வியடையாதவாறு பரீட்சைகள் அமைய வேண்டும். மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் மிளிர வழி செய்யப்பட வேண்டும்.
ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பதிலாக அல்லது மாற்றீடாக ஒரு பரீட்சைக்கான யோசனையை முன்வையுங்கள். நீங்கள் முன்வைக்கும் யோசனையை நாம் ஆராய வாய்ப்புக்கள் உள்ளன. மாணவர்களை ஊக்கிவிக்கும் விதத்தில் இந்த யோசனை அமைய வேண்டும் - என்றார். (ம-173)



தெல்லிப்பழை பிரதேச செயலக வயல் விழா மாவிட்டபுரம் தெற்கு வயல்பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. அங்கு அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட குரக்கன் பயிர்களை பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறுவடைசெய்து விழாவை ஆரம்பித்து வைத்தார். (ம-9)

### மாணவர்களுக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் லண்டன் கிளையினர் கல்லூரியில் கற்கும், பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான ஒக்டோபர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகளை நாளைமறுதினம் பி.ப. 1.30 மணிக்கு வழங்கவுள்ளனர். 20 மாணவர்களுக்கு அவ்வாறு உதவித்தொகைகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-159,9)

### காரைநகர்– ஊர்காவற்துறை கடற்பாதை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 23
காரைநகருக்கும் ஊர்காவற்துறைக்கும் இடையிலான கடற்பாதை சேவை மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திருத்த வேலைகள் காரணமாக சில நாள்கள் மூடப்பட்டிருந்த இந்தக் கடற்பாதை, திருத்த வேலைகள் யாவும் முடிவடைந்ததைத் தொடர்ந்து தற்போது மீண்டும் பாவனைக்கு விடப்பட்டது.
அதேசமயம் நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவான் துறைக்கும் இடையில் மீண்டும் குமுதினிப் படகின் சேவை யும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குமுதினிப் படகு திடீரென பழுதடைந்ததால் அதன் சேவை பாதிக்கப்பட்டது. தற்போது படகு திருத்தப்பட்டதை அடுத்து மீண்டும் பணிகள் ஆம்பிக்கப்பட்டன. (ம-17)

### இந்த ஆண்டின் இறுதிக்குள் கல்வியங்காடு பொதுச்சந்தை பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 23
புதிதாக அமைக்கப்பட்டு வரும் கல்வியங்காடு பொதுச் சந்தையை இந்த ஆண்டு இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
சந்தைக்கான கட்டுமானப் பணிகள் யாவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கட்டட ஒப்பந்தகாரரைக் கேட்டுள்ளதையடுத்தே இந்த வருடத்தின் இறுதிப் பகுதிக்குள் கல்விங்காடு பொதுச்சந்தை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படும் என்று கருதப்படுகிறது.
கல்வியங்காடு பொதுச் சந்தை தற்போது ஆடியபாதம் வீதியில் உள்ள தனியார் காணியில் தற்காலிகமாகச் செயற்பட்டு வருகின்றது. இடநெருக்கடியால் வர்த்தகர்களும், வாடிக்கையாளர்களும் தற்போது பெரும் சிரமப்படுகின்றனர் என்று பலமுறை முறைப்பாடு தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



வலி வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கத் திட்டமிட்ட வாழ்வாதார உதவிப் பொருள்கள் தெல்லிப்பழைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான உதவிப்பொருள்களை வழங்கினார். (ம-9)

### கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23
உரும்பிராய் ஒஸ்கா வீதியில் உள்ள கிணறொன்றில் இருந்து முதியவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. மதுபோதையில் கிணற்றுக்குள் வீழ்ந்ததால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.
உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த இராசையா தயாபரசிங்கம் (வயது 63) என்ற முதியவரே அவ்வாறு இறந்துள்ளார். முதியவர் மது அருந்தி போதையில் ஒஸ்கா வீதியில் கடந்த சனிக்கிழமை மாலை விழுந்து கிடந்துள்ளார். இதனை அவதானித்த சிலர் அவரை எழுப்பி தெரு ஓரத்தில் விட்டனர். பின்னர் தனது சைக்கிளை எடுத்து கொண்டு கிணற்றுக்கு அருகில் இருந்துள்ளார். மறுநாள் காலை கிணற்றுக்கு அருகில் துவிச்சக்கர வண்டி ஒன்று இருப்பதை அவதானித்த அயலவர்கள் கிணற்றைப் பார்த்தபோது முதியவரொருவர் சடலமாக இருப்பதை அவதானித்ததை அடுத்து அவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு உடல்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. (ம-7,8)

## யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதியினுடைய வர்த்தக நடவடிக்கைகள் இரவு 9 மணிவரை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23
யாழ்ப்பாண நகரின் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் உள்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் வசதிக்காக கட்டடத் தொகுதி இரவு ஒன்பது மணிவரைக்கும் திறந்து இருக்கும் என்றும் சனிக்கிழமையில் இந்தக் கட்டடத் தொகுதி இரவு 9.30 மணி வரைக்கும் திறந்திருக்கும் என்றும் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் கதவுகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் இரவு 9 மணிக்கு முன்பாக மூடப்படுகின்றன.
இதன் காரணத்தால் நவீன சந்தையின் உட்புறத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இதையடுத்தே இரவு 9 மணிவரை கட்டடத் தொகுதியைத் திறந்திருப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் இந்தக் கட்டடத் தொகுதியில் உள்ள மலசலகூடங்களின் சீரமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் நிறைவுற்றதும் கட்டடத் தொகுதியை தொடர்ந்து 24 மணிநேரமும் திறந்து விடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதி முதல்வர் து.ஈசன் மேலும் தெரிவித்தார். (ம-17)

# உழுந்துச் செய்கையில் ஈடுபட முன்வாருங்கள்

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் அழைப்பு

**வவுனியா,ஒக் .23**

**இலங்கையின் உள்நாட்டு உழுந்து உற்பத்தியினை ஊக்குவித்து வெளிநாட்டு உழுந்து இறக்குமதியினைக் குறைத்து உள்நாட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், விவசாய அமைச்சினால் கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்ததான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

வவுனியா மாவட்டத்தினை சிறப்பு உழுந்துவலயமாகப் பிரகடனப்படுத்தி, 16 ஆயிரம் ஏக்கரில் உழுந்து உற்பத்தி வேலைத்திட்டம் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனின் வேண்டுகோளின்படி விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரது பங்களிப்புடன் கடந்த 5 ஆம் திகதி வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் வடக்கின் விவசாய துரித மீளெழுச்சி திட்டத்தின் கீழ் வவுனியா கமக்காரருக்காக உழுந்து விதை வழங்கல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் கருத்து தெரிவிக்கும் போது: விவசாய அமைச்சின் திட்டம் 28 மில்லியனுக்கு மேற்பட்ட செலவில் மேற்கொள்ளப்படுகின்றது.

விவசாய திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உழுந்து விதைகள் தற்போது கமநல சேவைகள் நிலையங்களுக்கு தருவிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தரமான உழுந்து கிலோ 360 ரூபா. ஆனால் 50 வீத மானிய விலையில் விவசாயிகள் ரூபா 180 செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

அதே போன்று விவசாயத் திணைக்களத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தரமான உழுந்து கிலோ 350 ரூபா. ஆகும். 50 வீத மானிய விலையில் விவசாயிகள் ரூபாய் 175 ஐ செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

எனினும் விவசாயிகள் விதை உழுந்தினைப் பெற்றுக்கொள்ளும் வீதம் குறைவாக உள்ளதுடன், தனிநபர்களிடம் குறைந்த விலையில் பெற முடியும் என்ற கருத்து ஒன்றும் நிலவுகின்றது. உண்மையில் விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் தரமானவை என்பதுடன் முளைதிறன் மிக அதிகமானவையுமாகும்.

வவுனியா மாவட்டத்தின் விவசாயிகள் உழுந்து வேலைத்திட்டத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து இவ் வேலைத்திட்டத்தில் பங்குபற்றி நன்மைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உழுந்து பயிர்ச்செய்கை ஏக்கரளவை அடிப்படையாகக் கொண்டு சுங்க திணைக்களத்தினால் உழுந்து இறக்குமதி மீது வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இதனால் இங்கு உற்பத்தியாகும் உழுந்திற்கு நியாயமான விலை கிடைக்கும். எனவும் தெரிவித்தார்.

எனவே உழுந்து பயிரிட விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி கமக்கார அமைப்புகளின் உறுதிப்படுத்தலுடன் 50 வீத பணத்தினைச் செலுத்தி கமநல சேவைகள் நிலையங்களில் உடனேயே விதை உழுந்தினை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான ஒப்பந்தத்தினையும் உடனேயே கைச்சாத்திட முடியும். உழுந்திற்கான பயிர்க்காப்புறுதியினை விரும்பியவர்கள் 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டிற்காக ஏக்கருக்கு 3 ஆயிரத்து 600 ரூபாவினை செலுத்திக் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினூடாகவோ அல்லது ரூபா 20 ஆயிரம் இழப்பீட்டிற்காக ஏக்கருக்கு ஆயிரத்து 450 ரூபாவினைச் செலுத்தி சனச காப்புறுதியிலோ மேற்கொள்ள முடியும்.

மேலும் மாகாண விவசாய விரிவாக்கல் திணைக்களத்தினை தொடர்பு கொண்டு (024 222 2324) உழுந்து பயிரிடும் இயந்திரத்தின் மூலம் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு வவுனியாவின் குறிப்பிட்ட கமநல சேவைகள் நிலையங்களை தொடர்பு கொள்ளவும். கோவில்க்குளம் 0242221053, செட்டிக்குளம் 0242260051, உளுக்குளம் 0243245723, மடுக்கந்தை 0242053254, ஓமந்தை 0242052722, பம்பைமடு 0245673254, கனகராயன்குளம் 0242051360, நெடுங்கேணி 0242053015. மாவட்ட அலுவலகத்தின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் 0242222362, பிரச்சினைகள் ஏதும் இருப்பின் மாவட்ட உதவி ஆணையாளரான இ.விஜிய குமாரை(0778317443 ) தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது . (110)



### வவுனியா கோவில்குளத்தில் சிறுவர் - முதியோர் தின நிகழ்வுகள்

வவுனியா,ஒக்.23

வவுனியா கோவில்க்குளத்தில் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் கிராம அலுவலர் பி.பத்மரஞ்சன் தலைமையில் கோவில்குளம் கிராம அலுவலரின் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா நகரசபை உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் கலந்துகொண்டிருந்தார்.

வவுனியா கோவில்குளத்தில் நூறு வயதையும் கடந்து வாழ்ந்து வரும் வயோதிபத் தாயராகிய சண்முகம் மீனாட்சி சிறப்பாக மதிப்பளிக்கப்பட்டார் .

இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர் ரி.கே.இராஜலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வை.பாலச்சந்திரன், சமுதாய பொலிஸ் பொறுப்பதிகாரி சி.எம்.அரவிந்த, கிராம அலுவலர் எம்.செல்வராசா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (110)

### கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு .ஒக் .23

முல்லைத்தீவு மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் இயங்கி வரும் "கற்பகா" அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 30 மாணவர்களுக்கு லண்டனில் வசித்து வரும் வடிவேலு சிறிதரன் இணையரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. (222)



### இளையோருக்கானகருத்தமர்வு

முல்லைத்தீவு,ஒக் .23

முல்லைத்தீவு பங்கில் அமைந்துள்ள தீர்த்தக்கரை புனித வேளாங்கன்னி ஆலய இளையோருக்கான கருத்தமர்வு 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் தலைமையில் நடைபெற்றது. (222)



### ஈருருளி வழங்கல்

புதுக்குடியிருப்பு .ஒக் .22

கற்றல் செயற்பாட்டில் முதல்தர மாணவியான .தரம் 11 ல் கல்வி கற்கும் பாரதி மகாவித்தியாலய மாணவி நகுலேஸ்வரன் அலைக்சனா தேராவில் கிராமத்திலிருந்து பாடசாலைக்கும், மேலதிக வகுப்பிற்கும் செல்வதற்கு போக்குவரத்து நெருக்கடிகளை சந்திப்பதால் கடந்த 16 ஆம் திகதி வடமாகண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனால் ஈருருளி ஒன்று வழங்கப்பட்டது. (222)



### வவுனியா நகரசபை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப்போட்டிகள்

வவுனியா.ஒக் .23

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியா பொது நூலகத்தால் வாசகர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக, வாசகர்களுக்கான நிறந்தீட்டல், குறுக்கெழுத்து, கவிதை, சிறுகதை, போட்டிகள் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

வாசகர்களிடமிருந்து போட்டியில் பங்கு பற்றுவதற்கு தரமான ஆக்கங்களை வழங்கிப் பரிசில்களை வெல்லுமாறு வவுனியா நகரசபை பொது நூலகர் தெரிவித்துள்ளார்.

போட்டி பின்வரும் வயது மட்டங்களின் அடிப்படையில் இடம்பெறவுள்ளது. 4 வயது முதல் 6 வயது சிறுவர்களுக்கான நிறந்தீட்டல்போட்டி, 7 வயது முதல் 8 வயதுடைய சிறுவர்களுக்கான நிறந்தீட்டல் போட்டி, 9 வ்யது முதல் 11 வயதுவரை சிறுவர்களுக்கு குறுக்கெழுத்துப்போட்டி, 12 வயது முதல் 14 வயதுவரையான சிறுவர்களுக்கு குறுக்கெழுத்துப் போட்டி 15 வயது முதல் 18வயது வரையான சிறுவர்களுக்கு கவிதைப் போட்டி மரபுக்கவிதையாக இருந்தால் 20 வரிகளுக்கு குறையாமலும், புதுக்கவிதையாக இருந்தால் 40 வரிகளுக்கு குறையாமலும் இருக்க வேண்டும் தலைப்பு வாசிப்பு, சமூக ஒற்றுமை, 18 வயதிற்கு மேற்பட்டோருக்கான சிறுகதைப்போட்டி தலைப்பு சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் வாசிப்பு, 500 சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

குறிப்பு நிபந்தனை: நிறந்தீட்டலுக்காக சோக்கலர் மட்டும் பயன்படுத்த வேண்டும் போட்டி இம்மாதம் 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நூலக சிறுவர் பகுதியில் இடம்பெறும்.

குறுக்கெழுத்துப்போட்டி 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நூலக உசாத்துணைப்பகுதியில் இடம்பெறும்.

கவிதை, சிறுகதை, ஆக்கமானது ஏ 4 தாளில் தெளிவான கையெழுத்தில், கணனியில் பதிவு செய்து ஒப்படைத்தல்வேண்டும்.

தங்களது ஆக்கங்கள் அனைத்தையும் வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் நூலகரிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதை வாசகர்களுக்கு அறிவித்துள்ளனர்.

### நூல்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு .ஒக் 23

தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் தனது மகள் ஆர்த்தனாவின் 16 வது பிறந்த தினத்தை முன்னிட்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூலான "ஞானோதயம்" நூல்களை 21 மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (222)



# வெடுக்குநாறி மலையில் ஏணி பொருத்துவதில் சிக்கல்

## அறுந்துவிழும் நிலையில் பழைய ஏணி

**வவுனியா,ஒக் .23**

**வவுனியா மாவட்டம் நெடுங்கேணிப் பகுதியில் வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் ஏணி அறுத்து விழும் நிலையில் உள்ளமையால், ஆலய நிர்வாகத்தினால் அமைக்கப்பட்ட ஏணியைப் பொலிஸார் தடுத்த நிலையிலும் ஏணி தயாரிப்புப் பணிகள் முடிவுற்றுள்ளது. ஆயினும் ஏணியைப் பொருத்தமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.**



பூசை வழிபாடுகளைத் தடை செய்த தொல்பொருள் திணைக்களத்தினர், அப் பகுதியில் புத்த கோயிலை அமைக்க முயன்ற குழுவினருக்கு ஆதரவு வழங்க முற்பட்டபோது மக்களும் ஆலய நிர்வாகமும் இணைந்து தடுத்த விடயம் தொடர்பில் பொலிஸார் ஆலய நிர்வாகத்தை அழைத்து அப்பகுதிக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறியதனால், மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து மீண்டும் வழிபட அனுமதிக்கப்பட்டிருந்தது.

கடந்த வாரம் விமல் வீரவன்சவின் கட்சியினரும் நேரில் பார்வையிட்டுச் சென்றனர். அண்மைக்காலத்தில் அதிகமானோர் அப்பகுதிக்குச் சென்று மலையில் உள்ள ஆலயத்திற்கு ஏறிச் சென்றமையினால் அங்கே முன்னர் அமைக்கப்பட்டிருந்த ஏணி சேதமடைந்திருந்தது. இதனால் பாதுகாப்புக் கருதி ஆலய நிர்வாகம் இரும்பினால் ஏணிப் படியினை அமைத்திருந்தனர். இதனை மலைப் பகுதியில் பொருத்த முயன்றதனையடுத்தே பொலிஸார் தலையிட்டு கடந்த 6 ஆம் திகதி தடுத்து நிறுத்தினர் .

ஆலய நிர்வாகத்தினால் ஏணி தயாரிக்க வழங்கப்பட்ட ஒட்டு நிலையத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த ஏணியைத் தயாரிக்ககூடாது. என எச்சரித்திருந்தனர். இந்த விடயம் வவுனியா வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதனையடுத்து ஏணியை தயாரிக்கப் பொலிஸார் தடை போட முடியாது. அதனை தயாரிக்கலாம் எனத் தெரிவித்த நிலையில் ஏணி தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த ஏணியைப் பொருத்துவதற்கு தொல்பொருள் திணைக்களம் தடையாக இருப்பதனால் பொருத்த முடியாத நிலமை நீடிக்கின்றது. (105)



# சித்தமருத்துவ நிலையம் திறந்துவைப்பு

வவுனியா.ஒக்.23

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி நிதியம் மற்றும் வவுனியா வடக்குபிரதேச சபையின் நிதிப்பங்கீட்டில் வவுனியா வடக்கு கனகராயன் குளத்தில் புதிதாக சித்தமருத்துவ நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் இ. தணிகாசலத்தின் அழைப்பின் பேரில் வட மாகாண சபை உறுப்பினர்களான .ப .சத்தியலிங்கம் .ஜி .ரி .லிங்கநாதன் ஆகியோரால் திறக்கப்பட்டுள்ளது .

இந்த நிகழ்வில் மாவட்ட ஆயுர்வேத ஒருங்கிணைப்பாளர் திருமதி.ஜெ.சத்துருக்கன், பிரதேச சபையின் உப தலைவர். யோகராஜா மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொலிஸ் அதிகாரிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)



# விளையாட்டு வீரர்கள் குடிதண்ணீர் இன்றித் தவிப்பு

கிளிநொச்சி ,ஒக். 22

பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் குடிதண்ணீர் இன்றி தவிக்கும் நிலை தொடர்கின்றது .

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குச் சொந்தமான பொது விளையாட்டு மைதானத்தில் குடிதண்ணீர்க் கிணறு உள்ளபோதும், அங்கு விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள், குடிதண்ணீருக்காக வேறு இடங்களுக்கு சென்று பருக வேண்டிய நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக பல்வேறு தரப்பினருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வீரர்கள் தெரிவிக்கின்றனர் .

இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனிடம் கேட்டபோது: குறித்த விளையாட்டு மைதானம் நெல்சிப் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது. குறிப்பாக கிணறு நிலையம் எடுத்து கட்டப்படவில்லை. கிணற்றினை இறைத்து வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. இறைத்தாலும் குடிதண்ணீருக்காக அதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அத்தோடு நீர்க் குழாய்களும் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அடுத்தாண்டு நிதியில் அதற்கான ஒதுக்கீட்டினைப் பெற்றுச் சீரமைக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். (6)

# முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்றைய தினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

ஆண் முதியோர்கள் வேகநடை,கூடைக்குள் பந்து போடுதல்,சங்கீதக் கதிரை, ஆகிய போட்டிகளிலும், பெண் முதியோர்கள் கிடுகு பின்னுதல்,கூடைக்குள் பந்துபோடுதல்,சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளிலும் பங்கேற்றனர். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுறோர் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற உள்ள மாவட்ட முதியோர் தின விழாவில் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 29ஆம் திகதி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற உள்ள மாகாண முதியோர் தின விழாவிலும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர். (6,9)



# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மகளிர் அணிக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு



வவுனியா,ஒக் .23

வவுனியா மாவட்டத்தின் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மாவட்ட அலுவலகமான தாயகத்தில் கிளைத்தலைவர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் கிளை சீரமைப்பின் ஒரு அங்கமாக நேற்று முன்தினம் மகளிர் அணிக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது மாவட்ட மகளிர் அணித்தலைவியாக செல்வி அ.நிவேதாவும், உப தலைவியாக செல்வி கிருஸ்ணவேணியும், செயலராக திருமதி அ.ரேணுகாவும், உப செயலராக திருமதி செ.சுபாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன்,செட்டிகுளம், வவுனியா வடக்கு, வவுனியா நகரம் மற்றும் வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து 21 நிர்வாக உறுப்பினர்கள் அடங்கலாக மொத்தம் 25 உறுப்பினர்களைக்கொண்ட புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தலைவர் ப.சத்தியலிங்கம், கட்சியின் பொருளாளர் தேவராசா, மாவட்ட இளைஞர் அணித்தலைவர் பா.சிந்துஜன், நகரக்கிளையின் தலைவர் சி.சிவசோதி, உபதலைவர் கிரிதரன் உட்பட கட்சியின் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். (110)

# கோழிகளுடன் இருவர் கைது


வவுனியா,ஒக் .23.

வவுனியாவில் நீண்டகாலமாக கோழிகளைத் திருடினர் என்றசந்தேகத்தின் அடிப்படையில் இரண்டுபேரை வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் நியாமிற்கு கிடைத்த தகவலுக்கு அமைய உபபொலிஸ் பரிசோதகர் பிரணீத் மற்றும் சாணக,கேரத்,அசோக, நிசங்க, திசாநாயக, தரங்க ஆகியோரை உள்ளடக்கிய பொலிஸ் குழுவினரே நேற்று முன்தினம் வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை கைதுசெய்துள்ளனர்.

இவர்களால் திருடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பத்திற்கும் மேற்பட்ட கோழிகளும் கூண்டோடு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. தோணிக்கல் பகுதியில் நீண்டகாலமாகக் கோழிகள் காணாமல்போவதாகக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமையவே பொலிஸார் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர், இவர்கள் களவாடிய கோழிகளை விற்பனை செய்து வந்ததுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யபட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கபட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்



# முல்லைத்தீவில் தங்க ஆபரணம் மீட்பு ஆதாரம் காட்டிப் பெறலாம்

முல்லைத்தீவு,ஒக் .23

முல்லைத்தீவு நகரின் மத்தியில் இருந்து முக்கிய தங்க ஆபரணம் ஒன்று கண்டுடெடுக்கப்பட்டு, கரைத்துரைப்பற்று பிரதேச செயலகத்தின் கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரின் மத்தியில் நேற்றைய தினம் ஓர் தங்க நகையினை கரைதுறைப்பற்று பிரதேச செயலக பணியாளர் ஒருவர் கண்டெடுத்து பிரதேச செயலரிடம் ஒப்படைத்துள்ளார்.

இவ்வாறு பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்ட தங்க ஆபரணம் பிரதேச செயலக கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வந்து தகுந்த ஆதாரத்தை காண்பித்து பெற்றுக்கொள்ள முடியும் எனக் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (105)

# இரணைப்பாலையில் அமைக்கப்படவுள்ள மதுபான நிலையத்திற்கு மக்கள் எதிர்ப்பு

புதுக்குடியிருப்பு, ஒக் .23

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப்பகுதியில் தனியார் ஒருவரினால் அமைக்கப்பட்டு வரும் உணவகத்துடன் கூடிய மதுபான விடுதியினை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த 8ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது, மதுபான நிலைத்தின் உரிமையாளரினால் இந்த அனுமதி கோரப்பட்டது.

குறித்த மதுபான நிலையத்துடன் கூடிய உணவகம் அமைப்பதற்கு மதுவரித் திணைக்களத்திடம் இருந்து விளக்க கடிதம் தருமாறு கோரப்பட்ட நிலையில், பிரதேசசெயலரினால் 1 ஆம் கட்ட கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாம் கட்ட ஆய்வுக் கடிதத்தில் 25 பேர் குறித்த பகுதியில்மதுபானநிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், இரண்டுபேர் மட்டும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் அலுவலகம் முன்னால், பெண்கள் சிலர் எதிர்ப்பினை வெளிப்படுத்தி, கவனவீர்ப்பு ஒன்றினையும் மேற்கொண்டுள்ளார்கள். இந்த விடயத்தினையும் மதுவரித்திணைக்களத்திற்கு தான் தெரியப்படுத்தியுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (222)

# ஏழாலை மேற்கு மாதர் கிராம அ.சங்க புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம் ஏழாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடம்நேற்றுமுன்தினம்திறந்துவைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் திருமதி மைதிலி சிவநாதன்தலைமையில்இதுநடைபெற்றது.

முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாணத் தேர்தல்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், உடுவில்பிரதேசசெயலர்சி.ஜெயகாந்,வடக்கு மாகாண திட்டமிடல் பிரதித் தலைமைச் செயலர் ஆர்.உமாகாந்தன், கிராம அபிவிருத்தித்திணைக்களமாகாணப்பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், மாவட்டகிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மதிப்புறு விருந்தினர்களாக வலி.தெற்குப் பிரதேசசபைத் தவிசாளர் க.தர்சன், வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.தெற்குகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலன், கிராம உத்தியோகத்தர் ஏ.றஜீவன், வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரன், பிரதேச சனசமூகநிலையத் தலைவர் செ.செல்வராசா,முத்தமிழ்மன்றத்தலைவர் நா.இலட்சுமிகாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

விருந்தினர்கள் மங்கல வாத்திய இசையோடு அழைத்துவரப்பட்டனர்.

சிவசிறிஇ.சுந்தரேஸ்வரக்குருக்கள்ஆசியுரை வழங்கினார். விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து மதிப்பளிப்பு இடம்பெற்றது.

2017இல்தேசியமட்டத்தில்தரம்ஒன்றுக்கான கதாபிரசங்கத்தில் முதலாமிடம் பெற்ற அறநெறி மாணவன் கிருபாகரன் டிலக்சன் மதிப்பளிக்கப்பட்டார்.

புலம்பெயர்உறவுகளின்உதவியில்அறிநெறி மாணவிகளான செல்வி வ. பிரியதர்சினி.செல்விஅ.அஸ்வினிஆகியோர்க்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன. (4,159)



# தேவைகளை நாமே நிறைவேற்றினால் ஏனையோரின் மேலாதிக்கம் இருக்காது

## அதற்குச் ச.ச.நிலையங்கள் வலுப்பெறவேண்டும் என்று கூறுகிறார் வடக்கு முதலமைச்சர் விக்கி

*யாழ்ப்பாணம், ஒக். 23*

*எமது நியாயமான தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்கின்ற ஒரு நிலைக்கு நாம் முன்னேறுகின்றபோது ஏனைய மக்களின் மேலாதிக்கங்களோ அல்லது அரசியல் தலையீடுகளோ எம்மீது பிரயோகிக்க முடியாது போய்விடும். எனவேதான் ஒவ்வொரு கிராமங்களிலும் இயங்குகின்ற சனசமூக நிலையங்களை வலுப்பெற்றதாக மாற்றியமைக்கவேண்டும் என்று கூறிவருகின்றேன்.*



இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்துஇளைஞர்மன்றத்தின்75ஆவதுஆண்டுநிறைவுவிழாமன்றத்தின்பிரசாத்அரங்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தின ராக உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒருகிராமத்தின்வளர்ச்சிக்கு அங்குள்ளசனசமூக நிலையங்களும் அதனோடு இணைந்த வாலிபர் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், பாலர் பாடசாலைகள், முதியோர் கல்வி நிலையங்கள்போன்றபல்வேறு அலகுகளும் உதவுகின்றன.

இவ்வாறான அபிவிருத்தி வளர்ச்சிகளுக்கு இளைஞர்களின் பங்கு முக்கியமானது.

இன்றைய குழந்தைகளுக்கு அறநெறி வகுப்புகளை விடுமுறைநாள்களில் கோவில்களிலோ அல்லது இது போன்றபொதுஅமைப்புகளின்கட்டடங்களிலோ நடத்துவது அவசியம். இன்றுஆலயங்களில்தேவாரம் பாடபிள்ளைகள் இல்லை. சில காலங்களுக்கு முன்னர் இளையோரும் முதியவர்கள் பலரும் பண்ணோடு இசைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். கோவில்களில் சிறப்பு நிகழ்வுகளில் எல்லாம் 'நான் முந்தி நீ முந்தி' என்று தேவாரம் பாடி இசைப்பார்கள். ஆனால் இன்று கோவில்களில் தேவாரம் பாடமுதியவர்கள் கூட இல்லை.

இன்றையகாலகட்டத்தில்சமூகமேம்பாட்டுக்கும் அரசியல் முன்னெடுப்புகளுக்கும் இளையோரின் பங்கு முக்கியமானது. விரைந்து தீர்மானங்களைமேற்கொள்ளக்கூடியதிறன், அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய சக்தி, பலம் ஆகியவை இளைஞர்களிடையே காணப்படுகின்றன.

இன்று ஒரு சிறுபிள்ளைக்குக்கூட அரசியல் பற்றித் தெரிந்திருக்கின்றது. தலைவர்களின் மாய்மாலப் பேச்சுகளையும் பொய் வாக்குறுதிகளையும்அவர்கள்இலகுவில்அடையாளம் காணப்பழகிக் கொண்டுள்ளார்கள். சிலரின் சாதிரீதியானசிந்தனைகளை அவர்கள்அடையாளம்கண்டுகொண்டுள்ளார்கள். தலைவர்களுக்கு எதிராகக் கேள்விகளைக் கேட்பதற்கும் அவர்களின் செயற்பாடுகள் குறித்து விமர்சிப்பதற்கும் இளைஞர்கள் குழாம் தயாராகிவிட்டது - என்றார்.

நாடாளுமன்றஉறுப்பினர்த.சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டநிதியொதுக்கீட்டில் சீரமைக்கப்பட்ட மன்றக் கட்டடத்தைவடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி. விக்னேஸ்வரன் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

பிரம்மசிறி சி.ஜெயானந்தசர்மா ஆசியுரை நிகழ்த்தினார். முதலமைச்சர் ஞானதீபம் என்றநூலைவெளியிட கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம்முதற்பிரதியைப்பெற்றார். ஆசுகவிசெ.சுப்பிரமணியம்நூல்வெளியீட்டுரைநிகழ்த்தினார். மூளாய் இந்து இளைஞர் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப்பரிசில்வழங்கலும், சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றன.

'இளைஞர்களுக்குபெரிதும்தேவைப்படுவது வேகமாவிவேகமாகா'என்றதலைப்பில்செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனின் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது.

(4,159)





புனிதர்யோசப்வாஸ்பயன்படுத்தியபுனிததிருச்சிலுவையைதாங்கிய ஊர்தி சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு பூநகரிப் பங்குக்கு கொண்டு செல்லப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை கத்தோலிக்க பங்குக்குக் கொண்டு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் புனித அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டு நேற்று காலை சாவகச்சேரி கத்தோலிக்க பங்குக்கு கொண்டுவரப்பட்டது. அதனைநாவற்குளியில்பொறுப்பேற்ற சாவகச்சேரிகத்தோலிக்கபங்குமக்கள்உந்துருளிகள்சகிதம்பவனியாக அழைத்து வந்தனர்.

அங்குவழிபாடுகளைமுடித்துக்கொண்டு பூநகரிப்பங்குக்குபவனியாகக் கொண்டு செல்லப்பட்டது. (9)

# 7 துப்பாக்கிகள், விவசாய உபகரணங்களை வடக்கு மாகாண அமைச்சு வழங்கியுள்ளன

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் யாழ்ப்பா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 க்கும் அதிகமான விவசாயப் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள், வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டன. தென்மராட்சிக்கு 7 துப்பாக்கிகளும் வழங்கப்பட்டன.



திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டுபயனாளிகளுக்கான விவசாய உபகரணங்களை வழங்கினார்.

நீர்இறைக்கும்இயந்திரங்கள், மின்மோட்டர்கள், குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கான துப்பாக்கிகள், அசோலா வளர்ப்புக்கான பெரிய தொட்டிகள், விவசாய உபகரணங்கள்மற்றும்மரக்கன்றுகள்எனசுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர,தென்மராட்சிப்பிரதேசத்தில்குரங்குகளைக் கட்டுப்படுத்த தென்மராட்சிப் பிரதேசவிவசாயிகளுக்குவாயுத்துப்பாக்கிகள் (எயார்கண்) அங்கு வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு 7 துப்பாக்கிகள் ஏழு விவசாயிகளுக்குவழங்கப்பட்டன. அவற்றுடன்தலா 100 குண்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. சாவகச்சேரிமீசாலைப்பிரிவுகளைச்சேர்ந்த நால்வருக்கும் எழுதுமட்டுவாழ் பிரிவைச் சேர்ந்த 3 விவசாயிகளுக்கும் வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போதுதென்மராட்சியில் மாத்திரம் சுமார் 70 ஆயிரம் குரங்குகள்உள்ளனஎன்றுதெரிவிக்கப்படுகிறது. பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்படும் விளை பொருள்களையும் மாமரம் காய்க்கும் வேளையில் மாங்காய்களையும்அவைஅழித்தும்உணவாக்கியும் வருகின்றன.

அவைமரங்கள், வீடுகள்மேலாகப்பாய்ந்து செல்கின்றன.

அதனால் பல வீடுகளின் ஓடுகள், கூரைகளின் கரைப்பகுதி சீற் என்பன உடைந்துவிடுகின்றன.

கூடுகள் வைத்துக் குரங்குகளைப் பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் அந்தத் திட்டம் வெற்றியளிக்கவில்லை என்றும் விவசாயிகள்தெரிவித்தனர். (4,8,9,159)

# முல்லைக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் இடம்மாற்றப்படவில்லை

## வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று அமைச்சர் மீது கூட்டமைப்பு எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

முல்லைத்தீவுமாவட்டத்தில்பணிபுரியும்கடற்றொழில்நீரியல்வளத்துறைத்திணைக்கள அதிகாரிகள் மூவரும் ஒக்ரோபர் முதலாம் திகதிதொடக்கம் இடமாற்றம் செய்யப்படுவர் என்று திணைக்களப் பணிப்பாளர் நாயகம் வாக்குறுதி வழங்கியபோதும், பிரதிப் பணிப்பாளரை மாற்றாது ஒரு அலுவலரை மட்டுமே மாற்றியுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறீஸ்காந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுருக்கு வலைக்கு முற்றாகத் தடைவிதிக்குமாறும் மாவட்டத்தில்பணியாற்றும்சர்ச்சைக்குரிய 3 உத்தியோகத்தர்களையும் உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் கடற்றொழில் அமைச்சர் வஜிர அபயவர்த்தன எமது முன்னிலையில் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடந்த செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி மாவட்ட மீனவ அமைப்புகள் முன்பாக உத்தரவிட்டார்.

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் பேதுருப்பிள்ளை-பேரின்பநாதன், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன்மற்றும்மாகாண சபைஉறுப்பினர்து.ரவிகரன்ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மீன்பிடி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சருடன் தனித்தனியே சந்தித்து உரையாடியிருந்தனர்.

அதிகாரிகளை மாற்றுவதுடன் சுருக்கு வலையைத் தடை செய்யவேண்டும் என்றும்மாவட்டத்தின்10பிரதிநிதிகள்சந்திப்பில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தச் சந்திப்பைக் கூட்டமைப்பின் தலைவர் ஏற்பாடு செய்து தந்திருந்தார். கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பணிப்பாளர்நாயகம்மற்றும்கடற்றொழில் அமைச்சர் ஆகியோரை இரு நாள்களாக நேரில்சந்தித்து நிலமை விளக்கிக் கூறப்பட்டது. இதில் அதிகாரிகள் மூவரையும் மாற்றுவதாகப் பணிப்பாளர் நாயகம் வாக்குறுதி வழங்கியிருந்தார். இடமாற்றத்தைஒக்ரோபர்முதலாம்திகதிநடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

அதன்படிமாவட்டத்தில்வழங்கியுள்ளசுருக்குவலை அனுமதிகள் அனைத்தையும் உடனடியாக இரத்துச்செய்யுமாறு அமைச்சர் உத்தரவிட்டார்.

இருப்பினும் இன்றுவரை மீனவ சங்கங்களுடன் முரண்பாடாக இருந்த மூன்று உத்தியோகத்தர்களில் ஒருவர் மட்டுமே மாவட்டத்தைவிட்டு இடமாற்றப்பட்டுள்ளார்.

ஏனையோர் தொடர்பில் பணிப்பாளர் நாயகம்அசமந்தப்போக்கிலேயேசெயற்படுகின்றார் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (4.105)



கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில்

# ஆறரை லட்சம் சதுரமீற்றரில் 11,000வெடிபொருள்கள்மீட்பு

## ஸார்ப் நிறுவனம் தெரிவிக்கிறது

கடந்த இரண்டு வருடங்களில் 11 ஆயிரத்து 86 அபாயகரமானவெடிபொருள்கள்ஸார்ப் நிறுவனத்தால்அகற்றப்பட்டுள்ளன என்று அதன் நடவடிக்கை முகாமையாளரும் ஓய்வு பெற்ற கப்டனுமான பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

வடக்கில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக்கண்ணிவெடியகற்றும்அரசசார்பற்றநிறுவனம்2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில். 6 இலட்சத்து49ஆயிரத்து613சதுரமீற்றர்பரப்பளவில்11ஆயிரத்து 86அபாயகரமானவெடிபொருள்கள்அகற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுமாவட்டத்தில்ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் இவை அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

118 பணியாளர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 11 பெண் பணியாளர்கள்.

இந்த நிறுவனம் 4இலட்சத்து 22 ஆயிரத்து 828 சதுரஅடி நிலப்பரப்பைமக்களின் பயன்பாட்டுக்காக அரசிடம்கையளித்துள்ளது.

குறித்தபகுதிக்குசெல்கின்றவீதி மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளது. இனி மழைகாலம் ஆரம்பமாவதால் பணிகளில் தாமதம் ஏற்படலாம்.

இவைதவிர, மரங்கள்தறிப்பது, மணல்ஆகழ்பவர்களின் அத்துமீறல் என்பன அதிகமாகவுள்ளன - என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (4.6)

# திறந்த பல்கலைக் கழகங்கள் பல திறமையானோரைத் தருகின்றன

## பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 23

திறந்த பல்கலைக் கழகங்கள் சமூகத்துக்கு தேவையான பல திறமையானநபர்களைதகுதியோடுவழங்கிக்கொண்டிருக்கின்றனஎன்றுமீள் குடியேற்ற மறுவாழ்வு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்காதர்மஸ்தான்தெரிவித்துள்ளார்.

வவுனியா திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையத்தில் ஆங்கிலம் மற்றும்மனிதவளமுகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகளை முடித்துக்கொண்ட 82 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:



கிராமப்புறங்களில் இருந்து நகர் நோக்கி வேலை தேடிச் செல்லும் இளையோர் திறமைகள் இருந்தும் ஆங்கிலம் என்ற ஒரு சிறிய பகுதிக்குள் மாட்டிக் கொள்கிறார்கள். அவ்வாறு அந்த நேரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. ஏனெனில், இலவசமாக பல்வேறுகற்கைநெறிகள்நடத்தப்படுகின்றன.அதற்குப்பெருந்தொகையை அரசு செலவு செய்கின்றது.

'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்பதுபோல கற்கை நெறியோடு மாத்திரம் நின்றுவிடாமல் இன்னும் மேலதிகமாகப் படிக்க முடிந்தால்படித்துஉங்களதுதகமைகளை அதிகரித்துக்கொள்ளுங்கள். கடந்த காலங்களில் பல தகைமையானவர்கள் இருக்க உயர்தரக் கல்வியைக்கூடமுடிக்காதபலருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டன.

இந்தஅரசில்தகமைஅடிப்படையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெறுமாக இருந்தால் அது தொடர்பில் தைரியமாகக் குரல் கொடுக்க முடியும்.

30 வருட போர் வடு எங்களின் மனங்களைவிட்டு ஆறாத நிலையில் அரசு எதைக் கொடுத்தாலும் சரியாக்கிவிட முடியாது என்கின்ற பொழுது, அதிலும்அரசியல் செய்து தமது கட்சி சார்பானவர்களுக்கும் தமது ஆதரவாளர்களுக்கும் கிடைக்கப்பெறுகின்ற எல்லாவற்றையும் கொடுத்துபாதிக்கப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டியவர்களையும் வைத்து காலாகாலமாக செய்துவரும் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

நீங்கள் வேறு உங்களது சமூகம் வேறு அல்ல, இரண்டுமே ஒன்று தான். உங்களது பிரதேசங்களில் இடம்பெறுகின்றமோசடிகள்தொடர்பில்உங்களால்இலகுவாகஅறிந்து கொள்ள முடியும். அவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெறுமாக இருந்தால் அது தொடர்பில் அரசியலுக்குஅப்பால்நின்றுகுரல்கொடுக்க நான் எப்பொழுதுமே தாயாராக இருக்கின்றேன் - என்றார்.

வவுனியா திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் வி.திவாஸ்கர் தலைமையில்நடைபெற்றநிகழ்வில்விரிவுரையாளர்கள், உயரதிகாரிகள், கற்கைநெறியைப்பூர்த்திசெய்தவர்கள்கலந்து கொண்டனர். (4.110)

# மலையக மக்களின் சம்பளப் பிரச்சினையை உடன் தீர்க்கவும்

## மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம் வேண்டுகோள்

வவுனியா, ஒக். 23

இந்த நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும்மலையகஉறவுகளின்சம்பளப்பிரச்சினையை உடனடியாகதீர்த்துவைப்பதற்குஅரசுநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தநாடுஅந்நியரின்ஆட்சியிலிருந்தபோதுமலைநாட்டுப் பிரதேசத்தில் தேயிலைச் செய்கை மேற்கொள்வதற்காகத்தென்இந்தியாவிலிருந்துஅழைத்துவரப்பட்டனர்.

எங்கள் தொப்புள்கொடி உறவுகளே மலையகத் தமிழராவர். வாழும் இடம் வேறாக இருந்தாலும் கலை, கலாசாரம்மொழி, வாழ்வியல்பண்புகளில் அவர்களும்இலங்கைத்தமிழர்களே. வடக்குகிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களை எப்படி அரசியல் அடிமைகளாக வாழவேண்டுமென்று நினைத்தார்களோ அதேபோன்றுமலையகத்தமிழ்மக்களும் பொருளாதார அடிமைகளாக வாழவேண்டுமென்பதேபெரும்பான்மைஆட்சியாளர்களின்சிந்தனையாகவுள்ளது.

ஆரம்பகாலத்திலிருந்தே மலையக மக்களின் உரிமைகளைவென்றெடுக்க அங்குள்ள கட்சிகள், தொழிற்சங்கங்கள், அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒற்றுமையாகப் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டுவந்தாலும் அரசு அவற்றைக் கண்டுகொள்ளாமல்இருப்பதுகவலையளிக்கிறது.

கடுங்குளிரிலும், மழையிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது ஜீவனோபாயத்துக்காக மலைக்காடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைப்பதில்லை.

காலாகாலமாகஏற்படும்சம்பளப்பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக உருவாக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகியுள்ளது. அந்த மக்கள் தமக்கான சம்பளத்தை நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாவாகஉயர்த்தித்தரும்படிபோராடிவருகின்றார்கள். இவர்களது போராட்டம்வெற்றி பெறவேண்டும். அவர்களது கோரிக்கை நியாயமானது. அதனை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும் என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4.110)

# தென்மராட்சிப் பிரதேச முக்கிய சந்திகளில் வேகக்கட்டுப்பாட்டுக்கான குறியீடுகள் வேண்டும்

## நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபை உறுதி

கொடிகாமம், ஒக். 23

தென்மராட்சியில் எழுதுமட்டுவாழ் தொடக்கம் நாவற்குழிவரையானஏ-9முதன்மைவீதியிலும். கொடிகாமம் பருத்தித்துறை வீதியிலும் வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடுகள் காட்சிப்படுத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


குறித்த வீதிகளினூடாக தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன.

பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள ஏ- 9 முதன்மைச்சாலையில்கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி போன்ற சந்திகளிலும், கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வரணிச் சந்திப் பகுதியிலும் வேகக்கட்டுப்பாட்டுக்குறியீடுகள்அமைக்கவேண்டும்என்று சாவகச்சேரிப்பிரதேசசபைஉறுப்பினர் செ.ஜெயபாலன் சபையில் அண்மையில் தனிநபர் தீர்மான வரைவை முன்வைத்து உரையாற்றினார்.

ஏ9முதன்மைவீதியில்வாகனங்களின்அதிகரித்த பயணங்களால்நகரப்பகுதிகளில்அடிக்கடிவிபத்துகள்இடம்பெற்றுவருகின்றன. வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடுகள்வீதிஅபிவிருத்திஅதிகாரசபைமூலமாக அமைத்துக்கண்காணிப்புப்பணிகளுக்குப்பொலிஸாரின் உதவியைக் கோர வேண்டுமெனவும் உரையாற்றினார்.

இதற்கு பதிலளித்த உபதவிசாளர் செ.மயூரன், உரியதரப்புகளுடன்தொடர்புகொண்டுவேகக்கட்டுப்பாட்டுக்குறியீடுகள்அமைக்கவும்கண்காணிப்புப்பணிகளில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்தார். (4.159.9)





# சம்பள உயர்வை வலியுறுத்தி தோட்டத் தொழிலாளர்கள் நேற்றும் போராட்டம்

கொழும்பு, ஒக்.23
தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி தலவாக்கலை நகரில் மற்றும் லோகித் தோட்ட பகுதியில் நேற்று போராட்டங்கள் நடைபெற்றன.
இந்தப் போராட்டங்களில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் பங்கேற்றனர். தலவாக்கலையில் நடைபெற்ற போராட்டத்தில் ஹேலிஸ் பெருந்தோட்ட கம்பனிக்குச் சொந்தமான ஹொலிரூட் தோட்டத்தைச் சேர்ந்த 4 பிரிவுகளிலிருந்து சுமார் 500 பேர் கலந்து கொண்டிருந்தனர்.
இவர்கள் ஹொலிரூட் தோட்ட தொழிற்சாலை முன்பாகப் பேரணியை ஆரம்பித்து தலவாக்கலை நகரம் வரை ஊர்வலமாக வந்து தலவாக்கலை சுற்று வட்டத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக் கோரிப் போராட்டக்காரர்கள் கோஷங்கள் எழுப்பியதோடு, சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர். இதேவேளை அட்டன், நுவரெலியா முதன்மை வீதியை வழிமறித்து லோகி தோட்டத் தேயிலைத் தொழிற்சாலை முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் லோகி மிடில்டன் கூம்வூட் நானு ஓயா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 500 ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.
இந்த இரு போராட்டங்கள் காரணமாக மொத்தமாக 2 மணித்தியாலங்கள் அட்டன்- நுவரெலியா வீதியின் ஊடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.
இதேவேளை தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்திலும் நேற்றுமுன்தினம் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

# போராட்டத்தைக் கைவிட்டனர் சிறைச்சாலைக் கைதிகள்

கொழும்பு, ஒக்.23
அம்பாந்தோட்டை, அங்குணுகொலபெலஸ்ஸ சிறைக்கைதிகளின் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
அம்பாந்தோட்டை, அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை கைதிகள் நேற்றுமுன்தினம் சிறைச்சாலை கூரை மற்றும் கட்டடத்தின் மீது ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அது நேற்று இரண்டாவது நாளாகவும் நீடித்தது.
சிறைச்சாலையின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சிறப்பு அதிரடி படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 400 இற்கும் மேற்பட்ட சிறைக்கைதிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த நிலையில், அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக, நீதி அமைச்சு அறிவித்துள்ளது.
இதன்போது, கைதிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாகச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்
கடந்த வாரம் தொடக்கம் சிறைச்சாலைக்கு கொண்டுவரப்படும் உணவுகள் உள்ளிட்ட பொருள்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும், இதன்காரணமாக குறித்த பொருள்களை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறைக்கைதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

# வாள்வெட்டுக்கு இலக்காகி 10 பேர் மருத்துவமனையில்



திருகோணமலை, ஒக்.23
திருகோணமலை, மட்கோ, மஹாமாயபுர பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்கான 10 பேர் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்த வாள்வெட்டுச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதாலேயே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த டி.பி.அமரகீர்த்தி(வயது 47), ஆர்.தினுஷா பியந்தி (வயது 39), டி.பி. அக்சயா (வயது22), டி. பி. டிசான் (வயது 17) ஆகியோர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
இதேவேளை, வாளால் வெட்டியதாகக் கூறப்பட்ட மற்றைய குழுவைச் சேர்ந்த 6 பேரும் அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவம் தொடர்பில், திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# பன்னாட்டு சமுத்திர மாநாடு ஆரம்பம்

**கொழும்பு,ஒக்.23**
**காலி உரையாடல்- 2018 பன்னாட்டு சமுத்திர மாநாடு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை யில் கொழும்பில் நேற்று ஆரம்பமானது.**

பாதுகாப்பு அமைச்சும் இலங்கைக் கடற்படையும் இணைந்து ஒன்பதாவது தடவையாக ஏற்பாடு செய்திருக்கும் இந்த மாநாடு "சமுத்திர முகாமைத்துவத்திற்கு ஒன்றிணைந்து பணியாற்றுதல்" என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெறுகின்றது.
நாடுகள் மற்றும் 17 பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சமுத்திர பாதுகாப்புத் தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.
சமுத்திர வளங்களை உரிய முறையிலும் அனைத்து நாடுகளினதும் தேவைக்கேற்பவும் பயன்படுத்துதல், வலய பாதுகாப்புக்கான அதன் முக்கியத்துவம், எமது நாட்டின் பொருளாதார இருப்பு, உலக சமாதானத்துக்கான அதன் பயன்பாடு மற்றும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான இரு தரப்பு, பல்தரப்பு உறவுகளைப் பலப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.
காலி உரையாடல் மாநாட்டின் புதிய தகவல்களை www.galledialogue.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட அரச தலைவருக்குக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமெவன் ரணசிங்கவினால் சிறப்பு நினைவுச் சின்னமொன்று வழங்கிவைக்கப்பட்டது.

# சியம்பலாண்டுவ துப்பாக்கி ரவைகள்: சிறப்பு பொலிஸ் விசாரணை

கொழும்பு,ஒக்.23
சியம்பலாண்டுவ பகுதியில் ரி 56 ரக - துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு மூன்று சிறப்பு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
இரண்டு பிரதிப் பொலிஸ் மாஅதிபர்களின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
சியம்பலாண்டுவ பகுதியில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பில் ரி56 ரக - 3000 துப்பாக்கி ரவைகளுடன் திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நால்வர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்களில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கொஸ்கொட சுஜியின் முக்கிய உதவியாளர்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்களிடமிருந்த எம்.எம் வகையிலான 32 துப்பாக்கி ரவைகளும், ஆடம்பர மூடுந்தும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# புலமைப்பரிசில் பரீட்சை மறுசீரமைக்கப்படும்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.23
தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மறுசீரமைக்கப்படும் என்று கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
குளியாப்பிட்டி உடவளவ ரேவத்த மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப கல்வி வள நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:



பரீட்சை மறுசீரமைக்கப்படுவது தொடர்பில் ஆராய்வதற்குச் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கொடுப்பனவில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மூலம் புதிய பாடசாலை அனுமதி கோருவது மற்றும் மாற்றங்களைக் கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
பாடசாலை இடம்பெறும் நேரத்தில் தனியார் மேலதிக வகுப்புக்களை நடத்தத் தடை விதிக்கப்படும். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அயல்நாடுகளின் அரசியல்வாதிகளை கொல்லும் தேவை 'றோ'வுக்கு இல்லை

## கூறுகின்றார் அமைச்சர் சரத் பொன்சேகா



**கொழும்பு, ஒக்.23**
**இந்தியாவின் புலனாய்வு அமைப்பான 'றோ'வுக்கு அயல் நாட்டு அரசியல்வாதிகளைக் கொலை செய்யவேண்டிய தேவையில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியாவின் 'றோ' போன்ற அமைப்பு அயல்நாட்டின் அரசியல்வாதிகளைக் கொலை செய்ய முயலும் என நான் கருதவில்லை. 'றோ' என்பது இந்தியாவின் உயர்ந்த தொழில்சார் ரீதியான புலனாய்வு அமைப்பு. அயல்நாட்டின் அரசியல்வாதிகளைக் கொலை செய்யும் நோக்கத்துடன் 'றோ' உருவாக்கப்படவில்லை. இலங்கையின் சில புலனாய்வு அமைப்புகளைப் போல் இல்லாமல் 'றோ' கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கொண்ட அமைப்பு. ஒருவர் அரசியல்வாதியாகவோ அல்லது அதிகாரத்திலிருக்கும்போதோ கருத்துவேறுபாடுகள் உருவாவது தவிர்க்கமுடியாத விடயம். இந்த நிலையில் அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் மோதல்நிலை நிலவுவதாக நான் கருதவில்லை - என்றார்.

# அரச தலைவர் கொலைச் சதி: விமல் மீது விசாரணை அவசியம்

## கூறுகின்றார் ரஞ்ஜித் சொய்ஷா எம்.பி.



கொழும்பு, ஒக்.23
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கொலை சதி தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்துக்கு, அவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்ஷா தெரிவித்தார். அரச தலைவர் கொலை சதித்திட்டத்தில் இந்தியாவின் 'றோ' அமைப்பு தொடர்புபட்டுள்ளதாக, விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்து தொடர்பாக நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்து பொய்யான தகவல் என வெளியாகியுள்ள நிலையில், அவரை கைது செய்திருக்க வேண்டும். இல்லாவிடின் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவை இரண்டையும் மேற்கொள்ளாமல் அரசு பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றது. அந்தவகையில் அரசின் செயற்பாடுகள் அனைத்தும் மர்மம் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது" என்றார்.

# எரிபொருள் விலைச்சூத்திரம் மக்களை ஏமாற்றும் தந்திரம்

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.23
கூட்டாட்சி அரசின் எரிபொருள் விலைச் சூத்திரம் பொதுமக்கள் மீது எரிபொருள் சுமையைச் சுமத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தந்திரமான உத்தியே என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைக்குக் கொண்டுவரும் எரிபொருளில் இருந்து பல்வேறு வகையான வரிகளை அரசு அறவிடுகின்றது. கூட்டாச்சி அரசு அறிமுகம் செய்துள்ள புதிய எரிபொருள் சூத்திரத்தில் அவ்வாறான எந்தவொரு வரியிலும் கை வைக்காமல் எரிபொருள் விலையைத் தீர்மானிக்க அரசு முயற்சிக்கின்றது. இது எரிபொருள் விலையில் குறைவை ஏற்படுத்தாது மாறாக மக்கள் மீது சுமையையே தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும். அரசு மக்களுக்கு எரிபொருள் விலையில் நன்மை செய்வதாக இருந்தால் எரிபொருளுக்காக அறிவிடும் வரிகளையே முதலில் குறைக்க முன்வர வேண்டும் - என்றார்.

# மீற்றர் பொருத்தப்படாத முச்சக்கரவண்டிகளை பொலிஸார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கலாம்



கொழும்பு, ஒக்.23
மீற்றர்மானி பொருத்தப்படாத முச்சக்கரவண்டிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் உரிமையைப் பொலிஸாருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வீதி அபிவிருத்திக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.
இதனடிப்படையில் இரு வாரங்களுக்குள் முச்சக்கரவண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள மீற்றர் மானிகளின் தரம் தொடர்பிலான அறிக்கை ஒன்றை அமைச்சருக்கு வழங்கவுள்ளதாக வீதி அபிவிருத்திக்கான தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.
இந்த அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னர். அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கவுள்ளதாகவும் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

# இறக்குமதி செய்யும் பொருள்களை வரையறுக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஒக்.23
நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியத் தேவையற்ற பொருள்களை வரையறுப்பதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக இறக்குமதி செய்யப்பட முடியுமான பொருள்களின் பட்டியல் ஒன்று அடுத்த இரு வாரத்துக்குள் வெளியிடப்படவுள்ளதாகத் தேசியப் பொருளாதார சபையினால் நிதி அமைச்சுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
இதன்படி, அடுத்த மாதம் தொடக்கம் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கு இறக்குமதி வரையறை விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
உள்நாட்டுப் பணம் தேவையற்ற விதத்தில் வெளிநாட்டுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசு குறிப்பிட்டுள்ளது.

# நீரில் மூழ்கிய மாணவன் சடலமாக மீட்பு

கொழும்பு, ஒக்.23
நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக முகத்துவாரப் பொலிஸார் தெரிவித்தனர். முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த திசாபதி லேக்கம்லாகே தரிது மதுஷான் (வயது- 15) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.
முகத்துவார கடற்பரப்பில் நீராடுவதற்காகத் தனது நண்பர்களுடன் நேற்று முன்தினம் முற்பகல் 3 மணியளவில் இந்த மாணவன் சென்றுள்ளான். இந்த நிலையிலேயே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அதனை அடுத்து பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கைகளின் போது காணாமல் போயிருந்த மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.
மேற்படி மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முகத்துவாரப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# சாவு வீட்டுக்கு சென்று திரும்பி வந்தவர் சாவு

கொழும்பு,ஒக்.23
சாவுவீட்டுக்குச்சென்றவீடு திரும்பிக் கொண்டிருந்த மூடுந்து ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து இரத்தினபுரியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.
விதானகே தொன் பியதாஸ (வயது -63) என்ற நபரே உயிரிழந்துள்ளார். மூடுந்தில் நால்வர் இருந்ததுடன் வாகன ஓட்டுநர் உட்பட காயமடைந்தவர்கள் வெத்தேவ மருத்துவமனையில் சேர்கப்பட்டனர்.
விபத்துத் தொடர்பில் அகலவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வருடாந்தம் 250 யானைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.23
இலங்கையில் வருடாந்தம் சராசரியாக 250 யானைகள் உயிரிழப்பதாகப் புள்ளிவிவரத் தகவல்கள் கூறுகின்றன.
தற்போதுள்ள புள்ளி விவரங்களின் படி இலங்கையில் 6 ஆயிரம் யானைகள் காணப்படுகின்றன.
2017ஆம் ஆண்டில் 256 யானைகளும், 2016ஆம் ஆண்டு 279 யானைகளும் உயிரிழந்துள்ளன.
இதேவேளை, யானைகளின் உயிரிழப்புகள் அதிகரிப்பதற்கான மிக முக்கிய காரணம் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதல்களே எனக் கூறப்படுகின்றது.
இலங்கையின் உடவள வனப்பகுதி என்பது ஒருகாலத்தில் யானைகளின் சொர்கபுரியாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த நிலமை மாறிவருவதாக யானைகள் குறித்த ஆய்வு கூறுகின்றது.
இந்த நிலையில், தாயை விட்டுநிர்கதியாகும் யானை கள் உடவள சரணாலயத்தில் 3 தொடக்கம் 5 ஆண்டுகள் பராமரிக்கப்படுகின்றன. அதன்பிறகு பராமரிக்கப்படுகின்ற யானைகள் குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மாத்திரம் அவை கொண்டு சென்று விடப்படுகின்றன. மேலும், உணவு தேடி ஊருக்குள் வருகின்ற யானைகளை மக்கள் திசை திருப்புகின்றனர். இதனால் திசைமாறி யானைகள் ஓடுவதனாலேயே பெரும்பாலான யானை குட்டிகள் நிர்கதி யாக்கப்படு கின்றன. அதேபோல், உடவள வனப் பகுதிக்கு முன்னொரு காலத்தில் சென்றால் அங்கு 50 தொடக்கம் 100 யானைகளை சாதாரணமாக பார்க்க முடியும். ஆனால் தற்போது அவற்றின் நிலமை மாறி வருகின்றது.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, ஒக்.23
மாத்தறை - ஊருபொக்க பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பஸ்கொட பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 44 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். குறித்த நபர் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், வேறு உந்துருளிகளில் வந்த ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.
வலஸ்முல்ல - அகுருஸ்ஸவத்த பகுதியைச் சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவரின் சடலம் ஹீகொட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழரை மட்டுமல்ல இந்தியாவையும் ஏமாற்றுகிறது கொழும்பு

இரண்டு நாடுகளும் இணங்கிக் கொண்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு காட்டிவரும் மெத்தனப்போக்குக்குறித்து இந்தியத்தலைமை அமைச்சர்நரேந்திரமோடி தனது திருப்தியின்மையை இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வெளிப்படுத்தியிருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. தலைமை அமைச்சர் அலுவலகமே இந்தத் தகவலையும் வெளிப்படுத்தியுள்ளது.

இன்று அதிகாரத்திலுள்ள இந்தக் கூட்டு ஆட்சியை அந்த இடத்தில் இருத்தி வைப்பதில் இந்தியாவின் பங்கு அளப்பரியது என்று சொல்லப்பட்டது. அரச தலைவர் தேர்தலில் தோற்றதும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பல்வேறு சமயங்களில் இதை நேரடியாகவே சொல்லிக்காட்டியும் இருந்தார். கொழும்பு அளவுக்கதிகமாகச் சீனாவின் பக்கம் சாய்வதை விரும்பாத இந்தியாவும், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகளும் ஆட்சி மாற்றம் ஒன்றை விரும்பின. 2015இல் அதை நிகழ்த்தின என்று அரசியல் ஆய்வாளர்களும் வெளிப்படுத்தியிருந்தனர்.

தொடக்கத்தில் மைத்திரி– ரணில் கூட்டும்கூட மகிந்தவின் சீனச் சார்புக் கொள்கைகளையும் திட்டங்களையும் கண்டித்ததுடன் அவற்றை எதிர்த்தும் இருந்தது. சீனாவுடன் மகிந்த செய்துகொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் பலவும் இல்லாமல்செய்யப்படும்என்று முழங்கப்பட்டது. ஆனால், பதவிக்கு வந்ததும் சுருதி மாறியது. சீனாவின் கடன் என்கிற இரும்புப்பிடிக்குள் இருந்து வெளியேற முடியாதநிலையில் அதை அனுசரித்தே செல்லவேண்டும் என்கிற காரணத்தைச் சொல்லிக்கொண்டு சீனாவினுடைய அத்தனை திட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுக்க இந்த ஆட்சி அனுக்கிரகம் வழங்கியது.

அதேநேரத்தில் தனது இந்தக் கொள்கையால் இந்தியாவும் மேற்குநாடுகளும் சீற்றமடைந்துவிடக்கூடாது என்பதற்காக உனக்கொரு பக்கம், அவருக்கொரு பக்கம் என்பதைப் போன்று இலங்கையின் வடக்குப் பக்கத்தை இந்தியாவுக்கும், தெற்கைச்சீனாவுக்குமாகப் பங்குபோட்டது மைத்திரி– ரணில் கூட்டு. நடுவில் அகப்பட்டுக்கொண்ட கொழும்பில் மட்டும் இரண்டு தரப்புகளுமே இடம் கேட்பதால் அதையும் எப்படியாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒதுக்குவதாகப் பாசாங்கு செய்து இந்தியாவையும் சமாளித்துவிடுவதற்குக் கொழும்பு முயன்றது.

இலங்கையின்மீது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்கும் இருக்கும் கவனத்தை வைத்துக்கொண்டு ஒரு சதுரங்க ஆட்டத்தை ஆடித் தனது நலன்களைநகர்த்திக் கொண்டு செல்வதுதான் கொழும்பின் உத்தியும் கொள்கையும்கூட. இதில் சீனா அளவுக்கு முதலிடவோ, கடன் கொடுக்கவோ சக்தியற்ற இந்தியாவும், சக்தியிருந்தாலும் இந்தியாவைக் கருதி எல்லை மீற விரும்பாததாலும், முதலீட்டாளர்களைத்திசைதிருப்ப முடியாததாலும் சற்றே தள்ளி நிற்கும் அமெரிக்காவும் ஒருபுறமாக ஓரங்கட்டப்பட சீனாவுடன் துள்ளி விளையாடுகின்றது கொழும்பு.

இது வெறும் உள்நாட்டு அரசியல் மற்றும் புவிசார் அரசியல் விளையாட்டு மட்டுமல்ல. அடிப்படையில் இந்திய எதிர்ப்புணர்வின் விளைவாகவும் உருப்பெற்ற கொள்கை. கொழும்பிடம் நீண்டகாலமாக ஊறிப் போயிருக்கும் கொள்கையும் கூட. இதைப் புரிந்துகொண்டு காரியமாற்றும் திறனற்ற புதுடில்லியைச் சமாளிப்பதும் ஏய்ப்பதும் கொழும்புக்குப் புதியதல்ல.

அதனாலேயே புதுடில்லி கொஞ்சம் சீற்றமடையும் போதெல்லாம் அதைச்சமாளிப்பதற்கு அந்தத்திட்டம், இந்த ஒப்பந்தம் என்று ஆசை காட்டும் கொழும்பு பின்னர் அவற்றை நிறைவேற்றாது இழுத்தடித்துத் தண்ணிகாட்டவும் தயங்குவதில்லை.

ஈழத் தமிழர்கள் விடயத்திலும், இந்தியா விடயத்திலும் கொழும்பு கைக்கொள்ளும் ஒரே இராஜதந்திரம் அப்போதைக்கப்போது இந்த இரண்டு தரப்புகளையும் சமாளித்துக் கொண்டு தன்து நலனை முன்னகர்த்துவது மட்டுமே. கொழும்பைத்திருப்திப்படுத்துவதன்மூலம் இலங்கையில் தனது நலன்களை விருத்தி செய்வது என்கிற கொள்கையிலிருந்து புதுடில்லி விலகாதவரையில் அதை நோக்கிய கொழும்பின் அணுகுமுறையும் மாறப்போவதில்லை. இப்படியேதான் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்கப் போகின்றது.

# மகிந்தவின் ஆட்சிக் கனவு கனவாகவே முடியப் போகின்றது

இந்துமதி



அரசைக் கவிழ்ப்பது தொடர்பாக மகிந்த அடிக்கடி கூறி வருகிறாரே தவிர உருப்படியாக எதையும் சாதிப்பதற்கு அவரால் முடியவில்லை. வெறும் வாய் வார்த்தைகளால் அரசுக்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கு அவரால் முடியாது. அரசைக் கவிழ்ப்பதற்குத் தேவையான பெரும்பான்மை பலம் நாடாளுமன்றத்தில் தற்போது அவருக்குக் கிடையாது.

சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கிட்டத்தட்ட அரைவாசி நாடாளுமன்ற உறுப்பினர்களையே அவரால் வளைத்துப்போட முடிந்துள்ளது. விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார போன்ற ஒரு சிலர் தமது சுய இலாபத்துக்காக மகிந்தவுடன் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். இவர்களை மட்டுமே வைத்துக்கொண்டு அரசைக் கவிழ்ப்பதென்பது பகற்கனவு காணப்படுவதற்குச் சமமானவை. ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சியில் 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் மைத்திரி அணியைச் சேர்ந்த ஒரு சிலரின் ஆதரவு கிடைத்தால்தான் அரசைக் காப்பாற்றிவிட முடியும்.

> அரச தலைவர் மீதான கொலை முயற்சிச் சதியில் இந்திய உளவு அமைப்பான 'றோ'வைத் தொடர்புபடுத்தி வதந்தியைப் பரப்பியதில் மகிந்தவுக்குத் தொடர்பு இருப்பதாக இந்தியாவில் ஊடகம் வெளியிடப்படடுள்ளது. இது உண்மையபாக இருக்குமானால் இந்தியாவின் முழு வெறுப்புக்கும் மகிந்த ஆளாகவேண்டிய நிலை உருவாகிவிடும்.

### கூட்டமைப்பின் ஆதரவு தொடரும் என்பது தெளிவாகிறது


புதிய அரசமைப்பின் உருவாக்கம் இடம்பெறவேண்டுமானால் இந்த அரசு தொடர்ந்து நீடிக்க வேண்டுமெனக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் அண்மையில் கூறியிருந்தார். இவரது கருத்தைப் பார்க்கும்போது கூட்டமைப்பின் ஆதரவு அரசுக்குத் தொடருமென்பது தெளிவாகின்றது.

இந்த நிலையில் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது அரசுக்கு ஆயுள்கெட்டி என்பது தெளிவாகத் தெரிகின்றது. மகிந்தவின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் கோபத்துடன் இடைநடுவில் வெளியேறியுள்ளார். இது மகிந்த பொறுமையிழந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது. அவரது முயற்சிகளில் ஏற்பட்ட தோல்விகளே இதற்குக் காரணமெனக் கூறலாம்.

### மகிந்தவுக்குச் சந்தர்ப்பம் இல்லை என்பதும் தெளிவாகிறது

அடுத்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதென்பது ஓரளவு உறுதியாகிவிட்டது. அவரது தரப்பினர் இது தொடர்பாகப் பேசுவதைத் தவிர்ப்பதிலிருந்து இதை ஊகித்தறிய முடிகின்றது. ஆரம்பத்தில் மகிந்தவின் சகோதரரான கோத்தபாய தாமே அடுத்த அரச தலைவர் வேட்பாளரெனக் கூறியிருந்தார். ஆனால் அவரது அறிவிப்புக்கு மகிந்த தரப்பிலிருந்தே எதிர்ப்புக் கிளம்பியது. வாசுதேச நாணயக்கார போன்றவர்கள் இதை வெளிப்படையாகவே எதிர்த்தார்கள்.

மகிந்தவுக்கும் இதில் உடன்பாடு இருக்கிறதென எண்ணத் தோன்றுகின்றது. இறுதியில் கோத்தபாயவின் விருப்பம் நிறைவேறவில்லை. பின்னர் பசில் ராஜபக்சவின் பெயர் அடிபட்டது. ஆனால், மகிந்தவின் குடும்ப உறுப்பினர்கள் அரச தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு வெளியிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. இதைக்கண்டு மகிந்த தரப்பு அஞ்சியதாகவே தெரிகின்றது. இப்போது அந்த விடயம் சற்றே அடங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.



அரசுக்கு எதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்கின்ற மகிந்தவின் முயற்சிகளும் பிசுபிசுத்துப் போய்விட்டன. பெரும் ஆரவாரத்துடன் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசுக்கு எதிரான பேரணி இறுதியில் தோல்யிலேயே முடிவடைந்துள்ளது. மகிந்தவை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை என்பதையே இது எடுத்துக்காட்டிவிட்டது. போர் வெற்றி என்ற சுலோகம் தொடர்ந்தும் மகிந்தவுக்கு உதவுமென எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் சிங்கள மக்கள் போர் வெற்றியை மறந்து பல நாள்களாகி விட்டன. அவர்கள் தற்போது வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதால் போரை நினைவில் கொள்வதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதைவிட மகிந்த காலத்தில் இடம்பெற்ற மக்கள் விரோத நடவடிக்கைகளையும் அவர்கள் மீட்டுப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

### பொருளாதார நெருக்கடிகள் நிவர்த்தி செய்யப் பட்டால் தற்போதைய அரசே ஆதரிக்கப்படும்

மகிந்த அரசில் பாதிக்கப்பட்ட பலரும் மகிந்த தரப்பின்மீது கடுமையான கோபத்திலுள்ளனர். தற்போதை கஸ்ரங்கள் நிலவிவருகின்ற போதிலும் மக்களால் அமைதியுடன் வாழ முடிகின்றது. பொருளாதாரக் கஷ்டங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டால் மக்கள் தற்போதைய அரசை ஆதரிக்கவே செய்வார்கள்.

இதேவேளை அரச தலைவர் மீதான கொலை முயற்சிச் சதியில் இந்திய உளவு அமைப்பான 'றோ' வைத் தொடர்புபடுத்தி வதந்தியைப் பரப்பியதில் மகிந்தவுக்குத் தொடர்பு இருப்பதாக இந்தியா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இது உண்மையாக இருக்குமானால் இந்தியாவின் முழு வெறுப்புக்கும் மகிந்த ஆளாகவேண்டிய நிலை உருவாகிவிடும். அண்மையில் சுப்பிரமணியன் சுவாமியின் அனுசரணையுடன் மகிந்த இந்தியாவுக்குச் சென்று அரச தலைவர்களைச் சந்தித்தார். இதனால் மகிந்த மீது இந்தியாவுக்கு நல்லெண்ணம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் மகிந்தவின் உண்மையான நிலைப்பாட்டைத் தற்போது இந்தியா புரியந்திருக்குமென நம்பலாம். அத்துடன் மைத்திரிக்கும், ரணிலுக்குமிடையே சமரசம் செய்து வைக்கின்ற முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது. இதனால் இந்தியாவின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

நடந்தவைகளையும், நடப்பவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது மகிந்த மீளவும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

தேவநாயகம் தேவானந்த்

# ஜெயலலிதாவின் ஈழ ஆதரவு நிலை கண்டு கலங்கிப்போனார் கருணாநிதி

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-50


இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் போர் நிறுத்தம் கோரித் தமிழகம் முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. சென்னை முதல் குமரிவரை மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. மக்களின் உணர்வுக் கொதிநிலை தொடர்ந்த வண்ணமிருந்தது. இது தி.மு.காவுக்கு எதிரான நிலையை வலுவாக்கியது. இதனால், தி.மு.க சார்பில், இளைஞர் சங்கிலிப் போராட்டம் மற்றும், ஸ்ராலின் தலைமையில் சென்னையில் பேரணி நடத்தப்பட்டது.

**ஜெயலலிதாவின் திடீர் மாற்றம்**

"போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம் தான்" என்று கூறிய ஜெயலலிதா, பின்னாளில் தமிழகத்தில் காணப்பட்ட ஈழ ஆதரவு நிலைப்பா ட்டைக் கண்டு தன்னிலையை மாற்றிக் கொண்டார். அப்போது சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக ஜெயலலிதா இருந்தார். ஈழத்தில் மக்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்ற கோசத்துடன் எழுந்திருந்த தமிழகம் தழுவிய ஈழ ஆதரவுக்குத் தனது ஆதரவையும் வழங்கினார். அதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். ஈழத்தில் போர்நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று வலியுறுத்தி நடத்தப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் பங்கு கொண்டார். உணவுதவிர்ப்புப் போராட்டக் களத்தில் உரையாற்றினார். அப்போதெல்லாம் கருணாநிதியின் செயற்பாட்டைக் கடுமையாகச் சாடினார்.

**பத்திரிகையாளர்களின் கேள்விக்குக் கருணாநிதி பதில்**

ஜெயலலிதாவின் ஈழ ஆதரவு மேடைப் பேச்சுக்கள் தொடர்ந்துகொண்டிருக்க, அதைப்பற்றிப் பத்திரிகையாளர்கள் கருணாநிதியிடம் கேட்கிறார்கள்,





**கேள்வி** : இலங்கைத் தமிழர்களுக்கான உணவு தவிர்ப்புப் போராட்டக்களத்தில் பேசிய ஜெயலலிதா திரும்பத் திரும்ப கருணாநிதி என்று பலமுறை குறிப்பிட்டது பற்றி என்ன கூறுவீர்கள்?

**கருணாநிதியின் பதில்** : நானும் ஜெயலலிதாவின் பேச்சை எடுத்து வைத்துக் கொண்டு அதில் எத்தனை முறை கருணாநிதி, கருணாநிதி எனக் குறிப்பிட்டுள்ளார் என எண்ணிப் பார்த்தேன். 46 முறை சொல்லியுள்ளார். கடவுளிடம் வரம் கேட்பவர், திரும்பத் திரும்ப அந்தக் கடவுள் பெயரையே சொல்லுவார்கள் அல்லது எழுதுவார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோல, கருணாநிதி என்ற பெயரை பலமுறை சொன்னால் உங்கள் பாவம் எல்லாம் தீரும் என்று யாராவது ஜெ.யிடம் சொல்லியிருப்பார்களோ? என்னவோ? என்று பதிலளித்தார்.

**கதாநாயகி நகைச்சுவை நடிகையாகி விட்டார்**

தொடர்ந்தும் பத்திரிகையாளர்கள் கருணாநிதியிடம் கேள்விகளைக் கேட்கிறார்கள்.

**கேள்வி:** இலங்கைத் தமிழருக்காக நான் உணவு தவிர்ப்பை மேற்கொண்டதற்குத் தமிழகம் மட்டுமல்ல, உலகமே வரவேற்றுப் பாராட்டி இருப்பதைக் கண்டு, கருணாநிதி கதிகலங்கி ஆடிப் போயிருப்பதை அவரின் அறிக்கை உணர்த்துகிறது என ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே?

**கருணாநிதியின் பதில்** : கதிகலங்கித் தான் போயுள்ளேன். ஒபாமாவும் கார்டன் பிரவுனும் தொலைபேசியில் பேசியிருப்பார்களே அதைச் சொல்லவில்லையா? கதாநாயகி நடிகை, கமெடி நடிகையாகி விட்டார் எப்படி? கஷ்டகாலம். என்று பதிலளித்திருந்தார். ஜெயலலிதாவும் அ.தி.மு.காவும் ஈழஆதரவு நிலைபாட்டுக்கு வந்தது கண்டு கருணாநிதி உண்மையில் கதிகலங்கியிருந்தார் என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டார்கள்.

**சாதகமான சூழலுக்காக் கருணாநிதி காத்திருந்தார்**

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் கட்சிகள் ஈடுபட்டிருந்தன. காங்கிரஸ் கட்சிக்கும் தி.முகாவுக்கும் எதிரான நிலைமை தமிழகத்தில் காணப்பட்டதால் அதைப் பயன்படுத்தி வெற்றி பெறும் நோக்கிலான செயற்பாடுகளில் தமிழகக் கட்சிகள் ஈடுபட்டிருந்தன. மத்தியில் பாரதிய ஜனதாக்கட்சிக் கூட்டணி, ஆட்சியைக் கைப்பற்றி விடுவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. ஆத்வானி பாரதிய ஜனதாக்கட்சியின் பிரதம வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் அ.தி.மு.க மற்றும் தி.மு.க கட்சிகள் தமது கூட்டணிகளை இறுதி செய்யும் நிலையில் இருந்தன. ஈழத்தின் போர் கூட்டணியை இறுதி செய்வதில் தீர்மான சக்தியாக இருந்தது எனலாம். இந்தக் காலகட்டத்தில் பத்திரிகையாளர்கள் கருணாநிதியிடம் கேட்கிறார்கள். நாடாளுமன்றத் தெர்தல் கூட்டணி இறுதி செய்யப்பட்டு விட்டதா?" என்று அதற்குக் கருணாநிதி சொல்கிறார். "இறுதி எனக் கேட்காதீர்கள், உறுதி செய்யப்பட்டு விட்டதா? எனக் கேளுங்கள். இறுதிக்கு உறுதியாகவே உள்ளோம்" என்று. அப்போது ஈழ ஆதரவு நிலைப்பாட்டில் இருந்த பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணி வைப்பதற்கான முயற்சிகளில் கருணாநிதி ஈடுபட்டிருந்தார். இதைப் பற்றியும் பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள். பா.ம.க தரப்பில் இரண்டு தரப்புகளிலும் பேசிக்கொண்டிருப்பதாக மீடியாச் செய்திகள் வந்து கொண்டிருக்கிறதே? என்று கேட்டார்கள். அதற்குக் கருணாநிதி சொன்னார் "மீடியா செய்தி அல்ல மீடியேட்டர்களின் செய்தி அது." இந்த அரசியல் சூழலில் தனக்குச் சாதகமான சூழலுக்காகக் கருணாநிதி காத்திருந்தார்.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# மக்களைப்பற்றியும் இந்த அரசியல்வாதிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

தமிழ் அரசியல்வாதிகள் ஆளுக்கொரு கட்சி ஆரம்பித்து தமிழர் அரசியலைச் சீர்குலைத்து விடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி புதிய கட்சியொன்றை ஆரம்பித்து விட்டார். தமிழ்த் தேசிய உணர்வாளர்களை ஒன்று சேர்ப்பதே தமது புதிய கட்சியின் அடிப்படை நோக்கமென அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தமது அரசியல் எதிர்காலம் தொடர்பாக இன்னும் சில தினங்களில் அறிவிக்கவுள்ளார். அரசியல் கலப்பில்லாத ஓர் அமைப்பெனக் கூறப்பட்ட தமிழ்மக்கள் பேரவை விக்னேஸ்வரனின் எதிர்கால அரசியல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்படும் கூட்டத்துக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது. கட்சி பேதமின்றி மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. இறுதியில் தமிழ்மக்கள் பேரவையும் அரசியல் சாக்கடைக்குள் வீழ்ந்து விட்டது.

இனிவரும் தினங்களில் வேறு சிலரும் புதிய கட்சியை ஆரம்பித்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

இந்த அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதற்கு முன்னர் மக்களின் எதிர்காலத்தையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர்களின் வரலாற்றில் ஒரு மோசமான கட்டத்தை அவர்கள் கடந்துகொண்டிருக்கிறார்கள். அடிமைகள் போன்றதொரு நிலையில் அவர்கள் காணப்படுகின்றனர். அவர்களது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இதே நிலை தொடருமேயானால் தமிழர்களுக்கென பூர்வீக நிலங்கள் இருக்க மாட்டாதென்பதைக் கூறத் தேவையில்லை. பொருளாதார ரீதியாகவும் தமிழர்கள் துன்பங்களை அனுபித்து வருகின்றனர். வேலையற்ற இளைஞர்கள் அடாவடித் தனங்களில் ஈடுபட்டு மக்களின் அமைதியைக் குலைத்து வருகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு எவராலும் முடியவில்லை. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தமிழ் மாணவர்களின் கல்வி நிலையிலும் அபிவிருத்தி காண வேண்டிய தேவை எழுந்துள்ளது. இவ்வாறு தமிழர்களின் தற்போதைய நிலை தொடர்பாக அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் இவை தொடர்பாகச் சிந்திக்காமல், தமது எண்ணத்துக்கேற்ப புதிய அரசியல் கட்சிகளை ஆரம்பிப்பதிலும் தமது எதிர்காலம் தொடர்பாகச் சிந்திப்பதிலுமே தமது காலத்தைக் கடந்துகின்றனர்.

இவர்கள் தாம் சார்ந்த மக்களையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தம்மைப் பதவிகளில் அமர்த்துவதற்கு அந்த மக்களின் வாக்குகளே தேவைப்படும் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

*பொ.தவமணிதேவி, அச்சுவேலி.*





## ஜமால் படுகொலை விவகாரம்

# "ஜமாலின் உடல் எங்கே என்று தெரியாது" - சவ...
# "விரிவான விசாரணை தேவை" - ஐரோப்பா...
# "முழு உண்மையும் வெளியிடப்படும்" -துரு...

**நியூயோர்க்.ஒக்.23**

**துருக்கியில் கொல்லப்பட்ட பத்திரிகையாளரான ஜமாலின் உடல் எங்கிருக்கிறது என்று தெரியாது எனச் சவூதி ... கூறியுள்ளது. ஜமால் கசோக்கி படுகொலைத் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் எ... லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன் ஜமாலின் கொலை குறித்த மு...மையும் வெளியிடப்படும் என்று துருக்கி அதிபர் எர்டோகன் தெரிவித்திருக்கிறார்.**

சவூதித்துதாரகர்துக்குள்போனபோதுகாணாமல்போன ஜமால்கசோஜி இறந்துவிட்டதாக சவூதி அரேபியா கூறியுள்ளது. இதுகுறித்து சவூதிவெளியுறவுத்துறைஅமைச்சர் அதெல் அல் ஜூபிர், 'பாக்ஸ் நியூஸ்' தொலைக்காட்சியில் கூறும்போது, "ஜமால் மோசமான முறையில் கொல்லப்பட்டிருப்பது பன்னாட்டு அளவில் கண்டனத்தைஏற்படுத்திஇருக்கிறது. ஜமால்கொல்லப்பட்டிருப்பதுமிகப்பெரியதவறு. அவருடையகொலைக்குச்சவூதி இளவரசர் முகமது பின் சல்மான்தான் உத்தரவிட்டார் என்பதை நான் மறுக்கிறேன்.

எங்களுடைய மூத்த புலனாய்வு அதிகாரிகளுக்கு ஜமாலின் கொலை குறித்துத் தெரியாது. ஜமாலின் உடல் எங்கு இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. ஜமாலின் கொலை தொடர்பாக நாங்கள் அனைத்து உண்மைகளையும் கண்டறிந்து குற்றம் செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கச் செய்வதற்குத் தீர்மானமாக இருக்கிறோம்" என்றிருக்கிறார். யாரோ தூண்டி விட்டதால் கூலிப்படையினர் அவரைக் கொன்றதாகச் சவூதி அரேபியா கூறியிருக்கிறது.

அத்துடன்இந்தக்கொலைக்கும்,தங்களுக்கும்சம்பந்தம் இல்லைஎன்றும்கூறியிருக்கிறது. ஜமால்கொலைசெய்யப்பட்டதை உறுதி செய்தாலும் அவரது உடல் எங்கு இருக்கிறது என்ற விவரத்தைச் சவூதி அரேபியா இதுவரைக்கும் சொல்லவில்லை. அவர் கொலை செய்யப்பட்டதைத் தான் நாங்கள் கண்டுபிடித்துள்ளோம். அவரது உடல்எங்குஇருக்கிறதுஎன்றுதெரியாதுஎன்றுகூறியுள்ளது. இதுசம்பந்தமாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறும்போது, சவூதிஅரேபியா இந்த விடயத்தில் பொய்சொல்கிறது. உண்மையைமறைக்கப்பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார். அத்தோடு ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகளும் சவூதிஅரேபியாவுக்குக்கண்டனம்தெரிவித்துள்ளதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்துள்ளன. ஜமால் படுகொலைதொடர்பாக விரிவான விசாரணைநடத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்தோடு இஸ்தான்புல்லில் ஞாயிற்றுக்கிழமை நடந்த பேரணியில் துருக்கி அதிபர் எர்டோகன் பேசும்போது, "நாம் அனைவரும் இங்கு நீதியை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இதன் மூலம் ஜமால் கொலையில்முழுஉண்மையும்வெளியாகும்". என்றிருக்கிறார். இவை சவூதிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

**பின்னணி**

கொலை செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ஜமால் அமெரிக்காவிலுள்ள 'வோஷிங்டன்போஸ்ட்' பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும் குறிப்பாக அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதிவந்தார். துருக்கியைச்சேர்ந்தபெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நி... வாரம் துருக்கியின் இஸ்தான்புல் நகரி... தூதரக அலுவலகத்துக்குச் சென்றவ... போனார். இந்த வழக்குத் தொடர்பாக... சேர்ந்த 15 பேரின்,பெயரை வெளியிட்டு ... தான் கொலைசெய்திருக்கிறது என்று து... கக் கூறியதுடன்,

இதற்கான காணொலிமற்றும்ஒலிப்பதிவ... துருக்கி வெளியிட்டிருந்தது. இதைச் சவூ... தது. சவூதி பொறுப்புக் கூறவேண்டும் ... அமெரிக்க அதிபர். அத்தோடு அமெரிக்... துறை அமைச்சரையும் சவூதிக்கு அனு... பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி சவுதி ... கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த ந... மையான நடவடிக்கை எடுக்கப்படும் ... எச்சரித்திருந்தார்.

## தாய்வானில் தடம்புரண்டது விரைவு ரயில்! 22பேர் சாவு, 148பேர் காயம்!

தைபெய்.ஒக்.23

தாய்வான் நாட்டின் இலான் பகுதியில் விரைவு ரயில் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில், 22பேர் சாவடைந்துள்ளனர். 148பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

தாய்வானின் வடகிழக்கு பகுதியில் உள்ள இலான் கவுன்ட்டியில் கடலோரத்தை ஒட்டியதாகச் செல்லும் வகையில் விரைவு ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் தலைநகரான தைபெயில் இருந்து டைட்டுங் நகரை நோக்கிச் செல்லும் ரயில்கள் இந்தப் பாதை வழியாகச் செல்கின்றன.

இந்த நிலையில் தைபெய் நகரில் இருந்து இந்தப் பாதை வழியாகப் பயணித்த ' புயுமா எக்ஸ்பிரஸ்' என்கிற விரைவு ரயில் டைட்டுங் நகரை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அதுக்சின்மா நிலையத்தின் அருகேயுள்ள டுங்ஷான் புறநகர் பகுதியை நெருங்கியபோது ரயில் பாதையில் இருந்து விலகியதால், தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அந்தரயிலின் முன்பகுதியில் இருந்த 8 பெட்டிகள் முற்றிலுமாகச் சரிந்து விழுந்தன. பின்னால் இருந்த 5 பெட்டிகள் எதிர்த் திசையை நோக்கி வீசப்பட்டன.

360க்கும் அதிகமான பயணிகளைச் சுமந்துவந்துகொண்டிருந்த அந்த ரயில் தடம்புரள்வதற்குச் சில நிமிடங்கள் முன்னதாகவே இயல்பு நிலைக்கு மாறாக குலுங்கியும், அதிர்ந்தும் ஓடிக் கொண்டிருந்ததாக அதில் வந்த சில பயணிகள் தெரிவித்துள்ளனர்.

## மாலைதீவு அதிபர் தொடுத்த வழக்குத் தள்ளுபடி!

மாலே.ஒக்.23

மாலைதீவில் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்திருந்தது. அந்தத் தேர்தலில் முகமது சோலி வெற்றி பெற்றதாகத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்தது.



அவருடைய வெற்றிக்கு எதிராக, அந்த நாட்டின் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீன் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அவருடைய மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மாலைதீவு முன்னேற்றக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட தற்போதைய அதிபர் அப்துல்லா யாமீன், எதிர்க் கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம் தோல்வியடைந்தார். 58.4 சதவீதம் வாக்குகளைப் பெற்ற முஹம்மது சோலி வெற்றிபெற்றதாக தேர்தல் திணைக்களம் அறிவித்தது.

இதனால், மாலைதீவின் புதிய அதிபராக இப்ராகிம் முகமது சோலி பதவியேற்க உள்ளார். இந்நிலையில், புதிய அதிபராகப் பொறுப்பேற்கவுள்ள முஹம்மது சோலியின் தேர்தல் வெற்றிக்கு எதிராக முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீன் கட்சி சார்பில் வழக்குத் தொடரப்பட்டது. வாக்குப்பதிவின்போது நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கையில் நடந்த குளறுபடிகளால்தான் முஹம்மது சோலி 58.4 சதவீதம் வாக்குகளை பெற்றதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருக்கிறது என்று இந்த வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்து வந்த உயர்நீதிமன்றின் 5 நீதிபதிகள், "முகம்மது சோலி வெற்றி பெற்றதாக வழக்கு தொடர்ந்த அப்துல்லா யாமீன் அதற்கான உரிய சாட்சியங்களை நிரூபிக்காததால் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறோம்" என்று தீர்ப்பளித்துள்ளனர்.

## சீ...

ஹொ... சீன... கடல்... யில்... உல... இன்... கோ... மார்... மிக... னப்... ஆகி... தற்... தும்... ப்பால... வில்... வரு... கின்... வில்... தில்... ஜி ஜ... எதிர்... பொ... பால... கடந்...



## ஜெருசலேம் ஆளுந... இஸ்ரேல் பொலிஸ்...

ஜெருசலேம்.ஒக்.23

ஜெருசலேம்.மாகாண ஆளுநர் அத்னன் காயித்தை இஸ்ரேல் பொலிஸார் கைது செய்துள்ளனர். பெயித் ஹனினா நகரில் இருந்து ஆக்கிரமிப்புக்குள்ளான ஜெருசலேமின் வட பகுதிக்கு ஆளுநர் மகிழுந்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவரது மகிழுந்தை இஸ்ரேல் பொலிசார் 3 மகிழுந்துகளில் சென்று வழி மறித்தனர். ஆளுநரை அதிரடியாகக் கைது செய்தனர்.

அவரை இரகசிய இடத்துக்கு அவர்கள் கொண்டு சென்றனர். அத்னன் காயித் கைது செய்யப்பட்டதன் பின்னணி என்ன என்பது குறித்த எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. ஜெருசலேமில் பாலஸ்தீன உளவுத்துறைத் தலைவர் ஜிகாத் அல் பாகிஹ், தனது பணிக்குச் சென்று கொண்டிருந்தபோது, அல் ஜுதெய்ரா கிராமத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் ஜெருசலேமுக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

’ - சவூதி
ப்பா
துருக்கி

னச் சவூதி அரேபியா
வண்டும் என இங்கி
ல குறித்த முழு உண்

விருந்த நிலையில், கடந்த
தான்புல் நகரிலுள்ள சவூதித்
தச் சென்றவர் காணாமல்
த் தொடர்பாகச் சவூதியைச்
வெளியிட்டு ஜமாலை சவூதி
றது என்று துருக்கி உறுதியா

ம் ஒலிப்பதிவு ஆதாரத்தைத்
. இதைச் சவூதி மறுத்து வந்
றவேண்டும் என்றிருந்தார்
நாடு அமெரிக்க அயலுறவுத்
வூதிக்கு அனுப்பியிருந்தார்.
சோக்கி சவுதி அரேபியாவால்
தால், அந்த நாட்டின் மீது கடு
டுக்கப்படும் எனவும் ட்ரம்ப்

மதக் குழுக்கள் இடையே மோதல்

# நைஜீரியாவில் 55 பேர் அநியாயச் சாவு அந்த நாட்டு அதிபர் கவலை தெரிவிப்பு!



அபுஜா.ஒக்.23
நைஜீரியாவில் இரண்டு தரப்புக்களாகப் பிளவுபட்டு நின்ற மத ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் 55பேர் அநியாயமாகச் சாவடைந்துள்ளனர். நைஜீரியாவின் வட பகுதியில் உள்ள கடுனா மாகாணத்தில் கசுவான் மாகாணி நகரில் உள்ள சந்தையில் இரண்டு மதங்களைச் சேர்ந்த சுமை தூக்குகிறவர்கள் தொழில் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு இடையே பிரச்சினை இருந்து வந்துள்ளது. இந்தப் பிரச்சினை பெரிதாகியதில் இந்த இரண்டு தரப்புக்களிலும் உள்ள மத ஆதரவாளர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.
இந்த மோதலியேலே 55 பேர் சாவடைந்துள்ளனர். இந்த மோதல் தொடர்பாக 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த மாகாணத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். அத்துடன் அந்தப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
“எந்த மதமும் அல்லது கலாசாரமும் வன்முறையை ஆதரிப்பது இல்லை. சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அமைதியும், நல்லிணக்கமும் நிலவுவது அவசியம், வெவ்வேறு மத நம்பிக்கை உள்ள மக்களிடம் நல்லிணக்கம் இல்லாதவரையில், நமது அன்றாடப் பணிகளை நாம் செய்து முடிப்பது சாத்தியம் இல்லாமல் போய் விடும். இந்த பிரச்சினையில், மதத் தலைவர்கள் சகிப்புத்தன்மையை ஊக்குவிக்க வேண்டும்; வேற்றுமையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்” என்று இந்த மத மோதல்கள் குறித்து அந்த நாட்டின் அதிபர் முகமது புகாரி கவலை தெரிவித்துள்ளார்.



# சந்திரனிலிருந்து விழுந்த கல் 18இலட்சம் டொலர்களுக்கு ஏலம்


நாசா.ஒக்.23
சந்திரனிலிருந்துவிழுந்த5.5கிலோ எடையுள்ள அரிதான வகை விண் கல் ஒன்று அமெரிக்காவில் நடந்த ஆர்.ஆர் ஏலத்தில் 18இலட்சத்து 12ஆயிரத்து 500டொலர்களுக்கு ஏலம் போயுள்ளது. இந்த விண்கல் ‘என்.டபிள்யூ.ஏ 11789’ என்று வகைப்படுத்தப்பட்டது. இதற்கு புவாக்பா அல்லது ‘நிலவுப்புதிர்’ என்று பெயர். கடந்த ஆண்டுதான் இது கண்டுபிடிக்கப்பட்டது. சந்திரனிலிருந்து நெடுங்காலத்துக்கு முன் இது விழுந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதன் பிறகு அது கால்மில்லியன் மைல்கள் பயணித்துப் பூமியை நோக்கி வந்து, வடமேற்கு ஆபிரிக்காவின் பாலைவனத்தில் விழுந்தது. அங்குதான் இது கண்டுபிடிக்கப்பட்டது. இது 6 பகுதிகளைக் கொண்ட விண்கல்லாகும்.

# சீனாவில் நிலக்கரி சுரங்கம் இடிந்தது 2 தொழிலாளர்கள் சாவு, 18 பேர் சிக்கித் தவிப்பு



பீஜிங்.ஒக்.23
சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கி 2 தொழிலாளர்கள் சாவடைந்தனர். 18பேர் உள்ளே சிக்கிக் கொண்டுள்ளார்கள். மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன. சீனாவின் யுன்செங் பகுதியில் லாங்யுன் நிலக்கரி சுரங்கம் உள்ளது. இங்கு இரவுக் கடமையின் நிமித்தம் 334 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். அப்போது தண்ணீர் வடிகால் பகுதிச் சுரங்கத்தில் திடீரென வெடிப்பு ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டதும் சுரங்கத்தினுள் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் அவசரம் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். பின்னர் சுரங்கம் இடிந்து விழத்தொடங்கியது. இடிந்து விழுந்த பகுதியில் 22 பேர் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டது. மீட்புக்குழுவைச் சேர்ந்த 170பேர் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் 2 தொழிலாளர்கள் சாவடைந்த நிலையிலும், 2தொழிலாளர்கள் உயிருடனும் மீட்கப்பட்டனர். மீதமுள்ள 18 பேரை மீட்கும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
ஒகஸ்ட் மாதம் தெற்குச் சீனாவில் ஏற்பட்ட சுரங்க வெடிவிபத்தில் 12 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகநீண்ட கடல் பாலம் சீனா – ஹொங்கோங்கை இணைத்து உருவாக்கம்



ஹொங்கோங்.ஒக்.23
சீனாவையும் ஹாங்காங்கையும் கடல் வழியாக இணைக்கின்ற வகையில் 56கிலோ மீற்றர்கள் நீளமுடைய உலகின் மிக நீண்ட கடல் பாலம் இன்று திறக்கப்படுகிறது. ஹொங்கோங்கிலிருந்து சீனாவுக்குக் கடல் மார்க்கமாகச் செல்லக்கூடிய உலகின் மிக நீண்ட பாலமான இதன் கட்டுமானப் பணி தொடங்கி 9ஆண்டுகள் ஆகிவிட்டன.
தற்போது அதற்கான பணிகள் முழுவதும் நிறைவடைந்த நிலையில் இந்தப் பாலத்தின் திறப்பு விழாவுக்காக சீனாவில் உள்ள சூஹாய் நகரம் தயாராகி வருகிறது. இன்று நடைபெறும் உலகின் நீண்ட கடல் பாலத் திறப்பு விழாவில் கலந்துகொள்ள சூஹாய் நகரத்தில் நடக்கும் விழாவுக்குச் சீன அதிபர் ஜி ஜின்பிங் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளை முதல் பொதுப் போக்குவரத்துக்காக இந்தப் பாலம் திறந்துவிடப்படும். இப்பாலம் கடந்த 2016 ஆம் ஆண்டே திறக்கப்பட இருந்தது. ஆனால்,மீண்டும் மீண்டும் ஏற்பட்ட தாமதங்களால் பாலத் திறப்பு தள்ளிப்போடப்பட்டது.
தெற்கு சீனா முழுவதும் 56,500 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ள கிரேட்டர் வளைகுடா பகுதிக்கான சீனா திட்டத்தின் முக்கிய ஒரு அங்கமே இது. இது ஹாங்காங் மற்றும் மக்காவு போன்ற 11 நகரங்களை உள்ளடக்கியுள்ளது, 68 மில்லியன் மக்களை இந்தப் பாலம் இணைக்கிறது. இந்தப் பாலம் திறக்கப்பட்டவுடன் சீனா ஹாங்காங் இடையேயான பயண நேரம் மூன்று மணியிலிருந்து 30 நிமிடங்களாகக் குறைந்துவிடும். பயணிகளும் சுற்றுலா பயணிகளும் மிக எளிதாக இந்தப் பகுதிகளை சென்றடைய பாலம் வழிவகுக்கும் என்று இந்தப் பாலத்துக் காகத் திட்டமிட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ளுநர் கைது
லிஸ் அதிரடி!




ஸ்ரேல்
நகரில்
ததிக்கு
போது
களில்
து செய்

றனர்.
என்ன
லை.
ஜிகாத்
போது.
ட்டார்.
சல்லப்

# ஏமனில் சவூதி கூட்டுப்படைகள் தாக்குதல்

## ஹவுதிக் கிளர்ச்சியாளர்கள் 46பேர் சாவு

சனா.ஒக்.23
ஏமன் நாட்டில் ஹவுதிக் கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து, சவூதி அரேபியக் கூட்டுப்படைகள் நடத்திய வான் தாக்குதலில் 46 ஹவுதிக் கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
ஏமன் நாட்டில் 2015ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டு அதிபர் மன்சூரினுடைய ஹாதிப் படைகளுக்கும், ஹவுதிக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நடந்து வருகிறது. ஹவுதிக் கிளர்ச்சியாளர்களை ஈரான் ஆதரிக்கிறது. அதே நேரத்தில் அதிபரின் படைகளுக்கு ஆதரவாகச் சவூதிக் கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இது ஹவுதிக் கிளர்ச்சியாளர்களுக்குச் சவூதி அரேபியா மீது தீராப் பகையை உண்டாக்கி உள்ளது. இதனால் சவூதி அரேபிய நகரங்களைக் குறிவைத்துக் ஹவூதிக் கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தி வந்தனர். இந்த நிலையில் நேற்றுக் ஹவுதிக் கிளர்ச்சியாள்ர்களைக் குறிவைத்து, சவூதி அரேபியக் கூட்டுப்படைகள் நடத்திய வான்வெளித் தாக்குதல்களில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.





# அதிவேகமாக முடிந்த 'பேட்ட'

அப்பர்ஸ்டார் ரஜினிகாந்தின் 'பேட்ட' படத்தின் படப்பிடிப்பு, 15 நாள்களுக்கு முன்னதாகவே முடிந்துவிட்டதாக ரஜினி தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.
நடிகர் ரஜினிகாந்த், விஜய் சேதுபதி, த்ரிஷா, சிம்ரன் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் கூட்டணியில், கார்த்திக் சுப்பராஜ் இயக்கி வரும் படம் தான் பேட்ட.
இந்தப் படத்தின் படப்பிடிப்பு முழு வீச்சில் நடந்து வந்த நிலையில், திட்டமிட்டதற்கு 15 நாள்களுக்கு முன்னதாகவே படப்பிடிப்பு முடிந்துள்ளது என ரஜினிகாந்த் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வு பற்றி இறைவனிடம் முறையிட கோயிலுக்கு சென்றேன்!
அங்கு தரிசன டிக்கெற் விலையும் உயர்ந்திருந்தது.



## மனிதன் மட்டும் ஏன் இப்படி..??

பறவைகள் எந்த மரங்களையும்
விலைக்கு வாங்கியதில்லை!
இருந்தாலும்..
மரங்கள் யாவும் பறவைகளுக்காகவே
வான் நோக்கி வளர்கின்றன!

நிலவு என்றும்
இரவைச் சேமித்துவைத்தில்லை!
இருந்தாலும்..
இரவு நிலவை மட்டுமே
எதிர்நோக்கியிருக்கிறது!

ஆடு, மாடுகள் யாவும்
தலையில் புல்லைக் கட்டிக்கொண்டு
மேயச்செல்வதில்லை!
இருந்தாலும்..
தாவரங்கள் இவற்றையே
பச்சைக் கொடிகாட்டி அழைக்கின்றன!

நதிகள் எங்கும்
முகவரி தேடி ஒதுங்கியதில்லை!
இருந்தாலும் கடல்
நதிகளுக்காகவே காத்திருக்கிறது!

வேர்கள் எப்போதும்
தன்மை விளம்பரம் செய்து
கொண்டதில்லை! இருந்தாலும்..
மழை என்றும்
வேர்களை மறந்ததில்லை!

ஆனால் மனிதன் மட்டும்..
எதை எதையோ விலைக்கு வாங்குகிறான்!
சேமித்து வைக்கிறான்!
உணவுமூட்டையைத்
தூக்கிக்கொண்டே திரிகிறான்!
முகவரியைத் தேடித்தேடி மயங்குகிறான்!



**சிறந்த எரிபொருள் எது?**
மின்சாரம்
எரிவாயு
மக்களின் வயிறு!

**அதிக மறதியுடையவர்கள் யார்?**
வயதானவர்கள்
அரசியல்வாதிகள்
மக்கள்!

**காலந்தோறும் ஊழல்?**
நேற்று இலட்சம்
இன்று கோடி
நாளை பில்லியன்!



**இன்றைய கல்வி?**
மனப்பாடம் செய்யும் இயந்திரங்களை உருவாக்குகிறது
பணம் ஈட்டும் கருவிகளைப் படைக்கிறது



**இனப்படுகொலை என்பது சிக்கன் பிரியாணி சாப்பிடும்போது கூடவே ஒரு முட்டையையும் சேர்த்துச் சாப்பிடுவது!**

**வாழ்க்கையில் நிம்மதி இல்லன்னா, கொசு கடிச்சாக் கூட அணுகுண்டு விழுந்தா மாதிரித்தான் இருக்கும்!**





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உயர்ந்த குறிக்கோளுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய நுட்பங்களை பயன்படுத்துவீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் செயல்களில் நியாய, தர்மத்தை பின்பற்றுவீர்கள். பலரும் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தரும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பொது பிரச்சினையில் கருத்து சொல்ல வேண்டாம். நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் பணிபுரிவீர்கள்.

**கடகம்:** சிலரது பேச்சால் அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பணவரவுக்கேற்ப செலவுகளைத் திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** வாழ்வில் புதிய நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உறவினர்களை மதிப்புடன் நடத்துவீர்கள். தொழில் வளம் பெற இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும்.

**கன்னி:** சாதுர்யகுணத்தால் தடைகளை வெல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள பணவரவில் சேமிப்பீர்கள்.

**துலாம்:** உங்களின் யதார்த்த பேச்சு பிறரை சங்கடப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம்.

**விருச்சிகம்:** உங்களின் யதார்த்த பேச்சு பிறரை சங்கடப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச் சுமை உருவாகும்.

**தனுசு:** உழைப்பின் அருமையால் உயர்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் கூடும். வீடு, வாகன வகையில் பராமரிப்பு பணி செய்வீர்கள்.

**மகரம்:** மனசாட்சிக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவது அவசியம். இலாபம் மிதமாக இருக்கும்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். தாராள பணவரவால் சேமிப்பு கூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**மீனம்:** மனதில் அதிருப்தி ஏற்படலாம். அந்தஸ்தை பாதுகாப்பதில் உரிய கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**பெற்றோல் விலைவாசி**




## சுடோகு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 3 | | 6 | | | 8 |
| | | 3 | | | | 1 | | |
| | | 8 | 5 | | 2 | 7 | | |
| | 4 | 7 | | 3 | | 6 | 9 | |
| 3 | | | | | | | | 1 |
| | 6 | 1 | | 7 | | 8 | 5 | |
| | | 4 | 2 | | 7 | 5 | | |
| | | 6 | | | | 2 | | |
| 9 | | | 1 | | 4 | | | 7 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 9 | 6 | 7 | 2 | 4 | 1 | 3 |
| 1 | 7 | 6 | 4 | 3 | 5 | 8 | 9 | 2 |
| 3 | 4 | 2 | 9 | 1 | 8 | 7 | 5 | 6 |
| 6 | 2 | 1 | 5 | 8 | 4 | 3 | 7 | 9 |
| 9 | 3 | 4 | 1 | 6 | 7 | 2 | 8 | 5 |
| 8 | 5 | 7 | 3 | 2 | 9 | 6 | 4 | 1 |
| 7 | 1 | 3 | 8 | 5 | 6 | 9 | 2 | 4 |
| 2 | 9 | 5 | 7 | 4 | 3 | 1 | 6 | 8 |
| 4 | 6 | 8 | 2 | 9 | 1 | 5 | 3 | 7 |



# செயலே சிறந்தது!



பச்சைமலைக் காட்டில் விலங்குகளும் பறவைகளும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தன. நேர்மையும் நீதியும் கொண்ட சிங்கம் ஒன்று ஆட்சி செய்து வந்தது.

அன்று முக்கியமான கூட்டம். வானிலை ஆராய்ச்சியாளரான தவளை, "நண்பர்களே! இன்னும் சில நாள்களில் நம் காட்டில் கடுமையான மழை பெய்யப் போகிறது. நான்கைந்து நாள்கள்வரை நீடிக்கலாம். காடு முழுவதும் வெள்ளம் சூழும் ஆபத்து இருக்கிறது" என்றது.

"கரடியே, வெள்ளத்திலிருந்து நம் நண்பர்களைக் காப்பாற்ற என்ன செய்யலாம்?" என்றது சிங்கம்.

"எனக்கு அவகாசம் கொடுங்கள்" என்று கரடி சொல்லும்போது, கழுகு வந்து இறங்கியது.

"நானும் எங்கள் உறவினரும் இருக்கும்போது என்ன கவலை? நாங்கள் கடுமையான மழையிலிருந்து தப்பிக்க என்ன செய்கிறோம் தெரியுமா?" என்று கேட்டது கழுகு.

"என்ன செய்கிறீர்கள்?"

"அரசே! மழை பெய்யும்போது விலங்குகளும் பறவைகளும் மழையிலிருந்து தப்பிக்க மறைவான இடத்தில் ஒளிந்துகொள்கின்றன. ஆனால் நாங்கள், மழை மேகங்களுக்கு மேல பறந்து சென்றுவிடுகிறோம். அதனால் மழை நீர் எங்களை நனைப்பதில்லை. மழை நிற்கும்வரை நாங்கள் அங்கேயே பறந்துகொண்டிருப்போம்" என்றது கழுகு.

"ஆஹா! அற்புதம்!" என்று கழுகைப் பாராட்டியது சிங்கம்.

"நன்றி அரசே! நம் தவளையார் இன்னும் சில தினங்களில் கடுமையான மழை பெய்ய இருப்பதாகச் சொல்கிறார் அல்லவா? மழை பெய்யும் முன்னரே நாங்கள் விலங்குகளையும் பறவையைகளையும் மேகங்களுக்கும் மேலே தூக்கிச் சென்றுவிடுகிறோம்."

கழுகின் பேச்சைச் சிங்கமும் நம்பிவிட்டது.

"அப்படியே செய்யலாம். காட்டிலுள்ள விலங்குகளையும் பறவைகளையும் நீங்கள் காப்பாற்றினால் நீங்கள் எதிர்பார்க்காத பெரிய பரிசு காத்திருக்கிறது" என்றது சிங்கம். அதைக் கேட்டு பறவைகளும் விலங்குகளும் கைதட்டின.

சில தினங்களில் வானில் கருமேகங்கள் திரண்டு வந்தன.

கழுகையும் அதன் உறவினர்களையும் அழைத்து வரும்படி சிங்கம் ஆணையிட்டது. சிறிது நேரத்தில் எல்லாம் வந்து சேர்ந்தன.

"கழுகே, மழை மேகங்கள் திரண்டு வருகின்றன. நீ சொன்னதுபோல காட்டிலுள்ள விலங்குகளையும் பறவைகளையும் மேகங்களுக்கு மேலே கொண்டு சென்றுவிடுங்கள்" என்றது சிங்கம்.

கழுகும் அதன் உறவினர்களும் விலங்குகளைத் தங்கள் கால் விரல்களால் பிடித்துத் தூக்க முயற்சி செய்தன. விலங்குகளைக் கழுகுகளால் தூக்கவே முடியவில்லை.

இலேசான மழைத் தூறல் ஆரம்பித்தது. கழுகின் பேச்சை இப்படி நம்பிவிட்டோமே என்று சிங்கம் கலங்கியது.

அப்போது வௌவால் வந்துசேர்ந்தது. "அரசே! இன்னும் கழுகுகளை நம்பிக்கொண்டிருந்தீர்கள் என்றால் நம் நண்பர்கள் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொள்வார்கள். நாங்கள் வசிக்கும் குகைகளைச் சுத்தம் செய்து தயாராக வைத்திருக்கிறோம். அனைவரும் அங்கே தங்கிக்கொள்ளலாம். உணவுப் பொருள்களையும் சேகரித்து வைத்திருக்கிறோம்!" என்றது வௌவால்.

"அரசே! வவ்வால் சொல்வது சரியான வழி. இப்போது நாம் அனைவரும் குகைக்குள் சென்று தங்கலாம். உண்மையில் மேகங்களுக்கு மேலே விலங்குகள்ளத் தூக்கிச் செல்வதற்குக் கழுகுகளால் இயலாது" என்றது கரடி.

குகைக்குச் செல்ல உத்தரவிட்டது சிங்கம்.

காட்டில் மூன்று தினங்கள் கடுமையான மழை பொழிந்தது. வெள்ளம் சூழ்ந்தது. ஆனாலும் விலங்குகளும், பறவைகளும் எந்தவிதப் பாதிப்பும் இன்றி, வௌவாலின் குகைக்குள் தங்கியிருந்தன. இரண்டு தினங்களில் வெள்ளம் வடிந்தது. எல்லாம் வெளியே வந்தன. அங்கே வந்த கழுகு, "அரசே! மழைக்குப் பாதுகாப்பாக இருந்தீர்களா?" என்று கேட்டது. கழுகின் பேச்சுச் சிங்கத்துக்குக் கோபத்தை வரவழைத்தது.

"வௌவாலின் குகைக்குள் நாங்கள் பாதுகாப்பாகவே இருந்தோம். வீண் பேச்சுகளைவிடச் சிறிய செயல் பெருமைக்குரியது. இனி என் கண்களில் படாதவாறு வாழுங்கள்" என்று ஆணையிட்டது சிங்கம்.

சிங்கத்தின் ஆணைக்குப் பயந்த கழுகும் அதன் உறவினர்களும் அன்றிலிருந்து காட்டிலிருந்து வெளியேறி, மலைகளில் வசிக்கத் தொடங்கின.


## உளநலம் காப்போம்

1. ஒக்ரோபர் 10 உலக உளநல தினமாகும்
2. உளநலம் என்றால் எம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சம்பவங்களால் ஏற்படும் மனத்தாக்கங்களுக்கு (மன அழுத்தங்களுக்கு) மன நிறைவுடன் பொருத்தப்பட்டை மேற்கொள்ளும் திறமையே உளநலம் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.
3. உளநலம் உள்ளவர்கள் வாழ்க்கையில் எதிலும் சாதகமான மனப்போக்கைக் கொண்டிருப்பர்.
4. மிகுந்த நல்லிணக்கம் உடையவராகவும், பிறரைப் பற்றிக் குறை கூறாமலும், மனநிறைவுடையவராகவும் இருப்பர்.
5. தம்முடைய குறை, நிறைகளை அறிந்தவராகவும், மகிழ்ச்சியும் சகிப்புத்தன்மையும் உடையவராக இருப்பர்.
6. ஆரோக்கியமான வாழ்வுக்கு உடல்நலத்தைப் போல உளநலமும் முக்கியமானதாகும்.
7. உளநலம் பாதிக்கப்பட்டால் உடல் நலமும் பாதிக்கப்படும்.
8. சிறுவர், இளம் வயதினர், முதியோரென வயது வேறுபாடின்றி இந்த நோய் அனைத்து வயதினரையும் பாதிக்கின்றது.
9. நீண்ட கால கவலை, தொழில் இன்மை ஏற்றம், ஏக்கம், தொடர்ச்சியான தோல்வி, மதுப்பழக்கம் நம்பிக்கைத் துரோகத்தைத் தாங்க முடியாமை , எதிர்பார்க்கும் அன்பு கிடைக்காமை, தொடர்ச்சியான புறக்கணிப்பால் தனிமைப்படுத்தப்படல், வாழ்க்கையில் பிடிப்பில்லாமை போன்றவையே உளநலப் பாதிப்புகளுக்குக் காரணங்களாகும்.



## விலங்குகளும் தாவரங்களும் இல்லாமல் மனிதர்களால் வாழ முடியுமா?

அனைத்து விதமான உயிரினங்களும் சேர்ந்து வாழ்ந்தால்தான் அது பூமியாக இருக்கும். உயிரினங்கள் ஒன்றை இன்னொன்று சார்ந்து வாழக்கூடியவையாகவே இயற்கையாக அமைந்துள்ளன. நீங்கள் சொல்வதுபோல், தாவரங்களும் விலங்குகளும் இல்லை என்றால் மனிதர்கள் உணவை எப்படிப் பெறுவார்கள்? தாவரங்களிலிருந்தும் விலங்குகளிலிருந்தும்தானே உணவைப் பெற்றுக் கொள்கிறோம். இவை இரண்டும் இல்லை என்றால், நாம் எவற்றைச் சாப்பிட முடியும்?தாவரங்களும்,விலங்குகளும் இல்லாவிட்டால், பூச்சிகளும் பறவைகளும்கூட வாழ முடியாது. ஆனால், மனிதர்கள் இல்லாமல் தாவரங்களாலும் விலங்குகளாலும் நிம்மதியாக வாழ முடியும்!






## ரஷ்யா




1. நிலப்பரப்பில் உலகின் மிகப் பெரிய நாடு. ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பரவியிருக்கிறது.
2. 1917ஆம் ஆண்டு மக்கள் புரட்சியால் ஜார் மன்னரின் ஆட்சி அகற்றப்பட்டது. சமூக, பொருளாராத விடயங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.
3. புரட்சிக்குப் பின் ஏற்பட்ட பொதுவுடமை அரசின் முதல் தலைவராக லெனின் பொறுப்பேற்றுக்கொண்டார்.
4. மட்ரியோஷிகா பொம்மைகளின் தாயகம்.
5. சைபீரியப் புலி மிகவும் பிரபலமான விலங்கு.
6. தனிம அட்டவணையை (Periodic table of elements) உருவாக்கிய டிமிட்ரி மெண்டெலீவ் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
7. முதலில் விண்வெளியை அடைந்த யூரி ககாரினும், விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் வாலண்டீனா தெரஸ்கோவாவும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.
8. ஒரு காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் இந்த நாட்டினரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.
9. மரியா ஷெரபோவா (டென்னிஸ்), காஸ்பரோவ் (செஸ்) போன்ற உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.
10. தனது ஆதர்ஸ எழுத்தாளராகக் காந்தி கருதிய எழுதிய லியோ டால்ஸ்டாயும் இந்த நாட்டுக்காரர்தான்.



# சமூக இணைவும் குடும்பங்களின் பேண்தகு நிலையும்

அன்ரனிபீற்றர்



இன்றைய காலத்தின் சமூக இணைவு என்பது பன்முகத் தன்மை உடையதாய் மாற்றங் கண்டுள்ளது. சமூகங்களிடையேயும், அங்கு அங்கத்துவம் பெறுகின்ற ஒவ்வோர் தனிமங்களிடையேயுமான ஊடாட்டம் என்பதும் கனதியின்றிக் கட்டமைவு பெற்றுள்ளது.

வரையறைகளும்,வரைவிலக்கணங்களும் உடைவு பெற்றுள்ளன.நவீனத்துவங்களின் உள்வருகையும், அவை தொழில்நுட்ப அதீதங்களோடு ஒன்று கலந்து பரிணாமம் செய்கின்ற தீமைகளும், சமூக அபிவிருத்தியின் சமனிலைகளைக் குலைவுறச் செய்கின்றன.சமூக வளர்ச்சியின் முக்கிய பங்குதாரர்களான இளையவர்களை அறிவுநிலையிலிருந்து கீழிறங்கச் செய்கின்றன.சொற்கேண்மையற்று தன்னிலையிழந்து தேடலற்று அங்கலாய்க்கவும்,பரிதவிப்போடு அலைவுறவும் பணிக்கின்றன. இவையனைத்துமே சிந்தனைக்குரிய ஒன்றாகவே மாற்றங்கண்டுள்ளன.

இந்தநிலையிலே சமூகம் என்ற பேண்தகு நிலைகள் இன்றையை காலத்தின் வழியே சீரழிவுகளைக் கண்டுகொண்டுள்ளன. அங்கு நிலைபெறுகின்ற மக்களும் தங்களின் எதிர்கால வாழ்வை எண்ணிக் கவலை கொள்கின்றனர். நடப்பவைகள் அனைத்துமே நல்லவைகளாகத் தோன்றவில்லை. ஒருவருக்கொருவர் நல்லவைகளையும் தீயவைகளையும் கதையாடிப் பகிர்ந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

இந்தச் செயல்நிலைகளின் போக்கு எதற்கானது எனத் தங்களுக்குள்ளாகவே சலனம் கொள்கின்றனர்.கேள்விநிலைக்குட்படுகின்றனர். இவை மூத்தோரின் குரலாக மேலெழுந்து அவர்களின் சமூகப்பற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவற்றுக்கான முதன்மை மூலங்களையும் எவராலும் அறியமுடியாதுள்ளது.

**குடும்பங்களின் தற்கால நிலை**

இன்றைய சமூக நிலைகளின் பதிலுரைக் கணிப்பான்களாக இருப்பவை குடும்ப நிலைகளின் வெளிப்பாடுகளே. அவை ஒன்றையொன்று முரண்நிலைக்குட்படுத்தி பாதிப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. குடும்பங்களிடையேயான அன்புறவு நிலைகள் பாரம்பரிய மற்றும் பண்பாட்டு நிலை கொள்ளல்களை விடுத்து விலகல் அடைந்துள்ளன.

உலகமயமாதலின் போக்கினுள்ளாய் இழுபட்டுப் பயணிக்கும் நிலை தோன்றியுள்ளது. சமூகத்தில் இருந்து வேற்றுமைப்பட்டு இணைய வலைப்பின்னல்களின் ஈர்ப்பு விசைகளின் திணிப்பினுள் இன்றைய இளைய சமூகத்தவர்கள் கவர்ந்திழுக்கப்பட்டுள்ளனர்.

இயந்திரத்தனமான அவசரமும் வேகமும் பெற்றோர்,பிள்ளைகள்,உறவினர்,சமூகத்தவர்கள் என அத்தனைபேரிடையேயான ஆளிடைத் தொடர்புகளும் குறைந்து செல்கின்றன. பிள்ளைகள் பெற்றோரின் அன்பையும், ஆதரவையும் எதிர்பார்க்கின்றனர். அவை கிடைக்காத சந்தர்ப்பங்களிலே தன்னிலையான தீர்மானங்களை எடுத்து வாழ்வியலைத் தொடர்கின்றனர்.குடும்பங்களிடையேயான அமைதியுறலையும்,சீர்மைத்துவமான வாழ்வியல்ப் பயணங்களையும் இடையிட்டேனும் கண்டுகொள்ளுதல் அரிதாகவே அமைந்துள்ளது.

**பிள்ளைகள் தொடர்பில் பெற்றோரின் நிலைப்பாடு**

பிள்ளைகள் குறித்தான பெற்றோரின் நிலை அவலங்களையே அதிகம் சார்ந்திருக்கிறது.நேரமின்மை பிள்ளைகள் மீதான அக்கறையீனத்தை அதீதப்படுத்தியுள்ளது. பிள்ளைகளின் கல்விஅடைவு தொடர்பில் கேட்டறியவும், பாடசாலை பற்றி ஆசுவாசமாகக் கதையாடவும், அவர்களின் பிரச்சினைகளைக் கேட்கவும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றவும் பின்தங்கிவிடுகின்றனர். அல்லதுபோனால் பெற்றோர் தம் பிள்ளைகளைப் பாகுபாட்டுடன் நடத்துகின்றனர்.இவைதாண்டிபிள்ளைகளை விடவும் தமது தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

கடமையிலிருந்து வீடு திரும்பியதும் பொழுதுபோக்குச் சாதனங்களை அரவணைத்துக்கொள்கின்றனர்.

அதனோடே அதிக நேரத்தையும் செலவிடுகின்றனர்.தற்காலத்தின் வழியே இந்தநிலைகள் யதார்த்தமானவையாகக் காணப்படுகின்றன.யாரும் மறுதலித்திருக்க முடியாது.இந்தச் செயல்நிலைகளை ஊடாடும் பிள்ளைகள் தகுந்த கண்காணிப்பின்றி பிறழ்வு நிலைக்குச் செல்கின்றனர்.

தங்களுடைய வாழ்வியலின் பெரும்பகுதியையே பிள்ளைகள் பின்பற்றுகின்றார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதன்படியே பெற்றோர் தங்களை நல்வழிப்படுத்திக் கொள்ளவும்,பிள்ளை நேயத்தை மேம்படுத்தவும் கடமை செய்ய வேண்டும்.



குடும்பத்தில் பிள்ளைகளுக்குக் கிடைக்காத அன்பு, பாசத்தை மாற்றிடங்களில் பெற்றுக் கொள்ள முனை கின்ற போது, அங்கும் அவை கிடைக்காத சந்தர்ப்பங்கள் குறிப்பாக அக்கறையின்மை, பாரபட்சம்,பாராமுகம் என்பன அவர்களிடத்தே மனப் பிறழ்வை ஏற்படுத்திவிடுகின்றன.இந்தக் காரணங்களே சமூக விரோதச் செயல்களாகப் பரிணாமம் பெறுவதாக உளவளச் சீரமைப்பாளர்களும் குறிப்பிடுகின்றனர்.

**கட்புல சாதனங்களின் ஆதிக்கம்**

குடும்பங்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டாலும் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்ப்பதில் அவர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டிருக்கின்றனர்.சமூக வெளியை ஒத்து அங்கு குடும்பங்களிடையே உருவகம் பெறுகின்ற முரண்நிலைகளைக் கதாபாத்திரங்காளாக வெளிப்படுத்தும் தொலைக் காட்சித் தொடர்கள், பார்வையாளராக அமைவு பெறுகின்ற அதே சமூகக் கட்டமைவுத் தனிமங்களை பிறழ்வு நிலைக்கும்,மனக் கிலேசங்களை தூண்டும் இழி உணர் நிலைக்கும் உட்படுத்திவிடுகின்றன.

குறிப்பாக, 'குற்றம் செய்தவருக்கு (எதிரிக்கு) கொடுக்கும் தண்டனை முறைகள்,வார்த்தைகள்,தவறான உறவுமுறைகள், தாய்தந்தையை சகோதரர்கள்,உறவுகளைப் பகைத்துக் கொள்ளும் வழிமுறைகள், கணவன் - மனைவியைத் துன்புறுத்தும் முறைமை, வாள் வெட்டு, போதைப் பாவனை, அடிதடி,அடுத்தவர் சொத்தை அநியாயப்படுத்தும் முறை' என அவை நீண்டு செல்கின்றன. "கண்கெட்டபின்னர் சூரிய நமஸ்காரம்" போல தம் குடும்பம் சார்ந்த பிள்ளைகள் அவ்வாறான சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு தவறிழைக்கும் போதே பெற்றோராக உள் உணர்வு கொண்டு விழிபிதுங்குகின்றனர். இந்தக் கீழ்நிலைத் தொடரிகளில் இருந்து விடுபட்டு நல்வழிப்பட குடும்பங்களும்சமூகமும் விழிப்படைய வேண்டும்.இதுவே காலத்தின் அழைப்பாணை.

**விழிப்புணர்வும் தீர்வும்**

ஆக,ஆன்மிகப் பயணங்களில் குடும்பங்களின் ஒன்றுபடல் என்பது குறைவடைந்துள்ளது. குடும்பமாக ஆலயங்களுக்குச் செல்வதும் குறைந்து வருகின்றது.இந்தநிலமைகள் மாற்றங்காண வேண்டும்.மாதம் ஒருமுறையாவது ஆன்மிக தரிசனம் பெற வேண்டும். ஆன்மிகப் பயணம்,விழாக்கள்,கொண்டாட்டங்களுக்குச் செல்லும் போது அன்பும் உறவு முறையும் மேம்படும்.ஒற்றுமையும் பற்றுறுதியும் தானாகவே வந்து சேரும். வீட்டில் சேர்ந்து உணவு அருந்துதல், கூட்டாக கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதல், ஒருவருக்கொருவர் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு கடமை செய்தல் போன்ற ஆக்கபூர்வமான செயற்காரியங்கள் குடும்பத்தில் உடைவின்றிய ஒன்றிப்பை ஏற்படுத்தும்.

முன்பிருந்ததான மகிழ்வான வாழ்வும் உதயமாகும்.பெற்றோரின் கண்காணிப்போடு தொலைக்காட்சிகளை பார்க்கும் குழந்தைகளின் பார்வை வெளிகள் கட்டமைப்பு பெறும் போது பயனுள்ளவற்றைக் கண்டுமகிழலாம். அயலவர்களுடனும் அன்புடன் பழக வேண்டும். பொதுச்சேவைகளுக்குப்பிள்ளைகளையும் அழைத்துச் சென்று பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இவை தாண்டிப் பொது நலனில் அக்கறையுள்ளவர்களாக இருப்பது மாத்திரமன்றி குடும்ப நலனிலும்,குழந்தைகளின் வளர்ச்சியிலும் கரிசனை கொள்ள வேண்டும்.அவர்களை நல்வழிப்படுத்தும் சுழமைவுகளை உருவாக்கி முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். அனுபவ ரீதியில் தாம் கற்றுக்கொண்ட நற்படிப்பினைகளைக் குழந்தைகளின் மேம்பாடு சார்ந்து செயல்நிலைபெறச் செய்ய வேண்டும்.இதனூடு நற்சமூகத்தை உருவாக்கும் பணிகளில் பங்களிப்புச் செய்யலாம்.

## உடன் தேவை

விற்பனை முகவர்கள், பணவசூலிப்பாளர்கள், சாரதிகள் மற்றும் பட்டா வாகனங்கள் வாடகைக்குத் தேவை. (39758) (11,17)


**076 707 4609, 076 724 3457, 011 432 0237 (076 370 3776)**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட IT முதுமாணி, Consultant in A Leading New York Based Co இல் தொழில்புரியும் மணமகனுக்கு, வயது -'30-33, உயரம் -5'5" -5'8", மெல்லியவர், நிறம் முக்கியமல்ல, பல்கலைப் பட்டம் பெற்ற மணமகள் தேவை.

**754 252 0213 (அமெரிக்கா)** (CS/20701) (11,17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்

(முன்னாள் அரச அதிபர், முன்னாள் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர், ஸ்தாபகர் – மகாதேவா சைவச்சிறுவர் இல்லம்)

தாயின் மடியில் 01.05.1946

இறைவன் அடியில் 02.11.2017

திதி:– சதுர்த்தசி (23.10.2018)

அன்பாய் ஆதரவாய் ஆன்மாவாய் ஆணிவேராய்
எல்லாமாய் நீங்கள் தான் என்றிருந்த – எங்கள்
பொக்கிஷமே எம்மை நிலைகுலைய வைத்துச் சென்றதேனோ...
ஒரு நொடியும் மறவாது உங்களுக்காக ஏங்குகின்றோம்

என்றும் நினைவில்...

குடும்பத்தினர்.

இல.12,
சொர்ணவடலி லேன்,
கொக்குவில் மேற்கு. (CS/20746)(11.17)

**077 060 4950, 021 221 5751**

## மணிவிழா நாயகனை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்விப் புலத்தில் ஆசிரியராகவும்
ஆசிரிய ஆலோசகராகவும்
உதவிக் கல்வி பணிப்பாளராகவும்
பணியாற்றி இன்று 23.10.2018
ஓய்வுபெறும் உடற்கல்வி
ஆசிரியர்


### திரு. தவமணி சிவகுமார்

அவர்களது அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் அவரது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :- ஆசிரியர் கழகம்,
யா / கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 08 1953



இறப்பு 10 . 10 2018

### செல்லப்பா மகேந்திரன்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா மகேந்திரன் கடந்த (10.10.2018) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கணேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பவளராணியின் அன்புச் சகோதரனும் வஜீனா (லண்டன்), பிரசாத் (ஜேர்மனி), பாலதாஸ் (மதுவரிப் பரிசோதகர் - பருத்தித்துறை), சரிதாஸ் (முகாமைத்துவ உதவியாளர் - மாகாணத் திறைசேரி வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்திரன் (லண்டன்), அர்த்தனா (ஜேர்மனி), கஸ்மிலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபினா, சஜினா, ஆரவின், அபிலாஷ், ஆருத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் (மட்டுவில் தெற்கு) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி நுணாவில் குச்சம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
**077 4613739, 077 6575902**

## நினைவலைகள்

3 ஆம் ஆண்டு — 5 ஆம் ஆண்டு

தோற்றம் 26.12.1933



மறைவு 26.10.2015

தோற்றம் 20.05.1939



மறைவு 13.07.2013

### கப்டன் நாகலிங்கம் சோமசுந்தரம்

(முன்னாள் பிரதி அதிபர் – யா/ இந்துக்கல்லூரி)

### திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம்

(முன்னாள் பிரதி அதிபர் – வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

அன்புத் தெய்வங்களே!
பாசத்தின் உறைவிடமாய் பரிவுடன் எம்மையணைத்து – அறிவூட்டி
வாழ்க்கைக்கு வழிகாட்டிய தெய்வங்களே!
என்றும் உங்கள் நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.7, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (AJA/7863)(11,17)

குடும்பத்தினர்.

## வேலையாள் தேவை

புதுக்குடியிருப்பு பகுதியில் இயங்கிவரும் கணினி நிறுவனம் ஒன்றிற்கு "கணினி அறிவு நிரம்பிய சரளமாக ஆங்கில அறிவு உடைய ஆண்/ பெண் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**- 0044 7469 209270, 077 6344 960**

## பதினொராம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா

(JP)

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)

தோற்றம் 14.11.1924

மறைவு 25.10.2007

திதி:- 23.10.2018

ஆண்டுகள் பதினொன்று (11) சென்றாலும்
உங்கள் நினைவில் வாழும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

மேதேஸ் லேன்,
மானிப்பாய். (CS/20754)(11,17)

# ES Printers

GRAPHIC design

Flyers Letter heads Print Labels Plan Copy Copy DESIGNE Scanning Posters Brochures Annual Reports Business cards PADDING Booklet Binding Pull Up Banners Laminating Envelopes

## 2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்







பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள் சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு ( Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி, கிளிநொச்சி.

நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432

குறைந்த விலையில் உங்களுடைய சகல அச்சக வேலைகளையும் செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்...

021 492 7454 / 021 492 7471 / 021 492 7472

esprintersjaffna@gmail.com www.esprinters.com

## மக்கள்...

என்று வடக்கு மாகாண சபையின் இன்றைய இறுதி அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அலுவலகக் கொள்வனவுக்காக வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபாவில் உறுப்பினர்கள் வாங்கிய பொருள்கள் அனைத்தையும் அவர்களே வைத்திருக்க முடியும்.

வடக்கு மாகாண சபையின் 134ஆவதும், இறுதியுமான அமர்வு பேரவைச் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது. சம்பிரதாய அமர்வாக இது அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. முதலமைச்சரின் பிறந்த நாளையொட்டியதாக இந்த அமர்வு இன்றைய தினம் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த அமர்வில் தீர்மான வரைவுகள், கேள்விகள், விவாதங்கள் எதுவும் இருக்கா என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் இரண்டு தீர்மான வரைவுகள் நிகழ்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை கீதத்துக்கான அனுமதியும் இன்று பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இதன் பின்னர் அவைத் தலைவரின் இரண்டு தீர்மான வரைவுகள் சபையில் முன்வைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண சபையின் ஆரம்ப அமர்விலிருந்து இன்றைய இறுதி அமர்வு வரை சமூகமளித்த, மாகாணசபை உறுப்பினர்களும் அவர்களது உதவியாளர்களும் மாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந்தும் வருவதால் அவர்களுக்கான உணவு மற்றும் உபசரணை ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசியமானதால் அதற்கான செலவீனங்களை சபையின் செலவீனமாகக் கணித்து அனுமதிப்பது என்ற தீர்மான வரைவு முதலாவது.

இரண்டாவது தீர்மான வரைவாக, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு அலுவலக வசதிகள் இல்லாமையினால் 2015ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் காரணிகள் அடிப்படையான திட்டத்தின் கீழ் (சி.பி.ஜி) 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் ஏற்பாடு செய்து, உறுப்பினர்களுக்கு வழங்கிய பொருள்களைச் சபையின் பொருள் பதிவிலிருந்து நீக்கிவிடவேண்டும் எனவும், 2017ஆம் ஆண்டு முதல் அலுவலகப் படியாக மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதைக் கருத்தில்கொண்டு, இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட ஆரம்பித்ததிலிருந்து, புதிய உறுப்பினர்களுக்கு இந்த வழங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், ஏற்கனவே இந்த நிலைப்பாடே ஏற்றுக்கொள்ளப்பட்டமையாக இருந்ததை கருத்திற்கொண்டும் அவற்றை மீளப்பெறவேண்டியதில்லை என்றும் அந்த வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய சபை அமர்வில் ஒவ்வொரு உறுப்பினர்களும் 3 நிமிடங்கள் தொடக்கம் 5 நிமிடங்கள் வரையில் உரையாற்ற அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இணுவிலை...

இணுவில் பிரதேசத்தின் சில கிராமங்கள் எல்லை நிர்ணயம் என்ற பெயரில் கோண்டாவிலுடன் இணைக்கப்படவுள்ளது. குமாரலிங்கம் வீதி ஊடான பரந்த பிரதேசம் கோண்டாவிலுடன் இணைக்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்று தெரிவித்தே கவனவீர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.

இணுவில் சந்தியில் இருந்து உடுவில் பிரதேச செயலகம் வரை வாயை வெள்ளைத் துணியால் கட்டியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். "எல்லை நிர்ணயம் என்ற பெயரி இணுவிலைப் பிரிக்காதே", "இணுவிலின் ஒரு பகுதியைக் காணவில்லை", "இணுவிலைக் கண்டீரா?" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஊர்வலமாகச் சென்றவர்கள் ஏந்தியிருந்தனர்.

பிரதேச செயலகத்தை அடைந்ததும் தமது கோரிக்கைகள் அடங்கின மனுவை பிரதேச செயலரிடம் கையளித்தனர். (ற-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 07 . 04 . 1937

உதிர்வு 23 . 09 . 2018

திருமதி

## இராசமணி சுவாமிநாதபிள்ளை

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (23.10.2018) அன்னாரது கொக்கன்வளவு இணுவில் இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



மண்ணில் 02 . 04 . 1953

விண்ணில் 04 . 11 . 2018

## திருமதி சரசரத்தினம் புலேந்திரலிங்கம்

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர், உபஅதிபர் வல்வை சிவகுரு வித்தியாசாலை)

ஈராறு மாதங்கள் ஆனதே - நீ இன்றி
நம் வாழ்வில் நிம்மதி போனதே
நாமாய் இல்லை இங்கு - நீ போனதால்
உன் நினைவு தரும் வேதனை நாளானது
காலன் உன்னை கயவன் வடிவில் கவர்ந்த நாள்முதல்
தாயின்றி தங்கிய குழந்தைகளாய்
அழுதழுது அலைகின்றோம் - நீ இல்லாது
நகரும் ஒவ்வொரு நாளும்
நதி நீராய் ஓடும் நினைவுகள் - நம்முன்
வேதனை தருகிறதம்மா !
உரமிட்டாய் எம் வாழ்வு சரியாது நிற்பதற்கு - நீ மட்டும்
ஏன் சரிந்தாய் எம்மோடு வாழாமல்!

நாளை (24.10.2018) புதன்கிழமை நடைபெறும் கிரியைகளும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக் குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகள் புவிதா,
கணவர் புலேந்திரன்,
சகோதரி கனகி

வெள்ளைச்சி வளவு,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
077 543 7470

(ACO 325/15/17)



## தேவை

பில்கிளாக். பொதியிடல். உதவியாளர். பழகவிரும்புவர். சமையல் என்பவற்றுக்கு பெண்கள் தேவை.

**தொடர்பு - 077 174 6101**



## வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

ஜெயந்தி நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்கள் விண்ணப்பங்களை **31.10.2018** இற்கு முன்பதாகப் பதிவுத் தபால் மூலமாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பாடங்கள்**

நடனம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சங்கீதம்

**குறிப்பு :-**

- ஆறுமாத காலத்துக்கு தகுதிகாண் காலத்துள் வைக்கப்படுவர் அதன்பின்பே நிரந்தரமாக்கப்படுவர்.
- இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப்பத்திரங்களின் நிழற் பிரதிகளுடன் 31.10.2018 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கிராம சேவையாளர், உதவி அரச அதிபர் குணநல நற்சான்றிதழ், வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி**

**பொன்.நித்தியானந்தம்,**
**தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இல:- 021 492 3118**
**மின்னஞ்சல் முகவரி :- rasa46@yahoo.com**

(AJA/8125)(11.17)


## மரண அறிவித்தல்

ஜனனம் 03 . 02 . 1936



மரணம் 21 . 10 . 2018

திருமதி.

## சிவயோகமலர் மாணிக்கராஜா

மானிப்பாயை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவயோகமலர் மாணிக்கராஜா அவர்கள் 21.10.2018 அன்று சிவபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற சின்னையா சின்னம்மா ஆகியோரின் அன்பு புதல்வியும், மாணிக்கராஜாவின் மனைவியும், பிரபாகரன் (Australia), சுகந்தி (Denmark), சுமதி, ஜெயந்தி, மாலதி, சசிகரன் (Swize), சுதாகரன் (uk), ரேவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அம்பிகா (Australia), கஜேந்திரன் (Denmark), ரட்ண குமார், வாசவன், நளாஜினி, கவிதா, சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், றொசானி, ஆசிரித்தா, கரன், கரி, சஞ்ஜீவ், ஜீவினி, யுகெஸ், கிஷாயன், ரஸ்மிதா, நிதீஷ், தரனீஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். மேலும் இவர் காலஞ்சென்ற நடராஜா செல்வரட்ணம் துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்; காலஞ்சென்ற இராசமலர் மற்றும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் பிரியமான மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக 23.10.2018 இன்று காலை 9 மணிமுதல் இரவு 8 மணிவரையும் வைக்கப்பட்டு அதன்பின் 24.10.2018 புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் கிரியைகள் நடைபெற்று 1 மணியளவில் பூதவுடல் கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

**தகவல் : பிள்ளைகள்** **0778105102**

### அரசமைப்புச்...

என்றும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 27ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரிய வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அதற்கு முன்னர் பொலிஸ் ஆணைக்குழு உள்பட சிவில் பிரதிநிதிகளின் நியமனத்துக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆயுள் காலம் இந்த மாதம் 14ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி புதிய உறுப்பினர்களை நியமிக்கும்வரை தற்போதைய உறுப்பினர்கள் பொலிஸ் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று கூறப்படுகின்றது. (ற-21)














## மரண அறிவித்தல்

### திருமதி ஞானகலாவல்லி வாரித்தம்பி

*(ஞானம் ரீச்சர் - ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியை)*



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானகலாவல்லி வாரித்தம்பி நேற்று (22.10,2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா (தபாலதிபர்) - செல்வலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற ம. வாரித்தம்பி (கூட்டுறவு உதவி ஆணையாளர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைகுந்தநாதன், ஸ்ரீரங்கநாதன், மற்றும் அருணகிரிநாதன் (கனடா), காலஞ்சென்ற சோமகலாவல்லி மற்றும் சுந்தரகலாவல்லி (கனடா), கருண்ணகலாவல்லி (கனடா), சற்குரு நாதன் (கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சி. இரசம்மா, வி. குஞ்சுத்தம்பி, வி. கோபாலகிருஷ்ணன், வி. கைலயாபதி, சி. தங்கராணி, சி. கணேசமூர்த்தி, தே. கலாவதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் க. சத்தியநாதன், திருமதி மகேஸ்வரன் இராஜேஸ்வரி ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும் நிசாந்தன் (சிங்கப்பூர்), தர்சிகா (லண்டன்), சுகந்தன் (புங்குடுதீவு மகா வித்தியாலய ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆயுசனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வரணி, மீசாலை வடக்கு.**
**கொடிகாமம்.**

**தகவல்: வி. கோபாலகிருஷ்ணன்**
**(மருமகன் - 077 254 2828)**

### புலிகளின்...

அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான தீவிர விசாரணைகளைப் புலனாய்வுப் பிரிவுகள் தொடக்கியுள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

மாபெரும் மீழெழுச்சி தலைவன் வழியில் மக்கள் பேரவைத் தலைவன் கைகளைப் பலப்படுத்துவோம் எனப் குறிப்பிடப்பட்டு பின்னணியில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட அழைப்பிதழே வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருள் ஒருவரான மருத்துவ நிபுணர் லக்ஸ்மனின் ஒளிப்படமும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழ்கள் மக்கள் பேரவையால் அனுப்பப்பட்டவையா என மருத்துவர் லக்ஸ்மனைத் தொடர்புகொண்டு உதயன் பத்திரிகை வினவியது. கேள்வியை முழுமையாகக் கேட்ட பின்னர் "தற்போது 'பிசி'யாக இருக்கிறேன்" என்றுகூறி அழைப்பைத் துண்டித்தார் அவர்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டமும் முதலமைச்சர் விக்கினேஸ்வர னின் எதிர்கால அரசியல் தொடர்பான அறிவிப்பும் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த அழைப்பிதழ் வெளிவந்திருக்கிறது.

அழைப்பிதழ் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பலருக்கும் அரச அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புலிகளை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்கும் பேரவை மற்றும் முதலமைச்சரின் வேலை இதுவென்று ஒரு சாராரும் முதலமைச்சரின் தனித்த அரசியல் பயணத்தைக் குழப்பும் முயற்சி இது வென்ற மற்றொரு சாராருமாகக் கருத்துத் தெரிவிக்கின்றபோதும் உத்தியோகபூர்வமான தகவல்கள் எவையும் இதுவரையில் வெளியாகவில்லை.

(உ-5)

### றோவை....

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோரைக் கொலை செய்யும் சதி தொடர்பில் இந்திய உளவுப் பிரிவான றோவைத் தொடர்புபடுத்திச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்திய உளவுப் பிரிவான றோ தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார் என்று கூறப்பட்ட நிலையில் அவர் அதை மறுத்திருந்தார்.

அரச தலைவர் கொலைச் சதி தொடர்பில் இந்திய உளவுப் பிரிவான றோவை இணைத்து ஐக்கிய தேசியக் கட்சியினரே செய்திகளை வெளியிட்டு வந்தனர். இந்தியாவுக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்தி நாட்டில் குழப்பத்தைத் தோற்றுவிக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிடுகின்றது - என்றார். (ற-21)


## வேலை வாய்ப்பு

இனிப்பு வகை, கச்சான் அல்வா, மிக்சர், போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு **முகாமையாளர், மேற்பார்வையாளர், அனுபவமுள்ள தொழிலாளர்கள், பழக விரும்புவோர் உடனே தேவை.**

**தொடர்பு - 077 401 4328, 077 343 2522**
இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.



## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஒரு பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 179 6097**



## வீடு வாடகைக்கு தேவை

ஆறுபேர் கொண்ட குடும்பத்திற்கு நெல்லியடி, பருத்தித்துறை பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு - 077 078 0778**

# வாள்வெட்டுடன் தொடர்டைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.23

கோண்டாவில் மேற்கு தாவடி உப்புமடம் சந்திப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் மற்றும் அங்கு தரித்துநின்ற முச்சக்கரவண்டி என்பவற்றின்மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று மாலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் படி குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடைபெற்ற அன்று பதிவு செய்யபப்பட்ட மோட்டார் சைக்கிள் இலகத்தை வைத்தே சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணை களின் பின்னர் அவர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இரண்டு உந்துருளியில் வருகை தந்த ஐந்து பேர் கோண்டாவில் மேற்கு தாவடி உப்புமடம் சந்திப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் மற்றும் அங்கு தரித்துநின்ற முச்சக்கரவண்டி என்பவற்றின்மீது நேற்று முன்தினம் தாக்குதலை மேற்கொண்ருந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. சம்பவ இடத்துக்கு கோப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (21,26,106)

## மறைமுகமாக...

கண்டறிந்தேன் அது சேனநாயக்கள் கட்சியாக இல்லை என்பதை. ஏனெனில் சேனநாயக்காக்கள் ஒருபோதும் முறைகேடாக நடந்ததில்லை, ஊழல் செய்ததில்லை. எதிர்காலத்திலாவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சேனநாயக்காக்கள் போன்ற தலைவர்கள் கிடைக்க வேண்டும் என்று நான் மன்றாடுகின்றேன். இப்படித் தெரிவித்திருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சரான டி.எஸ்.சேனநாயக்க உள்ளிட்ட தலைவர்களை நினைவுகூரும் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தற்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்தே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அரச தலைவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இடையில் முறுகல் வலுத்துவருவதன் வெளிப்பாடாகவே அரச தலைவரின் ரணில் மீதான இந்த நேரடியான தாக்குதலைக் கருத முடிகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர்.

நிகழ்வில் மைத்திரி ஆற்றிய உரை குறித்து அவரது செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசப்பற்று, நீதி, நியாயம், நேர்மை ஆகிய குணங்களைக் கொண்டிருந்த அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா ஆகியோர் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்ததுடன், ஊழல் மோசடி போன்றன அவர்களிடம் சிறிதளவேனும் காணப்படவில்லை. உண்மையான தேசாபிமானத்துடன் ஊழல், மோசடி, திருட்டு, வீண்விரயமற்ற உன்னத பண்புகளால் அன்று ஐக்கிய தேசியக் கட்சி பிரபலமான, வலுவான அரசியல் கட்சியாகக் கட்டியெழுப்பப்பட்டது - என்றார் மைத்திரி. (உ-5)

## தேர்தலை...

துள்ளார். ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

அசாதாரண நிலைமைகளை தவிர்த்துக் கொள்ளவும் உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவது அவசியம். நாட்டின் சட்டத்தை மதித்து செயற்படுவது ஒவ்வொருவரினதும் கடமை. பதவிக்காலம் முடிவடைந்த உடனேயே அடுத்த தேர்தலை நடத்துவது அவசியமானது.

தேர்தல்களை காலதாமதமாக்கும் நிலை, இலங்கையில் மட்டுமன்றி தமது நாட்டிலும் ஏனைய சில நாடுகளிலும் காணப்படுகின்றது - என்றார். (ற-21)

## போர்க்...

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் தலைவர் ஜீ.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

போர்க் குற்றத்தை பன்னாட்டு நீதிமன்றின் துணையுடன் விசாரிக்க இலங்கை அரசு ஐ.நாவில் இணங்கியுள்ளது. அவ்வாறு விசாரணை வரும்போது அரசின் இந்தச் செயற்பாடு போர்க் குற்றத்துக்கு ஒரு சாட்சியாக அமையும்.

இலங்கை அரசு முழு இராணுவத்துக்கும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

பெரும் போர்க் குற்றச்சாட்டிற்கு அமையமாலியிலிருக்கும் கலன அமுனுபுரவை இலங்கைக்கு அழைத்து வர அரசு இணங்கியுள்ளது. இறுதிப் போரில் 58ஆவது படைப்பிரிவு பெரும் போர்க் குற்றங்களை இழைத்தது என்று குற்றம் சுமத்தப்படுகின்ற நிலையில் இவர் 58ஆவது படைப்பிரிவில் பணியாற்றி இருந்தார்.

மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தியமை, சரணடைந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை சித்திரவதை செய்து கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த குற்றச்சாட்டுக்களை யார் முன்வைக்கிறார்கள் என்பது தொடர்பாக இலங்கை அரசு ஆராயவும் இல்லை. அந்தக் குற்றச்சாட்டுக்களை சுயாதீனமான மக்களோ, அல்லது அமைப்புக்களோ சுமத்தவில்லை - என்றார். (ற-21)

## வவுனியாவில்...

புரத்தில் வசிக்கும் 28 வயதுடைய இளைஞர் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, ஆச்சிபுரத்தில் வசிக்கும் இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா நகரில் இருந்து ஆச்சிபுரம் சென்றுள்ளார். கோவில்குளம், சிவன்கோயிலுக்கு அருகே இளைஞரை வழிமறித்த 8 பேர் கொண்ட குழு வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். முன்விரோதம் காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-110)

## 152 கிலோ...

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறைக் கடற்படையினர் அதிகாலையில் சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மாதகல் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற படகு ஒன்றை அவதானித்து அதனை மறித்துச் சோதித்தனர். அதிலிருந்து 65 பொதிகள் மீட்கப்பட்டன. அந்தப் பொதிகளில் 151 கிலோ 600 கிராம் கஞ்சா காணப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர். படகில் இருந்த இருவர் கைது செய்யப்பட்டனர். கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் காங்கசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைதான இருவரும் இன்று நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (உ-21,26)

## எதிர்வரும்...

தீபாவளி தினமாக அமையவுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகச் செயலாளரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான வை.தவநாதன்.

நேற்று அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது

2013ஆம் ஆண்டு வடக்குக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் பதவியை எப்படியாவது கைப்பற்றித் தமது சுயலாபங்களை மேற்கொள்வதற்காக ஒரு கூட்டாக இணைந்து வடக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

மக்களுக்கான எந்தத் தேவைகள் தொடர்பாகவும் கடந்த 5 ஆண்டுகளில் அவர்களால் எதையும் முன்னெடுக்க முடியவில்லை. இந்தக் காலகட்டத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் தமது சுயநலன்களையும், தமது கௌரவத்தையும் நிலைநிறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். அதனால் வடக்கின் ஒட்டுமொத்த அபிவிருத்தியும் முடக்கப்பட்டது.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் வரையில் அதாவது 2015ஆம் ஆண்டு வரையில் வடக்கில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனக்கிருந்த அமைச்சரவை அதிகாரத்தைக் கொண்டு பல பணிகளை மேற்கொண்டிருந்தார். அதனால் 2015ஆம் ஆண்டுவரை வடக்கு மாகண சபையின் ஆளுமைத்தன்மையின்மை வெளிப்படுவது குறைவாக இருந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வடக்கு மாகாண அமைச்சரவைக்குள் மோசடிகள் மலிந்து காணப்பட்டன. தத்தமது கௌரவங்களுக்காக முதலமைச்சர், அமைச்சர்கள் நீதிமன்றம்வரை ஏறி இறங்கினார்கள். ஆனால் ஒரு தடவை கூட மக்களுக்கான தேவை ஒன்றுக்காக அவர்கள் நீதிமன்றம் ஏறவில்லை.

ஒரு மாகாண சபை முழுமை பெற்று மக்களுக்கானதாக இயங்க வேண்டுமானால் குறைந்தது 300 நியதிச் சட்டங்களாவது இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வடக்கு மாகாண சபையின் தனிநபர்களின் கௌரவப் பிரச்சினைகள் காரணமாக அது நடைபெறவில்லை. பல வேலைத் திட்டங்கள் முடக்கப்பட்டன. மக்கள் அபிருவிருத்தியை இழக்க நேரிட்டது. இன்று அதை மக்கள் முழுமையாக உணர்ந்துள்ளனர்.

ஆளுமையற்றவர்களின் ஆளுகைக்குள் கடந்த 5 ஆண்டுகளாக அகப்பட்டுத் தத்தளித்த தமிழ் மக்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி விடுதலை கிடைக்கவுள்ளது - என்றுள்ளது. (ற-8)

## ரவி...

தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

பிணை முறி ஆணைக்குழுவின் முன்னிலையில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பொய்ச் சாட்சியமளித்தார் என்று தெரிவித்து இரகசியப்பொலிஸாரால் கொழும்பு நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த நிலையில் அவர் நீதிமன்றுக்குச் சமூகமளிக்கவில்லை.

அதையடுத்து வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக பதில் நீதிவான் பிரிந்த லியனகே உத்தரவிட்டார். (ற-21)

## வீடு...

இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் மற்றொருவருக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் நேற்று விதித்தது யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம்.

2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் செப்பல் வீதியிலுள்ள வீட்டுக்குச் சென்ற ஒருவர், தாகமாகவுள்ளதாகத் தெரிவித்து குடிக்கத் தண்ணீர் கேட்டுள்ளார். அவருக்கு அந்த வீட்டின் உரிமையாளரால் குடிதண்ணீர் வழங்கப்பட்டது. அதனைக் குடித்துவிட்டு போத்தல் ஒன்று தருமாறு அவர் கேட்டுள்ளார். வீட்டின் உரிமையாளர் போத்தல் ஒன்றை வழங்கியுள்ளார். அந்தப் போத்தலாலேயே வீட்டின் உரிமையாளரையும் அவரது மனைவியையும் தாக்கிய கொள்ளையர், நகை மற்றும் பணத்தை அபகரித்துக்கொண்டு தப்பினார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்தனர். அவர்களால் நகைக் கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் கொள்ளையிடப்பட்ட நகைகளையும் மீட்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சந்தேகநபர்களுக்கு எதிராகக் கொள்ளை மற்றும் இருவரைத் தாக்கியமை உள்பட நான்கு பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். அதனடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

முதலாவது சந்தேகநபரை நான்கு குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்று, அவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அத்துடன், இரண்டாவது சந்தேகநபரை முதலாவது சந்தேகநபருக்கு உதவிய குற்றத்துக்காக 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனையை மன்று வழங்கியது.

அத்துடன் இரண்டு குற்றவாளிகளும் தலா 4 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டும் எனவும் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்கவும் நீதிமன்று உத்தரவிட்டது.

அத்துடன், சான்றுப்பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்ட நகைகளை உரிய நடைமுறைகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களின் கையளிக்க பதிவாளருக்கு நீதிமன்று கட்டளையிட்டது.

இதேவேளை, முதலாவது குற்றவாளிக்கு எதிராக கொலை மற்றும் கொள்ளை தொடர்பான மற்றொரு குற்றச்சாட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனைக்கோட்டைப் பகுதியில் மூதாட்டி ஒருவரைக் கொலை செய்து அவரது காதுகள் இரண்டையும் அறுத்தெடுத்து தோடுகளைக் கொள்ளையிட்ட சம்பவத்திலேயே அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-37)

## இந்திய...

மீனவர்கள் அறுவர் நேற்று இரவு நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த படகும் கைப்பற்றப்பட்டது.

தமிழ்நாடு நாகை பகுதியைச் சேர்ந்த 6 மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இழுவைமடிப் படகில் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடித்த சமயமே இவர்கள் அறுவரும் கைது செய்ப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். காரைநகர் கடற்படை முகாமில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இன்று காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்துக்கு அழைத்து வரப்பட்டு மருத்துவப் பரிசோதனையின் பின்னர் யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்திடம் கையளிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-21,105,26)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**அறிவித்தல்**

எதிர்வரும் 25.10.2018 (வியாழக்கிழமை) மற்றும் 26.10.2018 (வெள்ளிக்கிழமை) ஆகிய தினங்களில் மதியம் 01.00 மணிக்கு நடைபெற இருந்த ஆங்கில இலக்கியம் பாடத்திற்கான பரீட்சைகள் (EX.ENG.2.1, EX.ENG.2.2) தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.
இப் பாடங்களிற்கான மறுபரீட்சை நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
22.10.2018



# கனவு!

## காலப் புலனுணர்வுகளின் வெளிப்பாடு

பார்த்தீபன்

தூக்கத்திலிருந்து விழித்தெழும் போது கனாக்கள் மூளையின் நினைவுப் பகுதியில் உள்ள சேமிப்புக் கிடங்கில் தங்கியிருக்கும் எனவும், அவ்வாறு இல்லாது போனால் அவை மறக்கப்பட்டிருக்கும் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நினைவில் நிற்பனவாக இருந்தாலும் சரி அல்லது மறதி நிலைக்கு உட்படுவனவாக இருந்தாலும் சரி நாம் ஒவ்வோர் இரவிலும் கனவுகளைக் காண்பது என்பது மனதை நலமுடன் பேணிட உதவுமெனச் சில நிபுணர்கள் கூறுகிறார்கள்.

'நேரத்தைப் பற்றிய சோதனை' என்ற நூலில் 'ஜே. டபிள்யூ.ட்டுன்னே' என்ற நிபுணர் குறிப்பிடுகையில், "இரவில் கண்ட கனாக்களை ஒவ்வொரு நாள் காலையிலும் குறித்து வைத்தேன். சில வேளைகளில் எதிர்காலத்தில் நிகழ இருப்பவை பற்றிய முன்கூட்டிய அறிவிப்பாகவும் சில கனாக்கள் இருந்ததையும் கண்டு கொண்டேன்." - என்கிறார்.

மேலும்,நனவு நிலையில் விழித்திருக்கும்போது எங்களுடைய நிகழ்கால உணர்வுகளை மட்டும் அறிந்து கொள்ளக்கூடிய காலப்புலனுணர்வு செங்குத்து நிலையுடையதாக அமைந்திருக்கும்.அதேபோன்று தூக்க நிலையில் இறந்தகால,எதிர்கால உணர்வுகளின் வழியே பயணம் செய்யக்கூடியதாகக் காலப் புலனுணர்வுகள் படுக்கை நிலையுடையதாய் அமையும் என்ற கருத்துக்களையும் நிபுணர் 'ட்டுன்னே' சுட்டிக்காட்டியுள்ளார். நாம் பகல் வேளையில் தொழிற்பட்டு ரீதியில் செயல்நிலை பெற்றிருக்கும்போது பல்வேறு காரணங்களால் செயலுருவாக்கம் செய்ய முடியாமல் போன விடயங்கள் தூக்கநிலையின் போது கனாக்களாக உருவகம் பெறுகின்றன என்றும் ஏனைய நிபுணர்கள் ஆய்வடிப்படையில் கருத்துரைத்துள்ளனர்.

# தரவு துயில்!

## ஆழ்ந்த அறிநிலைக்குக் கொண்டுவரும் நிலை



ஒருவரின் மூளையைச் செயற்கையான ஆழ்ந்த அறிநிலைக்குக் கொண்டு வரும் கலை 'தரவு துயில்' எனப்படுகிறது. இந்தநிலையில் தரவு துயிலாழ்த்துவோன் குறித்த நபரை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். ஆழ்மனப்பரப்பை ஆய்வு செய்து நோயாளியின் அடி மனதில் புதைந்தும் மறைந்தும் கிடக்கும் கவலைகளையும்,அக அழுத்தங்களையும் விடுவிக்கும் ஒரு நெறிமுறையாகவே இது அமைந்துள்ளது.

தரவு துயில் நெறியின் வெற்றி என்பது நோயாளி தரவு துயிலாழ்த்துவோனிடம் கொண்டுள்ளதான நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில் அமைந்துகொள்ளும். நோயாளி இயல்பான நிலைக்கு வந்துவிட்டால் அவனுடைய மனம் எளிமையாகிக் குழந்தைத் தனமான நிலைக்கு மாற்றம் பெற்றுவிடுகிறது.

இளமையில் ஏற்பட்ட நிகழ்வுகளும், அவனை ஆழமாகத் தாக்கிய நிகழ்வுகளும் அவனது நினைவுக்கு அடிக்கடி வந்து காட்சியுறும். இந்தச் சூழ்நிலையில் துயிலாழ்த்துவோன் பயிற்சி பெற்ற மருத்துவனாக இருந்தால் அவனுடைய அச்சங்களைப் புரிந்து கொண்டு உதவிகளைச் செய்ய முடியும்.

வியன்னாவைச் சேர்ந்த 'பிரான்ஸ் மெஸ்மர்' என்பவரே முதலாவதாகத் 'தரவு துயில்' நெறியை மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய தரவு துயில் உத்தி 'ஆற்றல் வசியம்' எனக் கூறப்படுகிறது.



# சுவை!

## தனித்துவமுடைய கலங்களின் உணர்திறன்



ஒவ்வொரு சுவைக்கும் தனியான கலங்கள் உண்டு. அதாவது ஒரு கலம் ஒரு சுவையை மட்டும் அறியும். அதன் வேலை உணவில் உள்ள குறிப்பிட்ட சுவையை அறிந்து தகவலை மூளைக்கு அனுப்புவதே. ஒரு மொட்டு ஒரு சுவைக்கு என்பதும், குறிப்பிட்ட நாக்கின் பகுதி ஒரு சுவையை மட்டும் அறியும் என்பதும் தவறான கருத்து. நாக்கில் எல்லாப் பகுதியிலும் உள்ள எல்லா மொட்டுகளிலும் 25 வகையான சுவைகளை அறிந்து கொள்வதற்கான கலங்கள் உள்ளன.

சுவை உணரும் கலங்களின் மேற்புறத்தில் உள்ள சவ்வில் சுவையை அறிவதற்கான புரதங்கள் நிறைவாக உள்ளன. பாயாசத்தில் முந்திரிப்பருப்பு மிதப்பதுபோல சுவை அறியும் புரதங்கள் கலத்தின் வெளிச் சவ்வில் மிதந்தபடியுள்ளன. இந்தப் புரதங்களின் முப்பரிமாண வடிவம் ஒரு கிண்ணம் போன்றது. ஒரு சுவைக்கு ஒரு கிண்ணம் என்ற வகையில் 25 சுவைகளுக்கும் தனித்தனிக் கிண்ணங்கள் உள்ளன.

தேனை நாம் உட்கொள்ளும் போது குறிப்பிட்ட கிண்ணத்தின் பள்ளமான பகுதியில் சுவைக்குக் காரணமான மூலக்கூறு வந்து அமர்ந்துகொள்கிறது. சாடிக்கு ஏற்ற மூடி போல புரதமும் அதன் சுவை மூலக்கூறும் ஒன்றுடன் ஒன்று உடனடித் தன்மையோடு பொருந்திக்கொள்கின்றன. இதன் காரணமாக இவ்வகைக் கிண்ணங்களை 'ஏற்பி' என்கிறார்கள். பேராசிரியர் 'ஸ_க்கர்' நாக்கிலுள்ள சுவை ஏற்பிகள் அனைத்தையும் ஆராய்ந்து மனிதர்களுக்கு 25 வகைகளுக்கும் மேற்பட்ட ஏற்பிகள் இருப்பதை அறிந்துகொண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

அதனடிப்படையிலே, 'மனிதர்கள் எத்தனைவகை சுவைகளையும் அறிந்து கொள்ள முடியும்' என கருத்துரைத்துள்ளார். அவற்றையே நாம் தொகுத்துப் பார்க்கிறோம். ஆறு அல்லது ஐந்து சுவை வகைகளாகப் பிரித்துக்கொள்கிறோம். பிரித்தறிந்து உணர்ந்துகொள்ள முற்படுகிறோம். உண்மையில் அன்றாட வாழ்வில் தேன், திராட்சை, மாம்பழம், பலா, சப்போட்டா ஆகியவற்றை உண்ணும் போது அனைத்தும் இனிப்புச் சுவையைத் தருகின்ற போதும் அவற்றில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான சுவைத் தொனிப்பு இருப்பதை அவதானிக்கலாம்.

மிகப்பிரதானமாக 'ஸ_க்கர்' சுவை ஏற்பி மூலக்கூறுகளை கூர்ந்து கவனித்து ஆழமாக ஆராய்ந்தபோது ஒவ்வொரு கிண்ணப்பகுதியிலும் இரண்டு அறைகள் இருப்பதைப் கண்டுகொண்டுள்ளார். ஒரு அறை சுவைக்குக் காரணமான சக்கரை, உப்பு, அமிலம், கசப்பு, துவர்ப்புச் சுவைகளின் மூலக்கூறுகள் அமர்வதற்காகவும், அருகே உள்ள இன்னொரு சிறிய அறை சுவையில்லாத ஆயினும் சுவை உணர்வை பலமாகத் தூண்டிவிடக்கூடியதான இன்னொரு பொருளுக்காகவும் இருப்பதைக் கண்டறிந்துள்ளார்.

'அஜினோமோட்டோ' என்ற உப்பு தன்னளவில் சுவையற்றதாக இருந்தாலும் மாமிச உணவில் கலந்ததும் மாமிசத்தின் சுவை பன்மடங்கு கூடுவதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர்.

ஆக,இயற்கையில் சுவைகளைக் கூட்டுவதற்கென்றே பல பொருள்கள் எம்மிடையே இருக்கும்போலத் தோன்றுகிறது. இல்லாது போனால் ஏன் சுவை உணரும் ஏற்பிகளில் இரட்டை அறை அமைப்பு இருக்கவேண்டும் என்ற கேள்வி எழுகிறது.எழுவதாகவே பேராசிரியர் ஸ_க்கரும் கூறிக்கொள்கிறார்.மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் சுவை ஏற்பிகளின் இரண்டாம் அறையில் அமரக்கூடிய சுவைத்தூண்டிகள் எவை என்பதை அறிந்து கொள்ளலாம். சக்கரை முதலான பொருள்களின் சுவைகளை பலமடங்காக அதிகரிக்கச் செய்யலாம். மேலும் முயற்சித்தால் கசப்பின் வீச்சையும் கணிக்கலாம்.

# முல்லையில் உள்ள விடுதியின் அனுமதியை நிறுத்த தீர்மானம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது

முல்லைத்தீவு, ஒக்.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் விடுதி ஒன்றின் அனுமதியை இந்தமாதத்துடன் நிறுத்துமாறு நேற்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் குறித்த விடுதியில் மதுபான விற்பனையும் இடம்பெறுகின்றது. மதுவரிச் சட்டத்தின் 52ஆம் இலக்க எச்.எல் விதிகளை மீறியே இந்த அனுமதியைப் பெற்றுள்ளனர். எனவே இதனைத் தடை செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கோரினார். அவரது கோரிக்கை தொடர்பில் ஆராயப்பட்ட வேளையில் குறித்த சட்டத்தின் பிரகாரம் 500 மீற்றர் இடைவெளிக்குள் மதத்தலங்கள் மற்றும் பாடசாலைகள் எவையும் இருக்க முடியாது. ஆனால் இந்த மது விற்பனை நிலையத்தின் 500 மீற்றர் இடைவெளிக்கு உட்பட்ட பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 4 ஆலயங்களும் ஓர் பாடசாலையும் 1921ஆம் ஆண்டு முதல் உள்ள நிலையில் 2014ஆம் ஆண்டு எதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. என்பது தெரியவில்லை. என ரவிகரன் சுட்டிக்காட்டினர்.

அதன் அடிப்படையில். விடுதிக்கான அனுமதியை ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதியுடன் இரத்துச் செய்ய முடியும் என மதுவரித் திணைக்களம் , பிரதேச செயலாளர் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொண்ட நிலையில் ரவிகரனுடைய கோரிக்கை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான மூன்றாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் ஆகியோர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், கமலேஸ்வரன், புவனேஸவரன், மற்றும் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் பிரதேச செயலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (21,105,6)

# மன்னார் பொது நூலகத்தில் கட்டப்படும் அம்மாச்சி உணவகத்துக்கு கடும் எதிர்ப்பு

## நகரசபை அமர்வில் 8 உறுப்பினர்கள் வெளிநடப்பு

மன்னார், ஒக்.23

மன்னார் பொது நூலகப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் அம்மாச்சி உவகத்தின் கட்டுமானத்தை நிறுத்துமாறு கோரி மன்னார் நகர சபையில் நேற்று கடும் விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. விவாதங்களை அடுத்து நகர சபையின் 8 உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்திருந்தனர்.

மன்னார் நகர சபையின் 8 ஆவது அமர்வு நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகர முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. அமர்வில் பல விடயங்கள் பேசப்பட்டன. மன்னார் பொது நூலக வளாகத்தில் அம்மாச்சி உணவகம் அமைப்பது தொடர்பாக நகரசபை சபை உறுப்பினர் ஜோசப் தர்மன் கருத்துத் தெரிவித்தார். அவர் நகர சபை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படாது அம்மாச்சி உணவகக் கட்டடம் அமைக்கப்படுகிறது. எப்படி பொது நூலகத்தில் அம்மாச்சி உணவகம் அமைக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார். உறுப்பினர்களான எஸ்.ஆர்.குமரேஸ் மற்றும் செல்வக்குமரன் டிலான் ஆகியோரும் எழும்பி குறித்த அம்மாச்சி உணவகம் அமைப்பது தொடர்பில் கேள்வி எழுப்பினர். இதனால் சபையில் சிறிது நேரம் சல சலப்பு ஏற்பட்டது. பதில் வழங்கிய சபையின் முதல்வர் மன்னார் மாவட்டச் செயலரால் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. தற்போது அம்மாச்சி உணவகத்தை மன்னார் நகர சபையிடம் பாரப்படுத்தியுள்ளனர். அமைக்கப்பட்டு வருகின்ற அம்மாச்சி உணவகத்தை ஒரு வருடங்களுக்கு இயங்க விடுவோம். அப்போது பிரச்சனைகள் எதுவும் ஏற்படும் பட்சத்தில் மாற்று நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம் என்றார்.

மன்னார் நகர சபையில் 16 உறுப்பினர்கள் இருக்கின்றோம். அம்மாச்சி உணவகம் அமைப்பது தொடர்பில் அவசர கூட்டம் ஒன்றை கூட்டி இறுதி முடிவுகளை எடுத்திருக்க முடியும்.

அம்மாச்சி உணவகம் அமைக்கப்பட்ட இடம் மன்னார் பொது நூலகப்பகுதி. எனவே அங்கே கல்வித் துறை தொடர்பாக அபிவிருத்திகளை மேற்கொண்டிருக்கவே முடியும் என சபையில் உறுப்பினர் என்.நகுசீன் தெரிவித்தார்.

"அம்மாச்சி உணவகத்தில் காலை, மதியம், மாலை, இரவு என மக்கள் வருவார்கள். இதனால் நூலகத்தில் உள்ள வாசகர்களுக்கு ஏதோ ஒரு வகையில் இடையூறு ஏற்படும். இது ஒரு ஒட்டு மொத்த மக்களினுடைய பிரச்சினை. எனவே மன்னார் பொது நூலக பகுதியில் அமைக்கப்படாமல் வேறு ஒரு இடத்தில் அமைப்பது நல்லது. அம்மாச்சி உணவகத்தை மன்னார் நூலக பகுதியில் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நான் இச் சபையில் இருந்து வெளி நடப்பு செய்கின்றேன்" என உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்தார்.

அவருக்கு ஆதரவாக உறுப்பினர்களான ஜோசப் தர்மன், செல்வக்குமரன் டிலான், எஸ்.குலதுாங்க, என்.வடிவுக்கரசி, என்.நகுசீன், ஏ.எம்.யு.உவைசுல் ஹர்னி, எஸ்.டிலானி குரூஸ் ஆகிய 8 உறுப்பினர்களும் சபையில் இருந்து வெளி நடப்பு செய்தனர்.

எனினும் சபையை தொடர்ந்து நடத்த தலைவர்,உப தலைவர் உற்பட 8 உறுப்பினர்கள் மற்றும் நகர சபையின் செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பு காணப்பட்டமையினால் சபை தொடர்ந்து இயங்கியது. எனினும் மிஞ்சியிருந்த உறுப்பினர்களிடம் அம்மாச்சி உணவகத்துக்கு எதிரான கருத்துக்கள் நிலவின.

"மன்னார் பொது நூலக பகுதியில் அம்மாச்சி உணவகம் வருவதை நானும் விரும்பவில்ல்ல. நான் அடிக்கடி நூலகம் சென்று வருவது வழமை. ஆனால் உணவகம் அமைக்கப்பட்டால் அது பாதீப்பை ஏற்படத்தும்.எனவே அங்கே தற்போது கட்டடம் அமைக்கப்பட்டுவருகின்றது. அது அம்மாச்சி உணவகமாக மாறினால் நானும் அதற்கு 'எதிர்ப்புத் தெரிவிப்பேன்" என நகர சபையின் உப தலைவர் செபஸ்ரியான் யான்சன் தெரிவித்தார்.

"அம்மாச்சி உணவகம் அவ்விடத்திலேயே அமைக்கப்படும். அவர்கள் வெளி நடப்புச் செய்ததன் பின் நாங்கள் பின் வாங்கினோமானால் நாங்கள் தோற்றதுக்கு சமன். அதற்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை என்று தெரிவித்த நகர முதல்வர் அமர்வைத் தொடர்ந்தார். (21,56)

# கஞ்சா பீடி புகைத்த குற்றச்சாட்டில் நேற்று மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.23

கஞ்சா பீடி புகைத்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நந்தாவில் பகுதியில் வைத்து சிறப்பு அதிரடிப்படையினர் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கொக்குவில், மல்லாகம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (21,26,8)

## 1.5 கோடி...

இழப்பீடாக வழங்கவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். அதனைக் குற்றவாளியிடமிருந்து அறவிடுவதற்காக அவர் குற்றம்புரிந்த காலப்பகுதியிலிருந்து அவரது பெயரிலுள்ள அசையும், அசையா சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து. அவற்றை பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

அந்தச் சொத்துக்கள் வேறொருவருடைய பெயருக்கு மாற்றப்பட்டிருந்தாலும் அவற்றையும் பறிமுதல் செய்யவேண்டும். பகிரங்க ஏலத்தால் கிடைக்கும் பணம் போதாமல் போனால் மீதித் தொகையை குற்றவாளி செலுத்தவேண்டும் என்றும் தவறின் அதன் பெறுமதிக்கு ஏற்ற வகையில் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இழப்பீட்டுப் பணத்தை முழுமையாகச் செலுத்தாவிடின் அல்லது அதனை அறவிட முடியாதுவிடின் குற்றவாளி மேலும் 10 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் எனவும் தீர்ப்பிடப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் ஒரு கோடியே 72 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டமை உள்ளகக் கணக்காய்வில் கண்டறியப்பட்டது. அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்த அலுவலகத்தின் கணக்காளர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

நீதிவான் நீதிமன்றால் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. சுருக்கமுறையற்ற விசாரணைகளின் பின்னர் வழக்கு சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அரச நிதியைக் கையாடியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து திருகோணமலை மேல் நீதிமன்றில் எதிரிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படாமல் தலைமறைவாகியிருந்தார்.

இதனால் அவரைக் கைது செய்து திருகோணமலை மேல் நீதிமன்றில் முற்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. சந்தேகநபர் மேல் நீதிமன்றில் சரணடைந்தார்.

இந்த வழக்கை வழக்குத் தொடுனர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிஸ்டார் ஜெனரல் ரி.குமார்ரட்ணம் நெறிப்படுத்தியிருந்தார். (உ-37)

## விக்கியின்...

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம்19ஆம் திகதி நடத்தப்பட்டது. 1990ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி வடகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக வடகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டது. கிழக்கு மாகாண சபைக்கு 2008ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இரண்டாவது தேர்தலும் நடத்தப்பட்டது.

இருப்பினும் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தத்தையடுத்து வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் செல்லுபடியான வாக்குகளில் 84 சதவீதத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 14 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 சதவீதத்தைப் பெற்று 2 ஆசனங்களையும் கைப்பற்றின.

கிளிநொச்சி மாவட்டத்தில் செல்லுபடியான வாக்குகளில் 82 சதவீதத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 17 சதவீததைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியது.

மன்னார் மாவட்டத்தில் செல்லுபடியான வாக்குகளில் 62 சதவீதத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 28 சதவீததைப் பெற்று ஓர் ஆசனத்தையும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 9 சதவீத வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

வவுனியா மாவட்டத்தில் செல்லுபடியான வாக்குகளில் 66 சதவீதத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 27 சதவீதத்தைப் பெற்று 2 ஆசனங்களையும் கைப்பற்றின.

முல்லைத்தீவு மாவட்டத்தில் செல்லுபடியான வாக்குகளில் 79 சதவீதத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 சதவீதத்தைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

வடக்கு மாகாணம் முழுவதிலும் செல்லுபடியான வாக்குகளிலிருந்து 79 சதவீதத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நியமன ஆசனம் இரண்டு உள்ளடங்கலாக 30 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 18 சதவீத வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. மாகாணசபையின் முதலாவது கன்னி அமர்வு 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. அன்றிலிருந்து இன்று வரை, 134 அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. 19 நியதிச் சட்டங்கள், 437 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாகாணசபை உருவாக்கப்பட்டபோது நியமிக்கப்பட்ட 4 அமைச்சர்கள் 2017ஆம் ஆண்டு நீக்கப்பட்டு புதியவர்கள் 4 பேர் நியமிக்கப்பட்டனர். மாகாணசபை உருவாக்கப்பட்டபோது பதவியேற்ற 8 பேர் பல்வேறு காரணங்களால் பதவி விலகிப் புதியவர்கள் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டனர். (உ-5)

## சபை...

சிறப்பாகப் பாரம்பரிய முறைப்படி ஆட்டுக்கறிச் சாப்பாடு வழங்குவதற்குப் பேரவைச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

சபை அமர்வுகளின்போது பேரவைச் செயலகத்தினால், மதிய உணவு வழங்கப்படுவது வழமை. மீன்கறி மற்றும் கோழிச்சாப்பாடே இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 5 ஆண்டுகளில் இரண்டு தடவைகள் மட்டுமே ஆட்டுக்கறிச் சாப்பாடு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இன்று சபையின் இறுதி அமர்வு என்பதால் சிறப்பான சாப்பாட்டு ஒழுங்குகள் பேரவைச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய அமர்விற்கு உறுப்பினர்கள் பலரும் தங்களுடன் வெளிநபர்கள் இருவரை அழைத்து வருவதற்கான பதிவுகளையும் மேற்கொண்டுள்ளனர். இன்றைய அமர்விற்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபா மண்டபத்தில் சிறப்பு ஆசன ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (உ-5,7)

# இளந்தென்றல் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக். 23
சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டத்தின்15ஆவது நிமி டத்தில் இளந்தென்றல் அணியின் முதலாவதுகோலைப் பதிவுசெய்தார் வினோத்.

20ஆவது நிமிடத்தில் சுப்பர்றாங் அணியின் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் வசி. வேறெந்த மாற்றமும் ஏற்படாததை அடுத்து இரண்டு அணிகளும் 1:1 என்று சமநிலையில் இருந்த வேளையில் முதல் பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியின் 16ஆவது நிமிடத்தில் இளந்தென்றல் அணியின் சார்பாக மோகன் கோலொன்றைப் பதிவுசெய்ததை அடுத்து முடிவில் 2:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இளந்தென்றல் அணி. (ம-422)



## செல்சிற்றி அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 23
திருநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

திருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணி மோதியது.

2:1 என்ற கோல் கணக்கில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)




## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 23
இலங்கைப்பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் த பப்பரே வெற்றிக் கிண்ணத்துக்கான தொடரின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில்.இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கந்தானை டி மெசனெற் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது ஸ்கந்தா

யாழ்ப்பாணம், ஒக். 23
திருநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

திருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செந்தாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# யாழ்ப்பாணம் இந்து அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 23
இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாலந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. 62:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## மானிப்பாய் இந்து மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 23
கொழும்பு சாகிராக் கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கம் நடத்திய அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கந்தானை டி மெசெனற் பாடசாலை அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)






# பாடும்மீன் அணிக்கு இரண்டாவது இடம்!

யாழ்ப்பாணம், ஒக். 23
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில், குருநகர் பாடும்மீன் அணி இரண்டாம் இடத்தைத் தனதாக்கியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பேருவளை கிறேட்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் போது பேருவளை கிறேட்ஸ்ரரர் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் அடுத்தடுத்து இரண்டு கோல்கள் பதிவானது. பதிலுக்குப் பாடும்மீன் அணியால் கோலொன்று பதிவுசெய்யப்பட்டது.

எனினும் அதன் பின்னர் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் கிறேட் ஸ்ரார் அணி வெற்றி பெற்று கிண்ணம் வெற்றது. (ம-23)



## தேசிய மட்ட எறிபந்தாட்டத்தில்

# நெல்லியடி மத்தி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக். 23
இலங்கைப் பாடசாலைகள் எறிபந்தாட்டச் சங்கம் நடத்திய தேசியமட்ட எறிபந்தாட்டத் தொடரில் சி பிரிவு ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

அநுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து அநுராதபுரம் மைத்திரிபால சிறிசேன வித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 25:18, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

(ம-422)

## நெல்லியடி மத்திய கல்லூரி தேசியத்தில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக். 23
இலங்கைப் பாடசாலைகள் எறிபந்தாட்டச் சங்கம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட எறிபந்தாட்டத்தொடரில் பெண்களுக்கான சி பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது. அநுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வெல்லவாய மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 25:14, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422)

# தேசிய ரீதியிலான பளுதூக்கல் தொடரில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 23
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கலில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.


இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடர் றுகுணு பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி ஒரு தங்கப் பதக்கத்தையும் 4 வெள்ளி பதக்கங்களையும் 2 வெண்கலப் பதக்கங்களையும் கைப்பற்றி 19 புள்ளிகளைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

75 கிலோ எடைப் பிரிவில் ஆர். தஷாந்தினி 90 கிலோ பளுவை தூக்கி தங்கப் பதக்கத்தையும், 53 கிலோ எடைப் பிரிவில் எம். குமுதாஞ்சலி 71 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 58 கிலோ எடைப் பிரிவில் வி. அன்னலட்சுமி 77 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 63 கிலோ எடைப் பிரிவில் ஆர்.எம். பி.எம். சந்திரநாயக்க 72 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் 69 கிலோ எடைப் பிரிவில் ஜி. ரஜினா 88 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் 90 கிலோ எடைப் பிரிவில் எஸ். கவிதா 70 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 90 கிலோவுக்கு மேற்பட்ட எடைப் பிரிவில் ஜெ. கீர்த்திகா 72 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)





# மும்பையில் இணைந்தார் குயின்டன்



ஐ.பி.எல். தொடரின் அடுத்த பருவகாலத்துக்கான நகர்வுகள் தற்போதே ஆரம்பித்துள்ளன. பெங்களூர் அணி தனது வீரரான குயின்டன் டி ஹொக்கை மும்பைக்கு விற்றுள்ளது. அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடருக்கான நகர்வுகள் தற்போதே உச்சக்கட்ட பரபரப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஓர் அணியில் இருந்து இன்னோர் அணிக்கு நேரடிப் பேச்சின் அடிப்படையில் மாற்றப்பட்ட முதல் வீரராக குயின்டன் டி ஹொக் உள்ளார்.

2.8 கோடி ரூபாவுக்கு பெங்களூர் அணியால் கடந்த வருடம் ஏலத்தில் வாங்கப்பட்டார் குயின்டன். தற்போது அவரை அந்த அணி மும்பை இந்தியன்ஸ்க்கு விற்றுள்ளது. குயின்டன் ஓர் இலக்குக் காப்பாளர். மும்பையில் இலக்குக் காப்பாளர்களுக்குப் பஞ்சம் இல்லை என்ற போதிலும், ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்துவதற்காகவே குயின்டன் மும்பையால் சேர்க்கப்பட்டார். (ம)




# விடைபெறுகிறார் ரங்கன கேரத்

## காலியில் ஆரம்பித்த பயணம் காலியிலேயே முடிகிறது


இங்கிலாந்துக்கு எதிராக நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் இருந்து விடைபெறுகிறார் இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் ரங்கன கேரத்.

இங்கிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றுவதை உறுதிசெய்துள்ளது.

அடுத்ததாக எதிர்வரும் 27ஆம் திகதி ரி20 ஆட்டமொன்று நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இரண்டு அணிகளும் விளையாடுகின்றன. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் காலியில் நவெம்பர் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்த ஆட்டம்தான் இலங்கை அணிக்காக கேரத் விளையாடும் இறுதி ஆட்டமாக அமைந்துள் ளது. 40 வயதைக் கடந்துள்ள கேரத், இலங்கை அணியில் தற்போது விளையாடும் வீரர்களில் ஆகக் கூடிய அனுபவ முதிர்ச்சியுள்ள வீரராக உள்ளார். இதுவரை 92 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள கேரத் மொத்தமாக 430 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 5 இலக்குகளை 34 தடவைகளும், பத்து இலக்குகளை 9 தடவைகளும் கைப்பற்றியுள்ளார் கேரத்.

1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக காலி மைதானத்தில் தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் கேரத் விளையாடினார். சுமார் 19 வருடப் பயணத்தின் பின்னர் பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த காலியில் தனது பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கையை அவர் முடித்துக் கொள்கிறார். (ம)




# கோக்லி 60 சதங்கள்

இந்திய அணியின் தலைவரான விராட் கோக்லி பன்னாட்டுக் கிரிக்கெட் அரங்கில் தனது 60ஆவது சதத்தை நேற்றுமுன்தினம் நிறைவுசெய்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கோக்லி 140 ஓட்டங்களைக் குவித்தார். இந்தச் சதம் பன்னாட்டு அரங்கில் கோக்லியின் 60ஆவது சதமாகப் பதிவானது. குறைந்த இன்னிங்ஸில் 60 சதங்களைப் பதிவுசெய்ய வீரர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த சச்சினை கோக்லி பின்தள்ளினார். சச்சின் 426 இன்னிங்ஸ்களில் 60 சதங்களைப் பதிவுசெய்திருந்தார். தற்போது கோக்லி 386 இன்னிங்ஸில் 60 சதங்களைப் பதிவுசெய்து சச்சினின் சாதனையை முறியடித்தார். (ம)

# பயிற்சியாளராக கேரத்?



இலங்கை கிரிக்கெட் சபையின் பயிற்சியாளர் கல்விப் பிரிவால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் நிலை பயிற்சிக் கல்வியில் இலங்கையணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன கேரத் பங்கேற்றுள்ள நிலையில், அவர் எதிர்காலத்தில் பயிற்சியாளராவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்திலுள்ள இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் திறன் நிலையத்தால் நடத்தப்பட்ட ஆறு நாள்கள் கொண்ட குறித்த பயிற்சியில் கேரத் தவிர, அஜந்த மென்டிஸ், நுவான் குலசேகர, தம்மிக பிரசாத், வீரக்கொடி உள்ளிட்ட 20 பேர் பங்கேற்கின்றனர்.

குறித்த பயிற்சிநெறியானது இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் திறன் நிலையத்தின் பிரபலமான பயிற்சியாளர்களான அவிஷ்க குணவர்தன, பியால் விஜேதுங்க, ஹெஷான் டி மெல், உபுல் சந்தன, ரவீந்திர புஷ்பகுமார, சாமில, கமகே, லங்கா டி சில்வா, சுமித்ர வர்ணகுலசூரிய, தாரக சமரதுங்க, தர்ஷன வீரசிங்க, டில்ஷான் பொன்சேகா ஆகியோராலும் உடற்கூற்று நிபுணர் ரஞ்சித் நாணயக்காரவாலும் நடத்தப்பட்டது. (ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் சில நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றது.

செல்வராஜா -அருணன்
V2 TRAVELS
0768226243

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
இலஞ்ச புலனாய்வு உத்தியோகத்தர்
புதன் (24/10)
காலை 9.00 → 4.00 மணி
அதிபர் சேவை தரம் III
செவ்வாய், வியாழன்
பி.ப. 5.00 → 6.30 மணி
தொடர்புகளுக்கு,
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 03.11.18 சனி 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி.
0762 669 614
ஆரம்பம் :05.11.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

# இன்றாவது வெற்றிபெறுமா இலங்கை?

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

நான்கு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இங்கிலாந்து அணி 3:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இந்த நிலையில் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறுகிறது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.